"MATHAR MARUMANAM,"

# மாதர் மறுமணம்




மலர் 3. இதழ் 1.

வெகுதானிய ஆவணி.

Annas 2. 10 Cts.

# "மாதர் மறுமணம்"
## விற்பனை ஏஜெண்டுகள்.

1. இந்தியன் நாஷனல் நியூஸ் மார்ட், 89 சர்ச் ஸ்ட்ரீட் ஸ்லேவ் அயலண்ட், கொழும்பு.

2. நியூஸ் மார்ட் சப் ஏஜெண்ட், 8, 9 வார்ட் ஸ்ட்ரீட், கண்டி.

3. நவீன கதா புத்தகசாலை, மங்கமாரி வீதி, ரங்கூன்.

4. மு. முகம்மதலி, 208-A சிலிகி ரோடு, சிங்கப்பூர்.

---

## "மாதர் மறுமணம்" சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருஷ சந்தா இந்தியா, சிலோன் முதலிய உள்நாட்டுக்கு | ... | ரூ. | 1—0—0 |
| பர்மா, மலாயா, சைகோன், தென்னாபிரிக்கா முதலிய வெளிநாட்டுக்கு | ... | ரூ. | 1—8—0 |
| தனிப்பிரதி | ... ... | ரூ. | 0—1—6 |

வி. பி. மூலம் அனுப்ப இயலாது. முன்பணமாகவே செலுத்த வேண்டும். வெளிநாட்டிலுள்ளவர்கள் 2 ஷல்லிங் 6 பென்ஸ் அனுப்ப வேண்டும்.

விலாச மாறுதலுக்கு சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கடிதமெழுதவும். மாதிரிப்பிரதி வேண்டுவோர் 1½ அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

காரியதரிசி,

**மாதர் மறுமண சகாய சங்கம், காரைக்குடி.**

## விஸ்வநாத்
## "சிரோலேபன்"

இந்தப் பொடியானது எவ்வித தலைவலிகளை யும் உடனே நிறுத்தும். ஜலதோஷம், சள்ளைக் கடுப்பு, ஜுரம், இவற்றிற்கு கைக்ண்ட மருந்து. சின்னப் பிள்ளைகளுக்கும் தலையில் போடலாம். உடனே கேட்கும்.

பாக்கெட் விலை ரூ. 0—1—0

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

**வைத்தியர், ஆர். வி. விஸ்வநாதய்யர்,**

**மகாலெக்ஷிமி கம்பெனி, நாகநாதபுரம், காரைக்குடி.**

## ஸ்ரீ மகாலெக்ஷிமி கம்பெனி
## காசியாத்திரா ஸ்பெஷல் ரயில்,
### நாகநாதபுரம், காரைக்குடி.

எங்கள் கம்பெனி ஷ்பெஷலானது வருஷத்திற்கு மூன்று தடவை வட இந்தியா புறப்படுகிறது. ஆடி அமாவாஸைக்கும், அற்பிசி தீபாவளிக்கும் கெங்கா சாகரத்திற்கும், மார்கழி மாதத்திலும் புறப்படும்.

ரொம்பவும் சௌகர்யமாய் யாத்திரை செய்யலாம்.

கம்பெனிக்கு எழுதிக் கேழ்க்கவும்.

**ஆர். வி. விஸ்வநாதய்யர்,**

**மானேஜர்.**




# ஏன் இந்தப் பொருமை?

பத்மாவின் முக வசீகரத்தைக்கண்டு பல பெண்மணிகளும் பொருமைப்படுகிருர்கள். இவர்களும் பத்மாவைப் போன்ற அழகை ஏன் பெறக் கூடாது? அவள் தினந்தோறும் ஏ. ஆர். அன் சன்ஸ், **'ஜோனே கிரீம்'** உபயோகிக்கிருள். ஆகவே நீங்களும் அதே 'ஜோனேவை' உபயோகித்து அவளைக் காட்டிலும் சிறந்த அழகு, முகவசீகரம் இவற்றைப் பெறுங்கள். விலையும் எட்டு அணுக்கள் தான். உங்களூர் மருந்து ஷாப்களிலும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :—


**ஏ. ஆர். அன் சன்ஸ், பள்ளத்தூர்,**

(ராமநாதபுரம் ஜில்லா.)

# பக்ஷ் அண் கோ:,

**Fox. Kohinoor Agency. Fez.**

**கல்லுக்கட்டி வடகரை, காரைக்குடி.**



எங்களிடம் பான்சி மிதியடிகள், பூட்ஸ்கள், சாண்டல்கள், ஆக்ரா, கான்பூர், செமன் ஹிட்லர், ஜஸ்டிஸ், டேவிட், அரேபியன், ஆலம்கீர், பர்மா, துனியா, பாட்டா, கான்வஸ் ஷூஸ், லேடி பூட்ஸ்களும், லேடி சாண்டல், லேடி சாக்ஸ் முதலியவைகளும், அமெரிக்கன் பாட்டர்ன் ஷூஸ்களும் எப்பொழுதும் விலை சகாயமாய்க் கிடைக்கும்.

ஆர்டருக்கு குறித்த நேரத்தில் தயார் செய்து கொடுக்கப்படும்.



ராஜா ராம்மோஹன் ராய்.

பிறப்பு 1772. பிரிவு 1833.

# உள்ளுறை


என்ன வேண்டும்? (பாட்டு) ஸ்ரீமதி ஆர். எஸ். ராஜலக்ஷ்மி 1

பெரியோர்களின் வாழ்த்துரைகள் .... 2

காலத்தின் மாறுதல்—சுவாமி சுத்தானந்த பாரதியார் .... 6

கட்டிக்கரும்பும் லட்டு மிட்டாயும்

—வித்வான் அரு. சோமசுந்திரம் செட்டியார் .... 13

பெண்மக்கள் துயரம்—ஸ்ரீமதி தூனிசந்த் எம். எல். ஏ. (லாகூர்) 17

ஸ்திரீகளும் தேசசேவையும்—ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் 34

சுப்புவின் தியாகம் ஸ்ரீ இ. மாயாண்டி பாரதி .... 37

சட்டசபையில் பெண்மணிகள்—பீகம் அயிஸாஸ் ரஸூல் .... 43

சுந்தரியின் பரிதாபம்—ஸி. எஸ். ஆர். .... 46

மறுமணத்தின் அவசியம்—ஸ்ரீ. எம். சின்னையா செட்டியார் 57

சமூகக் கண்ணாடி—ஸ்ரீமதி நீலாவதி ராமசுப்பிரமணியம் .... 60

மாதர் மறுமண சகாய சங்க அறிக்கை .... 71

பத்திராதிபர் குறிப்புகள் .... 83

நிகழ்ச்சிகள் .... 86

## ஆடிமீ' அதிர்ஷ்ட நிர். 41576.

ஷை நம்பரையுடைய பத்திரிகைக்காரர் வெகு தானிய புரட்டாசி 15-வுக்குள் ஷை பத்திரிகையை, நமது காரியாலயத்துக்கு அனுப்பினுல் பரிசுத் தொகை ரூ. 10 அவர்கட்கு அனுப்பப் படும்.


## குமரன் புத்தகசாலை.

---

வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது.

| | |
|---|---|
| மனம்போல வாழ்வு | 0-8-0 |
| திருக்குறள் (அறத்துப்பால்) | 1-0 0 |
| மெய்யறம் | 0-8.0 |
| சாந்திக்கு மார்க்கம் | 0-8-0 |
| அகமே புறம் | 0-8-0 |
| மெய்யறிவு | 0-8-0 |

வ. வே. சு. ஐயர் எழுதியது.

| | |
|---|---|
| சந்திரகுப்த சரித்திரம் | 0-6-9 |

மகேசகுமார சர்மா எழுதியது.

| | |
|---|---|
| வால்மீகி விஜயம் | 0-12-0 |

இதர புத்தகங்கள்

| | |
|---|---|
| ஞான வாசிட்ட மூலமும் உரையும் 2 பாகமும் | 6-0-0 |
| பங்கஜம் அல்லது பார்ப் பனக்கொடுமை (சீர்திருத்தக்கதை) | 0-4-0 |
| மநுநீதி மர்மம் | 0-2-0 |
| தாசிகள் மோச வலை (நாவல்) | 1-4-0 |
| நந்தனர் கீர்த்தனை | 0-4-0 |
| தோத்திரக்கோவை | 0-6-0 |
| சிதம்பர ரகசியம் | 0-8-0 |
| உப்பள முற்றுகை | 0-4-0 |
| பக்தியோகம் | 0-8-0 |

---

**மானேஜர், 'குமரன்' ஆபீஸ், காரைக்குடி.**

# மாதர் மறுமணம்.

பத்திராதிபர்:— மு. மரகதவல்லி.

| மலர் 3 | காரைக்குடி<br>வெகுதானிய-ஆவணிமீ | இதழ் 1 |
|---|---|---|

## என்ன வேண்டும்?

புதுவை R. S. ராஜலக்ஷ்மி.

(சிவபெருமான் கிருபை வேண்டும்—என்ற மெட்டு)

பல்லவி.

விதவை துயர் ஒழிய வேண்டும்—அவர்
விடுதலை பெறவேண்டும் வேறென்ன வேண்டும்?

அநுபல்லவி.

இதமா யுலகினிலே என்றும் மறுமணங்கள்
எங்கும் நடக்கவேண்டும் வேறென்ன வேண்டும்? (வி)

தொகையறு.

பால்ய மண மொழிந்து வளர் பருவ காலத்திலே
பகர் மண முடிக்க வேண்டும்
வாலைப் பருவத்தில் வாழ்நாளை வீணாக்காமல்
வன்மையுடன் வாழ வேண்டும்

அநுபல்லவி எடுப்பு.

ஆற்றொணுத்துயருறும் அமங்கலைகளினுள்ளம்
ஆனந்தம் பெறவேண்டும் வேறென்ன வேண்டும்? (வி)

செய்துகொண்டு வாழ்நாளை இனிது நடத்த உதவிபுரியும் சங்கங்கள் மிக இன்றியமையாதவை. பாரததேசத்தில் இம்மாதிரி பிரசாரங்கள் ஜீவகாருண்ய இயக்கமாகக் கருதப்பட்டுப் பூரண ஆதரவைப் பெறவேண்டும். காரைக்குடி "மகளிர் இல்ல"ம் மிக வெற்றிகரமாக முன்னேற வேண்டுமென்று மனதார வாழ்த்துகிறேன்.

★ ★ ★

சென்னை அரசாங்க சுகாதார மந்திரி கனம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் M.R.C.S., L.R.C.P. (Lond) அவர்கள்:—



டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்

தங்களுடைய கடிதம் கிடைத்தது. தங்கள் இயக்கத்திற்கும், தங்கள் மாதப் பத்திரிகையின் லக்ஷியத்திற்கும் என் பூரண அநுதாபத்தைத் தெரிவிக்கிறேன். தங்கள் பத்திரிகைக்கு இரண்டாண்டு பூர்த்தியாகி மூன்றும் ஆண்டு துவக்கமாகிறதென்று கேட்க சந்தோஷம். தங்கள் பத்திரிகைக்கு சகல வெற்றியும் உரித்தாகுக. விதவைகளின் முன்னேற்றவிஷயத்தில் தாங்கள் படும்பாடு வருங்காலத்தில் பலனளிக்குமென்று நம்புகிறேன்,

சென்னை அரசாங்க விவசாய மந்திரி கனம் வி. ஐ. முனிசாமிப் பிள்ளை அவர்கள்:—

மரகதவல்லி யம்மையார் "மாதர் மறுமணம்" பத்திரிகையின் விசேஷ இதழ் வெளியிடுவதற்கு சந்தோஷிக்கிறேன். அவர்களும் அவர் தம் துணைவரும் விதவைச் சகோதரிகளின் முன்னேற்றத்திற்கு ஆற்றிவரும் தொண்டு மிகப்பல. "மகளிர் இல்லம்" ஒன்றை அமராவதிபுதூரில் ஆரம்பித்து தங்கள் ஆயுட்காலத்தை அதன் சேவைக்கே அர்ப்பணம் செய்கின்றனர். இச்சேவையைப் பலரும், அதிலும் விசேஷமாக நகரத்தார் சமூகத்தாரும் நன்கு வரவேற்பரென்று நம்புகிறேன். இந்த இல்லத்திற்கு வேண்டிய உதவி புரிதலே நமது விதவைச் சகோதரிகளுக்கு நாம் செய்யக்கூடிய பெரிய உதவியாகும். இந்த சந்தர்ப்பத்திற்கேற்ப பொது ஜனங்கள் உதவியளிக்க முன் வருவரென்று மிகுதியும் நம்புகிறேன். தென்னிந்திய மக்களுக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று காண்பித்துக் கொடுக்க "மாதர் மறுமணம்" பத்திரிகை சிறந்த வழிகாட்டியாகவுள்ளது. இப்பத்திரிகை எல்லா மேம்பாடும் அடைய விரும்புகிறேன்.




கனம். வி. ஐ. முனிசாமிப் பிள்ளை

---

# காலத்தின் மாறுதல்

(சுவாமி சுத்தானந்த பாரதியார்)

15-வது நூற்றுண்டுக் கதை கேளுங்கள்: புதுக்கோட்டைக் கருகே யுள்ள கலசமங்கலத்தில் சேவந்தெழுந்த பல்லவராயர் என்பவர் ஆட்சி புரிந்தார். இந்தப் பல்லவராயர் பெரிய போர்வீரர்; குடிகளைத் தன் வசப்படுத்தி அன்பினுல் ஆளுவதிலும் திறமை பெற்றவர். இவர் பெயரால் சேவந்தெழுந்தமங்கலம் என்றும் ஒரு ஊர் விளங்குகிறது. இவர் ஆட்சியில் இந்த ஊர்களில் ஒன்று நம்புகுழி. அது தனவணிகர் நிறைந்த ஊர். காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து தனவணிகர் இங்குக் குடியேறினர். அக்காலத் தனவணிகர் சோழமன்னனுக்கு முடிசூட்டும் பெருமை பெற்றிருந்தனர். திருமாவளவன் காலத்திலிருந்து தனவணிகர் அரசனுல் நன்கு மதிக்கப் பெற்று நாட்டின் செல்வத்திருக்கரங்களாகச் சீரோங்கினர். ஒரு சோழ மன்னன், ஒரு தனவணிகப் பெண்ணை இச்சித்தானும். தமது பெண்ணினத்தின் கற்பைக் காக்க அத்தனைத் தனவணிகரும் பூம்புகாரை விட்டுப் பாண்டியநாட்டிற் குடியேறினராம்.



சுவாமி சுத்தானந்த பாரதியார்.

நம்புகுழி வணிகர் தமது பெண்களை அந்தப்புரத்தில் வைத்திருந்தனர். அவர்கள் வேறு ஆடவர் முகத்தையே காண முடியாது. வீட்டைவிட்டு வெளியே எட்டிப்பார்க்க முடியாது. அவர்களுக்கு வேண்டிய பால் தயிர் சாமான்களை இடையர் கொண்டு

வருவர். பிறகு எருமுட்டை முதலிய சாமான்களை வலையர் கொண்டுவந்து கொடுப்பர். பணிப்பெண்கள் வீட்டுவேலை செய்வர். ஒரே யொரு நாசுகன், தச்சன், கொல்லன், வண்ணன் கிராம சமுதாயத்தார் சம்மதம்பெற்று ஊருக்குள் நுழையலாம். மற்றபடி வேற்றுட்கள் வரமுடியாது. தனவணிகர் கடைகள் முதலியன எல்லாம் ஊர் எல்லையைத் தாண்டியே யிருக்கும். தமது பெண்களின் கற்பைக்காக்க எவ்வளவு காவல் செய்தனர் அக்கால மாந்தர் பார்த்தீர்களா?

இக் காவல்களுக்கெல்லாம் உட்பட்டுப் பெண்கள் இல்லறத்தில் வாழ்ந்து வந்தனர். எனினும் மனம் ஒன்றிருக்கிறதல்லவா? ஒருநாள் இப்பெண்கள் செவந்தெழுந்த பல்லவராயரைப் பார்க்க விரும்பினர். பல்லவராயர் நம்புகுழி வழியாகவே வேட்டைக்குச் செல்வர். அப்படிச் செல்லும்போது ஒருநாள் பெண்மணிகள் முருங்கை மரத்தின்மேலேறிப் பல்லவராயரைப் பார்த்துத் தீர்த்தனர். தமது சேவகர்மூலம் இதையறிந்த பல்லவராயர் பெண்களைப் பார்க்காமல் தலையைக்குனிந்து சென்றுவிட்டார். இக் காட்சிகளைக் கண்ட ஒரு பணிப்பெண் தனவணிகரிடம் அதை அதிசயமாகச் சொன்னாள்.

பற்றியது சினம், ஆண்களுக்கு! "ஆ எங்கள் மானம் போயிற்றே! நீங்கள் ஆண்பிள்ளையை எட்டிப்பார்த்ததால் நமது மரபிற்கே சிறுமை வந்துவிட்டதே" என்று கூச்சலிட்டனர். "அப்படியொன்றுமில்லை; மரத்திலேறி பணிப்பெண்களே சமையலுக்கு முருங்கைத் தழை பறித்தனர்" என்றெல்லாம் சமாதானம் சொன்னார்கள் பெண்கள். கணவன்மார் கேட்கவில்லை. அந்த ஊரையே காலி செய்து காசி ராமேசுவரம் சென்று விட்டார்கள். இக்கதை புதுக்கோட்டை வரலாறு 70-ம் பக்கத்தில் உள்ளது. இஸ்லாமியர் படையெடுப்பால் ஊர் கலைந்தது என்பாரும் உண்டு.

## II

இக்கதை எதற்காகச் சொன்னேனென்றால் அக்காலத்திற்கும் இக்காலத்திற்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டவே. எண்ணங்களின் சுயேச்சை நாளுக்கு நாள் விரிவாகி வருகிறது. ஆணும் பெண்ணும் ஏற்றத் தாழ்வின்றி மானிடத்தின் சரிநிகர்

சமானமான இரண்டு பங்குகள் என்னும் உண்மை புலப்படுகிறது. இரண்டு கண்களும் எப்படிச்சமமோ அப்படியே மானிடத்தின் இருகூறுகளான ஆணும் பெண்ணும் சமம் என்னும் உண்மை பரவி வருகிறது. சாத்திரம் சொல்லுகிறது, சமயம் சொல்லுகிறது, அந்தப் பெரியார் சொல்லுகிறார், இந்தச்சாமி சொல்லுது என்ற காலமெல்லாம் போயிற்று. "எனது மனச்சாட்சி என்ன சொல்லுகிறது? பொதுநல உணர்ச்சி என்ன சொல்லுகிறது? காலசக்தி யென்ன சொல்லுகிறாள்?" என்று அறிந்து நடக்கும் காலம் வந்துவிட்டது. அவரவர் மனச்சாட்சியே அவரவர் உள்ளப் பான்மையே அவரவருக்கு அறநூலாகும் காலம் இது. மனிதன் அறிவும் எண்ணங்களும் விரிவெய்தி வருகின்றன. இக்காலம் மனித சக்தியைக்கொண்டு இயற்கையை வெல்லுங்காலம். கண்ணுக்கு மெய்யாகக் கண்டதையே போற்றுங்காலம். ஆகாசத்தில் வெகு நுட்பமாக பூதக்கண்ணாடிக்குக்கூடப் புலப்படாமல் சுழலும் எலெக்ட்ரன், ப்ரோடன் போன்ற பரமாணுக்களைக் கொண்டு இக்கால மனிதரின் அறிவு ரேடியோ அற்புதங்களைச் செய்கிறது.

இந்த இருபதாவது நூற்றாண்டில் எந்த நாகரீக நாட்டிலும் சாதிமத வேறுபாடும், 'ஆண் உயர்வு பெண் தாழ்வு' என்ற எண்ணங்களும் இருக்கமுடியா. பெண்கள் தலைநிமிர்கின்றனர். தாமும் ஆண்களைப்போல அறிவாற்றல்களிற் சிறந்தவரென விளங்குகின்றனர். ஒருவருக்கொருவர் அடிமையாக வாழாமல், அன்புள்ள சுயேச்சையுடன் வாழ விரும்புகின்றனர். பெண்கள் காலிற் கட்டியிருந்த தளைகள் அறுந்தன. பெண்கள் இதுகாறும் மூலையிருளில் வடித்த கண்ணீர் துடைக்கப்படுகிறது. மீண்டும் பெண்விழிகள் மலர்விழிகளாகிச் சுதந்திர ஒளி வீசுகின்றன.

## III

சென்ற பத்தாண்டுகளாகப் பெண்ணினம் வியக்கத்தக்க முன்னேற்றம் அடைந்து வருகிறது. ஒரு அனுபவத்தைச் சொல்லுகிறேன்:—

சில ஆண்டுகளுக்கு முன்னே தீவிரமான சமுதாய சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்தேன். கிராமங்களில் பாட்டாலும்

சொற்பொழிவுகளாலும் புதிய உணர்ச்சிகளை எழுப்புவதுண்டு. ஆங்காங்கு வீடுகளில் நமது சமூக நிலைமையைப் பார்த்தறிந்து குறித்து வைப்பதுண்டு. சுமார் 2000 குடும்பங்களின் நிலைமையைப் பார்த்தபின்பு நமது பெண்கள் படும் சிறுமை எனது விழிகளை உறுத்தியது. நாட்டு விடுதலையைப் போலவே பெண் விடுதலை நமக்கு முதன்மையானது. சென்னை "சுயராஜ்யா" ஆசிரியராயிருக்கும் போதும், வாலிபர்களுடன் சமூகத்தொண்டு செய்வதுண்டு. சென்னையில் அப்போது பொதுநலத் தொண்டிற்கென்றே தம்மை அர்ப்பணித்த வீர வாலிபர் கூட்டம் உண்டு. அவர்களெல்லாம் நன்ருகப் படித்தவர்கள், நாலுந் தெரிந்தவர்கள். அஞ்சாநெஞ்சு படைத்தவர்கள். புதிய உணர்ச்சியுள்ளவர்கள். அக்காலந்தான் சட்டசபையில் பால்ய விவாகத்தடை மசோதா விவாதிக்கப்பெற்றது. பெண்களுக்குச் சம்மத வயதை உயர்த்தக் கிளர்ச்சி நடந்தது. அது சம்பந்தமாக நாங்கள் உடையவர் பிறந்த ஊராகிய ஸ்ரீ பெரும்புதூருக்குப் போனோம். அங்கே எங்களைத் தாராளமாக வரவேற்றவர் ஒரு கனவானே. அவ்வூர்ப் பெருமாள் கோயில் வெளி மண்டபத்தில் எங்கள் கூட்டம் நடந்தது. ஒரு பாட்டுப் பாடியதும் நான் பேசத்தொடங்கினேன். குழந்தை மணத்தீமைகள், கிழவர் மணத்தீமைகள், வரசுற்கதொல்லை, ஈடில்லாக் கலியாணத்தின் விளைவுகள், தள்ளிவைத்தலின் கொடுமை, கைம்பெண் கண்ணீர், வேசை விடுதிகள்வந்த காரணம், சமூகக் கொடுமையாற் பெண்கள்படும் துயரம், ஆண் பெண் சமத்துவம் முதலிய பொருள்பற்றி ஒரு மணிநேரம் பேசி முடித்தேன். உடனே அங்கு கச்சை கட்டிக்கொண்டிருந்த வைதீகர் கிளம்பினர். ஆடிப் புளியமரம் மாதிரி சுலோகங்களை உதிர்த்தனர். "எட்டு வயதில் கன்னிகைக்கு கலியாணம் செய்யவேண்டும். அதற்குச் சாஸ்திரம் உள்ளது. ருதுமதி விவாகம் மகா பாபம். அவரவர் செய்த கர்மத்தால் விதவையாகிருர்கள். கர்மத்தை அனுபவிக்க வேண்டியதுதான். பிரம்மலபியை அழிக்கமுடியுமா?" என்று சண்டமாருதமாகக் கிளம்பினர். அவர்களுக்கு விடைகூற எங்களுடன் வந்த ஸ்ரீ ராமபத்திர சர்மா என்னும் பண்டிதர் எழுந்து பேசினுர். "ப்ருஷ்டப்பயல்கள், இவர்களைக் கோயில்முன்பு கூட்டம்போடச்

சொன்னது யார்?" என்றெல்லாம் பெரும்புயலாகக் கிளம்பினர் வைதீகர்.

பிறகு எங்களுடன்வந்த ஒரு பெண்மணி எழுந்து பேசினர். அப்பெண்மணி ஆங்கிலம், ஆரியம், தமிழ் மூன்றிலும் தக்க அறிவாளி. வீணை வாசிப்பதில் பெரும்புலமை வாய்ந்தவர். அவர் எழுந்து "சகோதரர்களே, சகோதரிகளே" என்றதும் மற்ருெரு சூருவளி கிளம்பிவிட்டது. "இங்கே யாரும் சகோதரிகள் இல்லை; (உண்மையாகவே பெண்கள் யாரும் அக்கூட்டத்திற்கு வரவில்லை) அம்மா நீ பெண்ணு லட்சணமாயிரு. ஆண்களுடன்வந்து முன்னே பிரசங்கம் செய்கிருயே. உன்னுலல்லவா கலி முற்றிப்போவது? திறக்காதே வாயை" என்று சினந்தனர். எங்களுடன்வந்த மற்ருெரு பெரியார் "அப்படிச் சொல்லாதேயுங்கள் ஐயா, பெண் பேசக்கூடாது என்று எந்த சாஸ்திரத்திற் சொல்லியிருக்கிறது? ஔவை, மயித்ரேயி, பாஞ்சாலி முதலிய பெண்களின் அறிவாற்றல்களைப்பற்றி நீங்கள் கேட்டதில்லையா? பெண்ணில்லாது நீங்கள் வந்துவிட்டீர்களா?" என்றெல்லாம் கூச்சலிட்டார். வைதீகர் சற்று அடங்கியதுபோ லிருந்தனர். முன்சொன்ன அம்மையார் பேசத்தொடங்கினர்:—"பெண்ணின் பெருமை நாட்டிற்கே பெருமை. பெண் சுதந்திரம் தேச சுதந்திரத்திற்கு முதன்மையாகும். வேத காலத்தில் பெண்கள் சுதந்திரராகவே வாழ்ந்தனர்..........."என்றதும், "பேசாதே, அம்மா, உட்கார். பெண்கள் வீட்டைவிட்டு இப்படி வெளியேறிப் பேசக் கூடாது. மடவார் மடப்பள்ளியுடன் நிற்கவேண்டும். பெற்ருேருக்கும், கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் அடங்கி நடக்க வேண்டியதே பெண்கள் கடமை. பதிவிரதா ஸ்திரீ கட்டை விரலைப் பார்த்தே நடக்கவேண்டும். நிமிர்ந்து தலைதூக்கி நடக்கக்கூடாது. 'தாலி கட்டிக்கொள்' என்ருல் பேசாமல் தலைகுனிய வேண்டும். கணவன் செத்துப்போனுல், 'தாலியை அறுத்தெறிந்து மொட்டை போட்டுக்கொள்' என்ருல் பேசாமல் நாசுகன் முன்னே உட்கார வேண்டும். உன்னைப்போல மேட்டிமையாக பெண்கள் பேசக் கூடாது. மகா வேதத்தைக் கண்டாற்போலப் பேசவந்து விட்டாய். போ திரும்ப" என்று இடியும் புயலுமாகக் கிளம்பி

கூட்டத்தைக் கலைத்தனர். பிறகு மற்றோரிடத்தில் கூட்டம் போட்டோம். அமைதியாக நடந்தது. 'நான் ஒரு பெண்ணாய்ப் பிறந்தால்............?'' என்று என்மனம் அப்போது குமுறியது.

## IV

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு மகா கனம் ஸ்ரீனிவாச சாஸ்திரியார் ருதுமதி விவாகத்தை வற்புறுத்தத் தமிழ்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தார். அவர் பிரசங்கங்களைக் கேட்டுள்ளேன். ஆங்கிலம் படித்தவர்களே பெரும்பாலும் அப்போது கூட்டத்திற்கு வந்து "என்ன அழகான ஆங்கிலம்" என்று மெச்சுவர். பெண்கள் அதிகமாக வரமாட்டார்கள். அக்காலம் ருதுமதி விவாகம் என்றால் அது ஒரு அவசியமான பிரச்னையென்றே பலருக்குத் தோன்றாமலிருந்தது. சென்னை மாதர் சங்கத்தைச் சேர்ந்த திருமதி பட்டவர்த்தனம்மாள், தேசபக்தையான ருக்மணி லக்ஷ்மீபதியம்மையார், கஸின்ஸ் அம்மையார், பெசண்டம்மையார் முதலியோர் சொற்பொழிவுகளாலும், முதன்மையாக டாக்டர் திருமதி முத்துலக்ஷ்மி யம்மையாரின் அரிய பணிகளாலும் தமிழ் நாட்டில் பெண்கள் விழித்தெழுந்தனர் என்னலாம். செட்டி நாட்டில் பெண்ணின் முன்னேற்றத்திற்கு முன்னின்றுழைப்பவரில் இருவரை யாரும் மறக்கமுடியாது. ஒருவர் முருகர் மற்றொருவர் அவர் வாழ்வுத் துணையாகப் பொலியும், மரகதம். இவ்விருவரும் சென்ற மூன்றாண்டுகளாகக் கைம்பெண் கண்ணீரை துடைக்கச் செய்துவரும் பணிகள் தமிழர் வரலாற்றில் இடம் பெறத்தக்கன. பெண்களுக்காகத் தாம் புரியும் பொதுநலப் பணியையே இவர்கள் வாழ்வாகவும், அதில் வரும் இன்பத்தையே சந்ததியாகவும் கொண்டிருக்கிறார்கள். தமது விலையுயர்ந்த நேரத்தையும், அழகான பங்களாவையும், கைப்பொருளையும் மாதர் மறுமண இயக்கத்திற்கு இவர் உதவியிருக்கின்றனர். வங்கத்திற் பிறந்த ராம்மோஹன் ராயின் ஆவேசம் இவர்களிடையே காண்கிறது. பொதுநல ஊழியத்தில் கணவனுடன் மனைவியும் பங்குகொண்டால் எவ்வளவு வெற்றியுடன் பணிநடக்கும் என்பது இவர் வாழ்வால் விளங்குகின்றது.

## V

இத்தகைய பொதுநல வீரர்கள் உதித்துள்ளதே நமது நாடு முன்னேறி உலகின்முன் தலைநிமிர்ந்து நிற்பதற்கு அடையாள மாகும். வருங்காலத்தில் பெண்மை பெருமைபெறும். ஆணும் பெண்ணும் சமுதாயத்தின் இரண்டு கண்கள் போல்வர். வேறு பாடுகள் ஒழியும், தக்க வயதும், உண்மையான, காதலும் மனப் பொருத்தமும் பார்த்தே திருமணங்கள் நடைபெறும். மனச் சாட்சியே அவரவர் சட்டமாகும். மனைவியிழந்த கணவனுக்கு உள்ள சுயேச்சை கணவனிழந்த மனைவிக்கும் இருக்கும். ஆண் பெண் சமத்துவம் இயல்பாகும். வீட்டுப்பணி நாட்டுப்பணி இரண்டிலும் இயல்பாகப் பெண்கள் ஆண்களுடன் பங்குகொள் வர். பெண்கல்வி பெருகும். சாஸ்திரத் துறைகளில் எல்லாம் பெண்கள் வெற்றிபெற்று விளங்குவர். ஆண்கள் வெளியேவந்து உலாவுவதைப் போலவே பெண்களும் தலைநிமிர்ந்து உலாவுவர். வேசை விடுதிகள் ஒழியும். நிறைமுறையான இல்லறத்தில் மனம் பொருந்திய சுயேச்சையுடன் சதிபதிகள் வாழ்வர். பெண்மை வணக்கத்திற்குரிய ஒரு சக்தியாக விளங்கும். அக்காலத்தை நோக்கியே நமது சமுதாயம் விரைந்து செல்லுகிறது. இப்போது அதற்கிருக்கும் எதிர்ப்புகளெல்லாம் காலத்தேரை முன்னே முட்டித் தள்ளுவதேபோலும். பெண்மை வாழ்க! பெண்மைக்கு வணக்கம்!

# கட்டிக் கரும்பும் லட்டு மிட்டாயும்.

(வித்வான் அரு. சோமசுந்தரம் செட்டியார்)

விதவைகளே! விழித்தெழுங்கள்!! விடுதலை! விடுதலை! உங்களுக்கு விடுதலை! விழித்தெழுங்கள்! விழித்தெழுங்கள்! வீண் கட்டுப்பாட்டை உதறித் தள்ளுங்கள்! ஒன்றுக்கும் அஞ்சாதீர்கள்! உண்மை கடைப்பிடித்து ஒழுகுங்கள்! பொய் வாழ்வை விடுத்து மெய்வாழ்வைப் பின்பற்றுங்கள்! துன்பவாழ்வை விடுத்து இன்ப வாழ்வைக் கைக்கொள்ளுங்கள்! அஞ்சி அஞ்சிச் சாதல் அழகன்று. அச்சத்தை துச்சமாக்குங்கள்? ஊருக்குப் பயந்து உயரிய உண்மை வாழ்வை—நேரிய வாழ்வைப் பாழாக்கக்கூடாது. ஆசை உயிரின் இனிய நோக்கம். அதை ஒருவரும் மறுக்க முடியாது. அதை அடைவதே உயிரின் இயல்பு. அதை அடைதல் அதர்மமன்று. விருப்பமுள்ளவர்கள், கணவன் இறந்தபின் முறையாக மறுமணஞ் செய்துகொண்டு நல்வாழ்வு வாழ்வது பொருத்தமுடையதேயாகும். ஆசையெலாந் துறந்த அதிவீர ரொழிய வேறு எவரும் இயற்கையோடிசைந்த இன்ப வாழ்க்கையை வெறுத்துத் தள்ளமுடியாது. விருப்பத்தை உள்ளடக்கி வெளியிலுள்ளவர்களுக்காகப் பயந்து பொய் வெட்கங்கொண்டு, வாழ்க்கையை வெறுப்பதாகப் பாவித்து மறை முகமாய் வாழ்வதிற் பயனில்லை. குழந்தை யில்லையென்று ஸ்வீகாரஞ் செய்து கொள்ளவேண்டாம். ஒரு நாயகனை மணஞ்



வித்வான் அரு. சோமசுந்தரம் செட்டியார்

செய்துகொண்டு நல்ல பிள்ளைகளைப் பெற்று நன்கு வாழலாம். ஆடை அணிகலன்களை யிழந்தோமென்று அழுது ஒப்பாரிவைத்துப் புலம்பித் தவிக்க வேண்டாம். எல்லா அழகுகளையும் நன்கு செய்து கொள்ளலாம். கணவனை இழந்தோம் கட்டுக் கழுத்தை யிழந்தோம் என்று கதறிப்பதற வேண்டாம். வேறு கணவனை நன்கு அடையலாம். கட்டுக் கழுத்தோடு கண்யமுடன் வாழலாம்.

மனைவியிறந்தவுடன் புருஷன் வேறு பெண்ணை மணந்து கொள்ள விதியிருக்கும் பொழுது புருஷன் இறந்தவுடன் மனைவிக்கு வேறு புருஷனை மணந்துகொள்ள ஏன் உரிமைகிடையாது? நன்கு சிந்தித்துப் பாருங்கள். இது ஆண்கள் பெண்களுக்கு இழைத்த அநீதியல்லவா? ஒரு கண்ணில் வெண்ணெய் ஒரு கண்ணில் சுண்ணாம்பா? பெண்ணுக்கு ஒரு நீதி ஆணுக்கு ஒரு நீதியா? இல்லை இல்லை. எல்லோருக்கும் நீதி ஒன்றே. மணம் விருப்பத்தைப் பொறுத்ததேயன்றி வீண் கட்டுப்பாட்டை, வெறும் வழக்கத்தைப் பொறுத்ததன்று.

இளம் வயது விதவைகளை எண்ணும்பொழுது உள்ளம் உருகுகிறது. விளையாட்டு மணத்தினால் விளைந்த இளவயது வைதவ்யம் கேலிக் கூத்தேயன்றி வேறு என்ன? பதினைந்து, பதினாறு வயதுப் பருவ மங்கை, தனது இளமை இன்பத்தை, அழகுச் செல்வத்தை, புனித வாழ்வை எப்படி மறந்து துறவு வாழ்க்கையை வாழ முடியும்? இது வெள்ளைக் காக்கை மல்லாக்கப் பறக்குங் கதையையே ஒக்கும்! பாடாத தேனீக்கள், உலவாத தென்றல், பசியாத நல்வயிறு பாரினில் உண்டா? இல்லை. இல்லை. எந்த வயது விதவையாயிருந்தாலும் விருப்பமிருந்தால் மணஞ்செய்துகொள்ள வேண்டியதுதான். விருப்ப மில்லாதவர்களை ஒருவரும் கட்டாயப்படுத்தவில்லை. கன்னியர்கூட விருப்பமில்லாவிட்டால் மணஞ்செய்துகொள்ளா திருக்கலாம். மணவிருப்ப மில்லாதவர்கள் கலை வாழ்க்கை வாழலாம். தொண்டு புரியலாம். எந்த வகையிலும் மணம் கட்டாயமானதும் கட்டுப்பாடுக் குட்பட்டதுமன்று. எல்லா விதவைகளுக்கும் ஏகோபித்துக் கட்டுப்பாட்டு மணம் வேண்டுமென்பது மில்லை. பணத்தை விரும்பும் விதவையர்க்கு மணம் கூடாதென்ற கட்டுப்பாடுமில்லை. ஆசையை யாரால் கட்டுப்படுத்த முடியும்? கட்டுப்படுத்தினும்

கட்டுப்பாட்டில் நிற்குமா? அடக்கினாலும் அடங்குமா? ஆசை மாயை, பகலில் வெள்ளையுடையி லிருப்பவர்களை இரவில் கலருடை யாக்குகிறதே! பொட்டிழந்து பூவிழந்து பொன்னிழந்து பொலிவி ழந்தவரைப் போது போனதும் பொலிவுறச் செய்கிறதே!

அநங்க வேளம்பு விதவையர்மேலுந்தான் சொரியப் பெறு கின்றது. அவனுக்கு அவ்வித்தியாசமில்லை. பெண்ணுயிர் என்ற ஒரே எண்ணந்தான் உண்டு. காதற்கனிகளான குழந்தைகள் கள் ளியிலும் முள்ளியிலும் ஆற்றிலும் சேற்றிலும் காட்டிலும் மேட் டிலும் ரோட்டிலும் காணப்பெறுகின்றனவே. இதெல்லாம் வைதவ்ய விரதத்தின் சிறப்பன்றோ? கரைகாணாக் காதலைக் கட் டுப்படுத்த முடியுமா? முடியவே முடியாது. முடியுமென்பது வெறும் பொய்யே. காதற் பயிரைத் தலைவெட்டிச் சாய்க்காது அதைக் கவினுற வளர விடவேண்டும். அதுவே அறிவுடைமை. காதலால் உலகம் தழைக்கும். விதவைகள் மணஞ் செய்துகொண் டால் உலகந் தலைகீழாகக் கவிழ்ந்து போகாது.

ஆசையுடையவர்கள் பொய் விரதம் பூண்பதாற் பயனென்னை? வீரமும் கற்புமுடைய பெண்கள் கட்டாயம் மறுமணத்தை விரும் பியே தீரல் வேண்டும். மறுமணம் நஞ்சன்று; வேம்பன்று. கசக் காது. அதுதான் கட்டிக்கரும்பும் லட்டும் மிட்டாயும். திருடித் தின்றால் பசியாறுமா? நேர்மையோடு உண்டாற்றான் நீளவும் உண் ணலாம் நிறைபசியும் தீரும். மறைமுகமாக வாழ வழியிருப்பதனாற் றான், நேர்முகமாக வாழ வழிகாட்டும் விதவா விவாகத்திற்கு முனைந்து வரும் பெண்கள் குறைவாயிருக்கின்றனர்.

சிலர் தங்களுக்கு மணஞ் செய்துகொள்ள இச்சையிருந்தா லும் பிற பேதையர் இகழ்ச்சிக்குப் பயந்து ஒதுங்கிப் பாயும் படுக் கையுமாய்க் கிடந்து கண்ணீர் பெருக்கிப் புண்ணீர்மையராகின்ற னர்.

கணவன் இறத்தல் என்பது கொடிய தண்டனையான ஒரு ஜன்மத் தீர்ப்பாய் வந்து விதவையரை வீட்டிற்குள் கூட்டிற் கிளி போற் சிறைப்படுத்தித் துன்புறுத்துகின்றது. விதவையரின் துய ரம் சகிக்கமுடியாததாகும்.

வைதவ்ய மென்பது ஹிந்து சமூகத்தின் பெரும் புண்களில் ஒன்றாகும். சமூக அழிவுக்குக் காரணமாகும். அழிகின்ற சமூகத்திற்கு ஆக்கந்தருவது மறுமணம் என்பது மிகையாகாது. மறுமணம் மாதர் தம் உரிமையை நிலைநாட்டுவது. மறுமணத்திற்கு ஆதரவு புரிவது பெருத்த ஜீவகாருண்யமாகும். மாதர் சமூகத்திற்குப் புரியும் மாபெரு நன்மையாகும். சமூக ஒழுக்கத்தைப் பாதுகாப்பதற்கு விதவா விவாகம் மிகவும் முக்கியமானதாகும். விதவா விவாகம் வேண்டாமென்று சொல்லுவோர் தாம் தாம் ஒரு விதவையாயிருந்தால் என்ன செய்வரென்பதை யோஜித்துப் பார்க்க வேண்டும். மூலையில் முக்காடிட்டுப் பதுங்கி முணுமுணுத்துக் கொண்டிருக்க முடியுமா? உலக இன்பத்தைத் துறக்கமுடியுமா? இளமை துறக்கமுடியுமா? காட்சிகளைக் காணாதிருக்க முடியுமா? என்பதை ஆராயவேண்டும். விதவையின் பரிதாபத்தை உணர வேண்டும். வைதவ்ய மென்பது ஒரு கொடிய முறையாகும். வாழ்வுப்பயிரை வேரோடு தூரோடு கல்லியரிக்கும் கறையானாகும். பெண் விடுதலையில் விதவையர் விமோசனமே முக்கியமானதாகும். மைந்தரைப் போல் மாதராரும் மணாளனிறந்தபின் மறுமணம் செய்துகொண்டு மகிழ்வுடன் வாழலாம். மைந்தரைப் பெற்று இன்புறலாம். பிள்ளைப் பஞ்சமடைந்து பீடையுற்றுப் பிள்ளைக் கூட்டுதற்கு அலையவேண்டாம். மறுமணத்தினால் மாநிலந்தழைக்கும். மாதர் மறுமணம் சிறக்க!

சிவகுருநாதன்,

செந்தமிழ் நிலயம்.

கும்பகோணம்.

# பெண்மக்கள் துயரம்

## ஸ்ரீமதி தூனி சந்த் எம்.எல்.ஏ., (லாகூர்)

1938ஞு மார்ச்சுமீ 25,26, 27உ களில் முல்தானில் நடந்த விதவா விவாக சம்மேளனத்தின் வெள்ளி விழாவில் தலைமைவகித்த ஸ்ரீமதி தூனி சந்த் எம். எல் ஏ. அவர்களால் படிக்கப்பெற்ற உபந்நியாசம்:—



ஸ்ரீமதி தூனி சந்த்.

நீங்கள் இந்த விதவா விவாக சம்மேளனத்தில் என்னைத் தலைமைவகிக்கும்படி செய்து கௌரவப் படுத்தியதற்காக, முதலில் என்னது இதயபூர்வமான வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நூற்றுக்கணக்கான விதவைகளின் துக்கமயமான வாழ்க்கையை என் கண்ணார நான் நேரே கண்டிருக்கின்றேன். ஏன்? ஏறக்குறைய இருபது ஆண்டுகளாக பெண்சமூகத்தின் நிலைமையை சீர்திருத்துவதற்காக நான் முயற்சி எடுத்துக்கொண்டு வந்திருக்கிறபடியால், அவர்களின் நிலைமையைத்தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்திருக்கிறது. இவ்வளவு நீண்ட கால அனுபவத்தினால் நான் கண்டறிந்த இந்து சமூகத்திலுள்ள குற்றங்குறைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்து சமூகத்தில் விதவைகளின் எண்ணிக்கை பெருகுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு:

(1) பால்ய விவாகம்.

(2) ஆசையின் வசப்பட்டு விருத்தர்கள் இளம் பெண்களை மணப்பது.

இந்த இரண்டு காரணங்களினால் தான் இன்று, தேசத்தின் நலம் நாடி உழைப்பவர்களின் இதயம் நடுங்கும்படிக்கும், உலகத்தின் முன்னிலையில் கௌரவத்தோடு தலைநிமிர்ந்து நிற்கமுடியாத படிக்கும் இந்தியால் விதவைகளின் எண்ணிக்கை பெருகி விட்டது.

ஜனசங்கியைக் கணக்கின்படி இந்தியாவில் விதவைகளின் எண்ணிக்கை கீழ் வருமாறு:—

| | | |
|---|---|---|
| ஒரு வயதிற்குட்பட்டவர்கள் | | 612 |
| ஐந்து | ,, | 2034 |
| பத்து | ,, | 97857 |
| பதினைந்து | ,, | 332517 |
| ஆக மொத்தம் | | 433020 |

மேலே சொல்லப்பட்ட விதவைகளின் எண்ணிக்கை பாலிய மணக் கொடுமையினால் ஏற்பட்ட பலனாகும். பதினைந்து வயதிற்கு மேற்பட்ட விதவைகளின் எண்ணிக்கை லட்சக்கணக்கிற்கு மேல் ஓடிப் போய்விட்டது. துக்கத்தில் ஆழ்ந்து, உதவியற்று, கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் விதவைகள் இல்லாதவீடே அநேகமாக இருக்காதென்று எனக்குத் தோன்றுகிறது. விதவா விவாகத்தைப்பற்றி உத்வேகமாக பேசுகின்றவர்களின் வீடுகளில் கூட, பாலிய விதவைகள் மிகத் துன்பத்தோடு வாழ்க்கை நடத்திவருவதை நாம் அடிக்கடி காண நேரிடுகிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். மனம், வாக்கு, செய்கை மூன்றும் ஒரே நிலையில் இருந்து வேலை செய்யாவிட்டால் எந்தக் காரியத்திலும் நாம் வெற்றிபெற முடியாது. எவ்வளவு முயற்சி செய்த போதிலும் இந்த ஒரு குறைப்பாட்டினால் நாம் வெற்றிகாண்பது அரிது. எந்த விதவையாவது மனவிருப்பத்தோடு, பிரமச்சரிய விரதம் அனுஷ்டிக்க விரும்பினால், நாம் அந்த தேவியைப்போற்ற வேண்டியது தான். ஆனால் எந்த விதவையாவது சமூகக் கொடுமைக்குப் பயந்து, வைதவ்வியத்தை அனுஷ்டிக்க விரும்பினால், அது இயற்கை விதிக்கு முரண்பட்டதாகும். இதனால் அநேக இந்து விதவைகள் துக்கமயமான வாழ்க்கை நடத்தி, கடைசியில் வாழ்க்கையினின்று நெறி தவறிவிடுவதோடு, தங்களுக்கும் தங்களின் குடும்பத்தார்களுக்கும் அவமரியாதை தேடிக்கொள்கிறார்கள். ஆகை

யால் சமூக நலன்கோரி ஏற்படுத்தப்பட்டிருக்கும் புனர் விவாகத்தை செய்து கொள்வதற்கு சங்கோசப் படுதல் கூடாது. மனைவி இறந்ததன் பிறகு, யாராவது ஒரு ஆண்மகன் அவசியமென்று கருதி மறுமுறை விவாகம் செய்துகொள்ள விரும்பினால், அவர்கள் விதவைகளைத் தான் திருமணம் செய்துகொள்ளலாம். என்று சட்டமியற்றுவதற்கு இந்து சமூகம் முயற்சிக்கவேண்டும் இதனால் விதவா விவாகப் பிரச்னை எளிதில் தீர்க்கப்பட்டு விடுவதோடு, தங்கள் பேத்திமார்களின் நிலைமையிலுள்ள இளம் பெண்களை மணம் செய்து கொள்ள தைரியத்தோடு அட்டூழியம் செய்யும் கிழவர்களையும் தடுத்துவிட முடிகிறது. பெண் சமூகம் இன்று இருக்கும் நிலைமையையும், அவர்கள் எவ்வளவு கஷ்டத்தோடு வாழ்க்கை நடத்த வேண்டியதிருக்கிறது என்பதையும் நான் இப்பொழுது சொல்வது அனுசிதமாகாதென்று எண்ணுகிறேன். இதனால், சமூகத்தையும் சட்டமுறையையும் எவ்வளவு தூரம் மாற்றியமைக்க வேண்டியதிருக்கிறது என்பது தங்களுக்கும் நன்கு புலப்பட்டு விடும்.

சிறிது கூர்ந்து கவனிப்போமானால் ஒரு சிறு பெண்குழந்தை இவ்வுலகத்தில் பிறக்கும் பொழுதே, தாய் என்ற பொறுப்பும் அதனுடன் கூடவே பிறந்து விடுகிறது என்பது தெரியவரும். அதனால் ஒரு பெண் குழந்தையை வளர்க்க ஆரம்பிக்கும் பொழுதே மரியாதையோடும் செம்மையாகவும் அன்போடும் வளர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது.

ஒரு பெண் பி. ஏ., எம். ஏ., பாஸ் பண்ணி இருந்தாலும் சரி அல்லது லேடி டாக்டராய் இருந்தபோதிலும் சரி, அல்லது ஹிந்தி சமஸ்கிருதத்தில் பெரிய பண்டிதையாய் இருந்தபோதிலும் சரி, அல்லது சாதாரண கல்வி கற்று குடும்ப பாரத்தை நிர்வகித்து நடத்திவந்த போதிலும் சரி, முதலில் ஒரு பெண்ணுக்கு சிறந்த தாயாக வருவதற்கு வேண்டிய கல்வி முறைகளைத்தான் நாம் போதிக்க வேண்டும். வெளிப்படையாகத் தெரிந்தாலும் அல்லது தெரியாவிட்டாலும் கடவுளால் முக்கியமாகப் பெண்களுக்கு இரண்டு விஷயங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பது தெரியவரும். ஒன்று தாய்மை. மற்றொன்று உண்மையான தன்னலமற்ற அன்பு. இவ்விரண்டு குணங்களையும் வளர்க்கக்

கூடிய முறையில் நாம் பெண்களுக்குக் கல்வி புகட்டிப் பழக்குவோமானல், பெண் சமூகமட்டும் சுகமாய் இருப்பதோடு மல்லாமல், இந்த பாரத தேசத்தையே ஒரு சொர்க்க பூமியாகச் செய்து விடலாம்.

இன்றைய நிலைமையைப் பார்த்து, எனக்கு மனு மகராஜ் எழுதிய ஸ்லோகம் ஒன்று ஞாபகம் வருகிறது: அதாவது: "பெண்களினல் செய்யப்படும் உயர்ந்த செய்கைகள் இல்லாத வீடு ஒரு பாலை வனத்திற்கு சமானம்" என்று. பெண்கள் நல்ல நிலைமையில் இல்லாதபடியால், தேசம் எவ்வளவு கேவலமான நிலைமையில் இருக்கிறதென்பதை நாம் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம். ஒழுங்கான முறையில் நடத்தப்படாதபடியால், இயற்கையாகப் பெண்களிடமுள்ள மென்மை கெட்டுப்போய், கடினமான குணங்கள் அபிவிருத்தியடைந்து விடுகின்றன.

குழந்தைகளுக்கு நல்ல முறையில் கல்வி போதித்து சமூகம் என்ற கட்டடத்தை அழகானதொரு நிலையில் கட்ட வேண்டிய காலத்தை, நாம் கட்டியழுதல்போன்ற அனுசாரமான பழக்க வழக்கங்களில் வீணே செலவழித்துக் கொண்டிருக்கிறோம். எவ்வளவு பிரயத்தனப்பட்டாலும் இந்த கெட்ட பழக்க வழக்கங்களை நம்மால் விலக்கமுடியவில்லை. ஒரு மனிதன் தன்னைத்தானே தாழ்ந்தவனென்றும், கீழானவன் என்றும் எண்ணிக்கொண்டிருப்பானேயானல், இயற்கையால் ஒவ்வொரு மனிதனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் சௌந்தரியத்தை மெல்ல மெல்ல அவன் இழந்து விடுகிறான். மேலும் வீழ்ச்சியடைந்திருக்கும் சமயத்தில் உள்ள பழக்க வழக்கங்களைமட்டுமே வாழ்க்கை சாரம் என்று மனிதன் எண்ணிக் கொண்டு விடுகிறான். இவ்வாறு இயற்கைக்கு மாறான வாழ்க்கை நடத்துகிறபடியால், இன்று உலகில் சுவர்க்கத்திற்கு சமமாய் மதிக்கப்பட்ட இல்வாழ்க்கை நரகத்தை ஒத்திருக்கிறது. காதலும் சேவையும் நிறைந்து இருக்கவேண்டிய இடத்தில் சண்டையும் சச்சரவும் நிறைந்திருக்கிறது. சத்தியத்தின் மேல் அசத்தியம் சவாரி செய்துகொண்டிருக்கிறது. அநேகம் பெரிய மஹான்கள் தோன்றி சத்தியம், அன்பு முதலியவற்றைப்பற்றிப் பெரிய பெரிய பிரசங்கங்கள் புரிகின்றனர். இவற்றினல் ஒன்றும் பிரயோசனப்

படாது என்பதை நாம் பிரத்தியக்ஷமாய் காண்கிறோம். வேரை வெட்டி விட்டு, மரத்தின் மேலும் இலைகளிலும் தண்ணீர் ஊற்றிக் கொண்டு வந்தால், மரம் எப்படி உருப்படியாகாதோ, அதேபோல் சமூகத்திற்கு ஜீவநாடியாய் உள்ள பெண்கள் சீர்திருத்தப்படாத வரையில், ஒரு சமூகமும் வளர்ச்சியடைய முடியாது. பிற தேசங்களில் செய்துவரும் முயற்சியைப் பார்த்து நான் ஆச்சரியப்படுவதுண்டு. அந்நிய நாடுகளில், எந்த வேலையையும் திறமையோடு செய்வதற்குப் பழக்கப்படுகிறார்கள். பாத்திரம் தேய்ப்பவள், ரொட்டி செய்பவள் முதலியவர்கள் தங்கள் வேலையை திறமையுடன் செய்வதற்கு, பயிற்சி பெறவேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது. இங்குகூட பயிற்சி (Training) பெறுவிட்டால் உபாத்திமை தொழில் செய்யக்கூடாதென்று சட்டமிருக்கிறது. இந்த சாதாரண விஷயங்களுக்கே பயிற்சி வேண்டியது அவசியமானால், மிக உயர்ந்ததும் கம்பீரமானதுமான இல்வாழ்க்கையை நடத்துவதற்கு, ஒரு பெண்ணுக்கு எவ்வளவு பயிற்சி வேண்டுமென்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். பெண்ணுக்குக் கொடுக்கும் பயிற்சிதான் ஒரு சமூக வளர்ச்சிக்கு வேர் போன்றதாகும்.

ஆரம்பப்படிப்பிற்குப் பிறகு, பெண்களுக்கு குடும்ப வாழ்க்கை, சுகாதாரம், குழந்தை வளர்ப்பு, சிறுவர்களுக்கு கல்வி புகட்டுதல் ஆகியவற்றை நல்ல முறையில் பயிற்சி கொடுத்தல் நலன்தரும். படிப்பின்மையால், பெண்கள் ஏராளமான துன்பங்களை சகித்துக் கொண்டு இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதற்கு மேல் வீட்டில் உள்ளவர்கள் செய்யும் கொடுமை நொந்த புண்ணில் கோல் கொண்டு குத்துவதுபோலிருக்கிறது.

இந்து குடும்பங்களில் உள்ள பெண்களுக்கு சொத்துரிமை இல்லாமல் இருப்பது பிறிதொரு ஆபத்தாகும். இதனால் பெண்கள் கேவலமான நிலைமையில் நடத்தப்படுகிறார்கள். ஏதாவது கிறிது கிடைக்கக்கூடியதாயிருந்தால், பல முறை கோர்ட்டுகளுக்குப் போய், அந்த உரிமையைப் பெறவேண்டியதிருக்கிறது. இத்தொந்தரவினால் பல பெண்கள் முயற்சி செய்யாமல் இருந்து விடுகிறார்கள். இதனால் பெண்கள் திக்குத் தெரியாது தவித்துக்கொண்டிருக்கின்றனர். எங்கும் அவர்களுக்கு இருள் மயமாயிருக்கிறது. இன்

னும் பெண்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதைப்பற்றி நான் வர்ணித்துக்கொண்டுபோக விரும்பவில்லை. தகப்பன், சகோதரன், கணவன் ஆகியவர்களின் சொத்தில், பெண்களுக்குப் பங்கு இருக்க வேண்டுமென்பது எனது விருப்பம். ஏதாவது ஆண் வார்சு இல்லாவிட்டால், பூரா சொத்து உரிமையும், சகோதரி, மகள், மனைவி ஆகியோருக்கு இருக்கவேண்டும். ஆண் வார்சு இல்லாத இடத்தில் சொத்துரிமையை உறவினனுக்குப் பிரித்துக் கொடுப்பது முற்றிலும் நியாயத்திற்கு விரோதமாகும்.

நமது துரதிர்ஷ்டம்பிடித்த நாட்டில் பயங்கரமான நோய் ஒன்று பரவிக்கொண்டு வருகிறது. அந்த நோயினால் பெண்களின் துக்கம் அதிகமாகிக்கொண்டு வருகிறது. யாதொரு காரணமுமில்லாமல் உயிரோடிருக்கும் தனது மனைவிமார்களைக் கைவிட்டு ஆண்கள் வேறு கல்யாணம் செய்துகொண்டு விடுகிறார்கள். வலையில் சிக்கிய பறவைபோல் பெண்கள் துடித்துக் கொண்டிருக்க வேண்டியதிருக்கிறது. இந்தக் கொடுமையை எந்தவிதமான சட்டத்தினாலும் மாற்ற முடியவில்லை. இவ்வித துன்பத்திற்குள்ளாகி, இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும் பெண்கள் இல்லாத கிராமம், பட்டணம் ஒன்றுமே யிருக்காதென்று எண்ணுகிறேன். இந்நிலைமையிலுள்ள எத்தனையோ பெண்களை நான் பார்த்திருக்கிறேன். ஒரு பெண்ணுக்கு 14 வயதிருக்கும்; அவளைக் கலியாணம் செய்துகொண்ட மூன்று மாதத்திற்குள் அவளுடைய கணவன் இன்னொரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு, அவளை வீட்டைவிட்டு அடித்துக் துரத்திவிட்டார். அவளுக்கு வயது 15 ஆகும்பொழுது, நான் அவளை சந்தித்து கலியாண சம்பந்தமான விஷயங்களைப்பற்றிக் கேட்டேன். "எனக்கும் என் மாமியாருக்கும் சாதாரணமான ஒரு விஷயத்தில் சிறிது மன வேற்றுமை ஏற்பட்ட படியால் என்னை வீட்டைவிட்டு விரட்டிவிட்டு, வேறு மணம் செய்துகொண்டார்கள்" என்று கண்ணீர் வடித்துக்கொண்டு சொன்னாள். எனக்குத் தெரிந்த இன்னொரு பெண்ணிருக்கிறாள். அவளுக்கு இரண்டு குழந்தைகளிருக்கின்றன. பூரண கர்ப்பத்தோடு அவள் தன் தாய் வீட்டுக்கு போயிருந்த சமயத்தில், அவளுடைய கணவன் வேறொரு மணம்

செய்து கொண்டுவிட்டார். அவர் இரண்டாந்தாரம் செய்து கொண்டதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று அவர் புதிதாய் மணம் செய்துகொண்ட பெண் முந்திய பெண்ணைக் காட்டிலும் அழகுள்ளவள். மற்றொன்று அவள் சீதனம்கொண்டு வந்தாள். இவ்விரண்டு காரணங்கள் தவிர வேறொன்றுமில்லை. இவ்விதமாக வாழ்க்கை பாழ்படுத்தப்பட்ட நூற்றுக்கணக்கான பெண்களை நீங்களும் கண்டிருப்பீர்கள். இன்னும் அதிகமாக வளர்த்துக் கொண்டுபோய் உங்களுடைய காலத்தை நான் வீணாக்க விரும்பவில்லை. ஒவ்வொரு ஆடவனும், பெண்ணும் தேச நலத்திற்குப் பாதகமாக விருக்கும் இக்கொடிய செயலை நீக்குவதற்கு முயற்சிசெய்ய வேண்டுமென்று சொல்வதோடு அது அவர்களுடைய கடமையுமாகுமென்றும் சொல்ல விரும்புகிறேன்.

முதல்தாரமிருந்தும் அப்பெண்ணுக்குக் குழந்தைகளிருந்தும் அவர்களை யெல்லாம் கைவிட்டுக் கலியாணம் செய்துகொள்ள விரும்பும் புருஷர்களை, படித்து நன்கு விபரந்தெரிந்த பெண்களும் கலியாணம் செய்துகொள்வதைக் காணும்பொழுது எனக்கு அளவில்லா வருத்த முண்டாகிறது. இவ்வாறு மணம்செய்து கொள்ளும் பெண்கள் தங்களையும் தங்களுடன் இருக்கும் புனிதமான கல்வியையும் கெடுத்துக்கொள்கிறார்கள்.

மேலே குறிப்பிட்டவர்களுக்கு இதைத்தவிர யான் வேறொன்றும் சொல்லமுடியாது. பிற பெண்களின் நன்மையை உத்தேசித்து படித்த பெண்கள் தங்களின் கடமையை நன்கு செய்ய வேண்டுமென்று நான் அவர்களை மன்றாடிக்கேட்டுக்கொள்கிறேன். தங்களின் கடமையை முற்றும் மறந்து சுகமாக வாழ்ந்து கொண்டு வருகிறவர்களுக்கும் தங்களின் கடமையைப் பரிபூர்ணமாக்குவதற்கு முயற்சிசெய்யாமலிருப்பவர்களுக்கும் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன்: படிப்பின் முக்கியநோக்கம், தான் பிறந்த நாட்டிற்கும், தனது சமூகத்திற்கும் நலம் செய்யும் பொருட்டேயாம்.

ஆகையால் அன்புள்ள சகோதரிகளே! இவ்விதமான விபத்துக்கு ஆளாகியிருக்கும் பெண்களோடு நீங்கள் எல்லோரும்

சேர்ந்து இந்த நோயை நம் நாட்டைவிட்டுத் துரத்தி அடிக்கும் படியாக உங்களைப் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்கிறேன்.

இதுவரையில் பெண்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைப் பற்றிச் சொல்லிவந்தேன். இப்பொழுது இன்னும் எத்தனை விதமான துன்பத்திற்கு ஆளாகிப் பெண்கள் வாழ்க்கை நடத்த வேண்டியதிருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

தங்கள் கணவன்மார்கள் இறந்து விடுவதனால் வரும் துக்கத்தைப்போல், பெண்களுக்குக் கொடியதும் பயங்கரமானதும், இவ்வுலகத்தில் யாதொன்றுமில்லை. கணவன் இறந்ததும் அவளுக்கு இந்த உலகம் இருள் மயமானதாக விருக்கிறது. அவளுடைய இனிமையான பேச்சும் பிரகாசம் பொருந்திய முகமும் கணவன் கூடவே சென்று விடுகின்றன. இந்த சமயத்தில் அவளுடைய துக்கத்தைக் குறைப்பதற்காக வீட்டில் உள்ளவர்கள் யாவரும் அவளை அன்போடும் வாஞ்சையோடும் நடத்தவேண்டும். அவள் கணவன் உயிரோடு இருந்த காலத்தில், அவள் செய்த காரியங்களினின்றும் அவள் விடுபட்டு இருக்கும்படி செய்யவேண்டும். அவள் மனது சாந்தியாய் இருப்பதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இவ்வசதிகள் இருந்தால்தான் அவள் இனிமேல் தன்னுடைய வாழ்க்கையின் லட்சியமென்ன என்று ஆர அமர யோசிக்கமுடியும். தனக்கும் பிறருக்கும் நலந்தரு முறையில் ஒவ்வொரு மனிதருக்கும் வாழ்ங்கையில் லட்சியம் இருக்க வேண்டியது மிக அவசியம். இதில்தான் உண்மையான ஆனந்தம் இருக்கிறது. சுக்கான் இல்லாத கப்பல் எப்படி கடலில் அங்கு மிங்கும் ஓடித்திரிந்து, கடைசியில் ஒரு பாறையில் மோதி உடைந்து மூழ்கிப் போய்விடுமோ அப்படியே லட்சியமில்லாத மனிதர்களின் வாழ்க்கையும் பிரயோசனமற்றதாய்விடும். ஆகையால் விதவைக்கும் வாழ்க்கையில் ஒரு லட்சியமிருக்க வேண்டியது அவசியம். இந்த லட்சியத்தை உணர்வதற்கு வீட்டில் போதிய அளவு சாந்தி நிலவி இருத்தல் நல்லது. அவ்விதமின்றி கணவன் இறந்ததும் வீட்டிற்கு அவள் சுமையாகிவிட்டாள் என்று எண்ணிக் கொண்டிருந்தால், அவளால் யாதொன்றும் செய்ய முடியாது. அவளால் மிகுந்த பிரயாசையோடு பரிபாலிக்கப்பட்டு

வந்த வந்தவீடு, அவளுக்கு இப்பொழுது வாழ்க்கையைக் கழிக்கும் ஒரு இடமாக மாறிவிடுகிறது. இதைத்தவிர அவளுக்கு அந்த வீட்டில் யாதொருவிதமான அதிகாரமுமில்லாமல் போய்விடுகிறது. மேலும் அவள் விலையில்லாத அடிமையாகி விடுவதோடு வீட்டில் உள்ளவர்கள் செய்யும் கொடுமைகள் யாவற்றையும் பொறுத்துக்கொள்ள வேண்டியதிருக்கிறது. அவள் இந்த நிலைமையில் நடத்தப்படுவதற்கு விதவை யென்பதைத் தவிர வேறு யாதொரு காரணமுமில்லை. தன்னுடைய உரிமையைப்பாதுகாத்துக் கொள்வதற்கோ, அல்லது தன்னை நடத்தப்பெறும் கொடுமையைப் பிறரிடம் சொல்வதற்கோ அவளுக்கு உரிமையில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். ஏனெனில் இவ்விதம் ஒரு விதவை செய்வது குடும்ப மானத்தைக் குலைத்துவிடுமென்று எண்ணுகின்றனர்.

இவ்வித காரணங்களினால் இந்த அபலைகள் பராதீனமாய் போய்விடுகிறார்கள். ஒவ்வொரு சிறிய விஷயத்திற்கும் பிறருடைய கையை எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. இச்சை இருந்த போதிலும், தனது வாழ்க்கையை அவளால் சீர்திருத்திக்கொள்ள முடியாமலிருக்கிறது.

கல்வி கற்கவும் கைத்தொழில் கற்றுக்கொள்ளவும் விருப்பமுள்ள அநேக இளம் பெண்களை எனக்குத் தெரியும். வீட்டிலுள்ளவர்கள் இளம் வயதுப் பெண் படிப்பது வெட்கமான செய்கை என்று சொல்லி அவர்களைத் தடுத்து விடுகின்றனர். ஏதாவது காரணம் சொல்லிப் பெண்களைப் படிப்பில்லாமல் செய்துவிட்டால் தங்களின் நோக்கம் போல் அவர்களை நடத்தலாம் என்ற விருப்பம் போலும். 15 வயதுடைய பெண்ணைப்பற்றி ஒரு சரித்திரம் சொன்னேன். மணம் செய்துகொண்ட $1\frac{1}{2}$ வருஷத்திற்குப் பிறகு அவளுடைய கணவன் இறந்து விட்டார். அவர் சர்க்காரில் வேலை பார்த்தவர். அவர் இறந்தபிறகு அவரால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த 2000 ரூபாய் அவளுக்குக் கிடைத்தது. அவள் எழுத்துவாசனையற்றவள். ஆகையால் வீட்டிலுள்ளவர்கள் பாங்கில் சமால் செய்து வைப்பதாகச் சொல்லி ஏமாற்றி அவளிடமிருந்த ரூபாய் 2000 த்தையும் கைப்பற்றிவிட்டனர். இந்த 2000 ரூபாயைத் தவிர அவளுக்கு யாதொரு விதமான ஆஸ்தியும் கிடையாது. இவ்வாறு

ஏமாற்றப்பட்டதை எண்ணி எண்ணி அவள் இரவும் பகலும் அழுது கொண்டிருந்தாள். விபரங்கள் தெரிந்ததும் நான் அவள் வீட்டிற்குப் போனேன். அவளுடைய வீட்டிலுள்ளவர்களை, அவளை நான் வைத்து நடத்தும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டேன். செலவுக்கு யாதொன்றும் தரவேண்டாமென்றும் சொன்னேன். அந்த சமயத்தில் எனது பள்ளிக்கூடத்தில் மூன்று விதவைகள் படித்துக் கொண்டிருந்தார்கள் என்பதையும் உதாரணமாக எடுத்துக் காட்டினேன். எவ்வளவு முயன்றும் வீட்டிலுள்ளவர்கள் இணங்க மறுத்துவிட்டார்கள். அவர்கள் குடும்பத்திலுள்ள பெண் வெளியில் சென்று படிப்பது, இதுவரை நடந்ததில்லையாம். இனிமேல் அவ்வாறு செய்தால் குடும்பமானம் குலைந்து போய்விடுமாம். படித்து, விதவை என்ற துக்கத்திலிருந்து ஒருவாறு விடுபட்டிருக்கலாம் என்று விரும்பிய பெண்ணிற்கு யாதொரு அனுமதியும் தராமல் அவளது குடும்பத்தார் தடுத்துவிட்டனர். அவள் கூண்டில் அடைபட்ட பறவைபோல் பரிதவித்துக் கொண்டிருக்கிறாள். இந்த நிலைமையைப் பார்த்து நான் மிகவும் வருத்தப்பட்டேன். விலைக்கு வாங்கிய அடிமையைப் போல் அந்தப்பெண்மேல் அவர்கள் அதிகாரம் செலுத்திவந்தனர். சகோதரர்களே! சகோதரிகளே! இது ஒருக்கால் முந்திய காலத்தில் நடந்ததாயிருக்குமென்று எண்ணலாம். அவ்வாறில்லை. சிறு சிறு நகரங்களிலும் கிராமங்களிலும் இன்றும் இவ்வாறு நடந்துவருவதை நீங்கள் காணலாம். இவற்றைப் பார்க்கும் போது இதயம் நடுங்குகிறது. வீழ்ச்சியடைந்த நிலைமையிலிருக்கும் பெண் சமூகத்திற்கு சகிப்புத் தன்மையும் பொறுமையும் அதிகமாக விருக்கும். இதனால் அநேக இளம் விதவைகள் கமலத்தைப் போல் பரிசுத்தமான வாழ்க்கை நடத்த விரும்பி தபஸினிகளா யிருக்கின்றனர். அவர்களுடைய மனிதத்தன்மையை உலகிலுள்ள எந்தவிதமான கெடுதல்களும் தீண்டமுடிய வில்லை. அப்படியானால் பத்திரிகைகளில் பத்தி பத்தியாய் நிறைய துர்ச்செய்திகள் வெளிவந்து கொண்டு இருக்கின்றனவே இதற்குக்காரணம் யாதென்று நீங்கள் கேட்கலாம். அந்தகாரத்தில் மூழ்கியிருக்கும் விதவைகளுக்கு, ஜோதியைப் போல் வழிகாட்டியாக ஒரு உதவி ஏற்பட்டால், அவர்கள் தங்கள் வாழ்க்கையை சாந்தத்தோடு கழிக்க சந்தர்ப்பம் வாய்க்கின்றது. எவர்க

ளுக்கு இவ்வாறு உதவிகள் கிடைக்காமல் போகின்றதோ, அவர்களுக்கு வாழ்க்கை ஒரு சுமையாய் அமிழ்த்திக் கொண்டு இருப்பதோடு, மனமும் கலவரம் அடைந்து விடுகிறது. ஆகவே சிறிது யோசனையின்றி கவலைப்பட்டு அநேக விதமான துன்பத்திற்கு ஆளாகி, முன்னைக்காட்டிலும் அதிகமாக அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கின்றனர். இதற்கு சவாப்தாரி சமூகமா அல்லது யாதாயிருக்கலாமென்று உங்கள் இதயத்தைக் கேட்டுப்பாருங்கள். ஒரு பெண் மண்ணெண்ணை ஊற்றி தன்னையே தீவைத்துத் தற்கொலை செய்து கொண்டாள் என்றும், இன்னொருத்தி கிணற்றில் விழுந்து இறந்துபோய் விட்டாள் என்றும், வேறொருத்திதனக்கு உயிருக்கு உயிராய் உள்ள குழந்தையைக் கிணற்றில் தூக்கி எறிந்துவிட்டாள் என்றும் நாம் அடிக்கடி பத்திரிகைகளில் படிக்கின்றோம். தகுந்த காலத்தில் இவர்களுக்கு உதவி கிடைத்திருந்தால், இவர்கள் நிச்சயமாக இவ்விதம் செய்திருக்க மாட்டார்கள் என்பது திண்ணம். இவைகள் ஏன் இவ்வாறு நடக்கின்றன? என்னென்ன உபாயங்கள் செய்தால் இவற்றைத் தடுத்து விடலாம் என்பதைப் பற்றி யோசிப்போம். ஆரிய சமாஜமும், இன்னும் பல சங்கங்களும் இவைகளை நீக்குவதற்காக வேலை செய்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஒழுங்கீனங்கள் அதிகமாக நிலவியிருக்கும் இடங்களில், இந்த சங்கங்களோடு பிற சங்கங்களும் சேர்ந்து வேலை செய்து வந்தால், அயோக்யமான செயல்களை அதிவிரைவில் துரத்தியடித்து விடலாம். ஏதாவது துன்பம் நேரிட்டால் இது மனிதனால் உண்டானதா அல்லது கடவுளால் ஏற்படுத்தப்பட்டதா என்பதை எளிதில் தெரிந்து கொண்டுவிடலாம். இயற்கையால் ஏற்படும் கஷ்டமாயிருந்தால், கடைசியில் அதனோடு ஒரு சுகமும் வெகுமதியும் கிடைக்கும்; ஆதலால் இயற்கையாகவே ஏற்படும் கஷ்டங்களை மனிதர்களால் எளிதில் பொறுத்துக் கொள்ளமுடிகிறது. மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட துன்பங்கள் கடைசியில் வெகுமதி ஒன்றும் தரமாட்டாவாகையால், அவற்றை மனிதர்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. உதாரணமாகப் பாருங்கள். தான் உயிரோடு இருக்கும்பொழுது தன்னை கைவிட்டுத் தனது கணவன் வேறொரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளும் பொழுது, அதை ஒரு பெண்ணால் சகித்துக் கொண்டிருக்க முடியாது. அவள்

மனது அமைதியை இழந்து விடுகிறது. எந்த இடமும் அவளுக்கு வெறுப்பாகத் தோன்றுகிறது. எந்த நிமிஷமும் அவளுடைய சிந்தையானது ஊசலாடிக் கொண்டிருக்கிறது. பிறரால் அவள் ஏன், எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிருள் என்பதை மதிப்பிட்டு சொல்லமுடியாது. ஏனெனில் ஒரு உண்மையான பெண் தன்னிடமுள்ள யாவற்றையும் தன் கணவனுக்கு அர்ப்பணம் செய்து விடுகிருள். அதற்குப் பதிலாக அவரிடமிருந்து எதிர்பார்ப்பது ஒன்றே ஒன்று தான். அதுதான் அவருடைய இதயபூர்வமான அன்பு. இந்த அன்பும் கிடைக்காவிட்டால், வாழ்க்கை தன் சக்தியை விட மீறியதாய் போய்விடுகிறது. என்ன செய்வது எங்கு போவது என்று அவளுக்கு ஒன்றும் விளங்குவதில்லை. கணவன்உறவினர் அனுமதியின்றி அவளிருப்பதற்குக்கூட இடம்கிடைக்காது. ஆனுல் இந்த தேசத்தில் ஒரு விசித்திரமான சட்டமுறைமையிருக்கிறது. கணவன் ஒரு பெண்ணை வீட்டைவிட்டுத் துரத்திவிடலாம். உண்பதற்கும் உடுப்பதற்கும் கொடுக்காமலிருக்கலாம். இவ்விதமாகக் கொடுமையாய்நடத்தியபோதிலும்கணவன்என்னும் அதிகாரம் அப்பெண்மேல் அவருக்கு எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கும். இவ்வாறு கணவனுல் விலக்கப்பட்டு, குழந்தை குட்டிகளோடு பரிதவித்துக் கொண்டிருக்கும் பெண்கள் அநேகரை நான் பார்த்திருக்கிறேன். அவர்கள் கணவன்மார்களைப் பார்த்து இரண்டு வருஷங்களுக்கு மேலிருக்கும். மிகுந்த கஷ்டத்தோடு வாழ்க்கை நடத்திக் கொண்டு வருகிருர்கள். ஏதாவது படித்து டிரெயினிங் பாஸ் செய்து, அதனுல் தங்களுக்கும் தங்கள்குழந்தைகளின் வயிற்றுக்கும் போதிய உணவு கிடைக்குமென்று எண்ணி Training School களில் சேர்ந்து கல்வி கற்கவிரும்பினுல் கணவன் கையெழுத்து இன்றி பள்ளிக்கூடங்களில் சேர்த்துக் கொள்ளமுடியாதென்று மறுத்து விடுகின்றனர் பள்ளிக்கூடத்துஅதிகாரிகள். அந்த அபலை எவ்வாறு தன் கணவனிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டுவர முடியும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். சர். கங்காராம் போன்ற கொடையாளிகளின் கிருபையினுல் பஞ்சாபில் விதவைப் பெண்களுக்கு ஒரு ஸ்கூல் நடந்துவருகிறது. இப்பள்ளிக் கூடம் அநேக விதவைகளை ரக்ஷித்து இருக்கிறது. அநேகரை இன்னும் ரக்ஷித்துக் கொண்டுவருகிறது. இங்கு கூட

கணவனால் விலக்கப்பட்ட பெண்களுக்குக் கதவு அடைக்கப்பட்டிருக்கிறது.

கணவனால் விலக்கப்பட்ட அபலைகளைக் காப்பாற்றுவதற்கு முயற்சிசெய்து ஏதாவது பணம் வசூலித்து ஸ்கூல்கள் நடத்தினால் சில மாதங்களுக்கு மேல் நடைபெறாமல் அவைகள் நின்றுபோய் விடுகின்றன. இவ்வாறு நூற்றுக்கணக்கில் பள்ளிக்கூடங்கள் அடைபட்டுப் போய்விட்டன. ஆயிரக்கணக்கான குழந்தைகளை ஈந்துவைக்கும் தாய்மார்கள் இவ்வாறு இரவும் பகலும் வருத்தத்தோடு வாழ்க்கை நடத்துவார்களேயானால், எந்த சமூகமாவது உன்னத நிலையை அடையமுடியுமா என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள்.

என்னென்ன உபாயங்களால் இந்த சிரமங்களை நாம் போக்கடித்துவிட முடியுமென்பதை நான் சொல்ல விரும்புகிறேன். அதற்குத் தகுதியற்றவள் என்பது எனக்குத்தெரியும். ஏதாவது குறைகள் என்னிடமிருக்குமானால் அவற்றை நீக்குவதற்குத் தகுதியுள்ள சகோதரிகளும் சகோதரர்களும் உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் நிச்சயமாக உதவி செய்வார்கள் என்ற எண்ணத்தோடுதான் நான் இவற்றைச் சொல்லவிரும்புகிறேன்:

தங்களுடைய குறைபாடுகளைக் கேட்பதற்கும், அவற்றைப் போக்குவதற்கு உதவிசெய்யவும் ஆண்களும்பெண்களும் கொண்ட ஒரு கமிட்டி இருக்கிறது என்று தெரிந்தால், உடனே மக்கள் தங்களின் துக்கத்தினின்றும் பாதிக்குமேல் விடுபட்டு விடுகிறார்கள். கலவரம் அடைந்த மனது தைரியப்பட்டுவிடுகிறது. ஆகையால் ஒவ்வொரு நகரங்களிலும் ஆண்களும் பெண்களும் நிறைந்த ஒரு கமிட்டி ஏற்படுத்துவது நல்லதென்றுஎனக்குத் தோன்றுகிறது. பெண் அங்கத்தினர்கள் கஷ்டப்படும் பெண்களின் நிலையையறிந்து அவற்றைக் கமிட்டிக்குத் தெரியப்படுத்தினால், பெண்ணின் நிலைமைக்கு ஏற்றவாறு கமிட்டியிலிருந்து உதவி செய்யலாம். படிக்க விரும்பினாலும் அல்லது கைத்தொழில்கள் கற்றுக்கொள்ள விரும்பினாலும் அதற்குத் தகுந்தவாறு கல்வி கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதனால் அவர்கள் ஓரளவு உணவிற்குக் கஷ்டப்படாம

விருக்க முடியும். வேறுவேலை யாதொன்றும் தெரியாமல் அதிக வயதுடையவர்களுக்கு சர்க்காவில் நூல் நூற்கவும், நெய்யவும், தையல்வேலை பழகிக் கொள்ளவும் ஏற்பாடுகள் செய்யலாம். கொடுமையான அட்டூழியங்கள் ஏதாவது அவர்களைச் சுற்றிக் கொண்டிருக்குமானால் அவர்களை அதனின்றும் காப்பாற்ற வேண்டும். என்னுடைய அனுபவத்திலிருந்து சங்கங்களெல்லாம் தனித்தனியாக வேலை செய்யாமல், ஒன்று சேர்ந்து வேலை செய்தால் சௌகரியமாய் இருக்குமென்று தோன்றுகிறது. கள்ளங் கபடற்ற முகத்தோடும், காட்டருவிபோல் ஊற்றும் கண்ணீரோடும் என்னை நோக்கி எனக்கு உதவிசெய்யுங்கள் என்று கேட்ட பெண்ணிற்கு என்னால் தனியாக உதவிசெய்ய முடியவில்லை. இதை என் வாழ்நாள் மட்டும் நான் மறக்கமுடியாது. இதோடுகூட இந்த கமிட்டிகள், பெண்கள் பிற்காலத்தில் இந்தவிதமான அபாயத்திற்கு ஆளாகாமல் இருப்பதற்கு வேண்டிய உபாயங்களைச் செய்ய முயற்சிக்கவேண்டும். சில படித்த பெண்கள் இது சம்பந்தமாய் சொல்லியுள்ள கருத்துக்களை தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒவ்வொரு மணமும் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டும் என்று படித்த பெண்கள் விரும்புகின்றனர். இதனால் மனைவி உயிரோடு இருக்கும்போது வேறு மணம் செய்துகொள்ள முடியாமல் போய்விடுகிறது. அனேக பெண்கள், யாதொரு விசேஷ காரணமுமின்றி ஆடவர்கள் மறுமுறை கலியாணம் செய்து கொள்ளக் கூடாது என்று சட்டமியற்ற வேண்டுமென்று விரும்புகின்றனர். விதவைகள் சம்பந்தமாக நான் முன்பு சொன்ன பொழுது, பெண்களுக்கு, தகப்பனார், சகோதரன், கணவன் முதலியவர்கள் சம்பாத்தியத்தில் உரிமையிருப்பது உசிதமென்று சொல்லியிருக்கின்றேன். விதவைகள் அதிகமகாமால் தடுப்பதற்கு கிழட்டு மணங்களையும் பாலிய விவாகங்களையும் தடுத்துவிட வேண்டும்.

இது சம்பந்தமாக சுவாமி தயானந்தர் அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஆகையால் ஒவ்வொரு இடங்களிலும் இதைப் பற்றி நன்கு பிரசாரம் செய்து, கமிட்டிகள் ஏற்படுத்தி உசிதமான காரியங்களைச் செய்ய முயற்சிக்க வேண்டும். எப்படியிருந்த

போதிலும் இந்த நோயை நாட்டை விட்டுத் துரத்தியடிப்பது நமது கடமையாகும். பல்வேறு இடங்களிலும் கூட்டங்கள் கூட்டி, தீர்மானங்கள் செய்து கவுன்சில் அசம்பிளி முதலியவற்றிற்கு அனுப்பிவைக்க வேண்டும். அங்குள்ள மெம்பர்கள் சட்டமாக்கி பாரதமாதாவிற்குச் சேவை புரிதல் வேண்டும். பிரசாரம் செய்தால், அநேகர் இக்கொடிய பாவத்தினின்றும் தப்பிக்கொள்வார்கள். இதுவே எனது விருப்பம். அவசியம் ஏற்பட்டால் ஒவ்வொரு இடங்களுக்கும்சென்று நான் பிரசாரம் செய்ய விரும்புகிறேன். கூடுமானவரையில் எங்கெங்கு கமிட்டிகள் ஏற்படுத்த முடிகிறதோ அங்கங்கெல்லாம் போக விரும்புகிறேன். பிரசாரத்தினுல்மட்டும் உண்மையான பலன் ஏற்பட்டு விடாதென்று கருதி, அதை காரியாம்சத்தில் கொணர எண்ணி, பெண்கள் மஹா சபையில், ஒவ்வொரு வருஷமும் இரண்டு முக்கியமான தீர்மானங்கள் செய்து அசம்பிளிக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று தீர்மானித்து இருக்கின்றனர். அந்த தீர்மானங்கள் சட்டசபையில் பாசாவதற்கு ஒவ்வொரு சங்கங்களும் சபைகளும் உதவிபுரிய வேண்டும். பெரிய காரியங்கள் பூர்த்தியாவதற்கு அதி முயற்சியும், இயக்கமும் அவசியமாகும். மிகப் பெரிய சபைகளாக உள்ளவைகள் மேற்படி தீர்மானங்களைத் தங்களின் வேலைத் திட்டங்களில் ஒன்ருக ஏற்றுக்கொண்டால் எளிய முறையில் காரியங்களை சாதித்துக்கொண்டு விடலாம். பரமார்த்திகத் தர்மத்தையும்பற்றிப் பிரசாரம் செய்து கொண்டு இருக்கும் சபைகள்கூட இந்த தீர்மானங்களை ஏற்றுக் கொள்ளலாம். அவ்விதம் செய்வதனுல், அச்சபைகள் தேசத்திற்கு ஒரு மகோன்னதமான சேவை செய்ததாகும்.

கடைசியாக இது ஒன்றை மட்டும் சொல்லவிரும்புகிறேன். பெண்களின் முன்னேற்றமின்றி தேசம் ஒருக்காலும் முன்னேற மடையாது. எனக்கு ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு தந்தை தனது ஆறுவயதுச் சிறுவனை அழைத்துக் கொண்டு, கற்றடங்கிய முனிவர் ஒருவரிடம் சென்ருர். என்னுடைய புதல்வனை சிறந்த அறிவாளியாகவும் சகலகுண சம்பன்னனுகவும் ஆக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதற்கு அந்த முனி மந்திர சக்தியாலா என்று கேட்டுவிட்டு பின்கண்ட

வாறு சொன்னார்: உனது புதல்வன் சிறந்தவனாக இருக்கவிரும்பியிருப்பீரேயானால், நீர் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னரே ஏற்பாடுகள் செய்திருக்க வேண்டும். ஒவ்வொரு குழந்தையும் ஒன்பது மாதம் தாயின் கர்ப்பத்திலிருக்கிறது. மேல்கொண்டு ஐந்து வருடம் அவள் மடிமேல் இருந்து விளையாடுகிறது. அப்பொழுது ஏற்படும் குணங்கள்தான் குழந்தையின் வாழ்க்கை முழுதும் நிலவியிருக்கிறது. ஆகையால் உமக்கு ஒப்புயர்வற்ற புத்திரன் வேண்டுமானால், முதலில் தாய்மார்களை நல்லநிலைமையில் கொண்டு வர விரும்பும். அப்பொழுதுதான் ராமன், கிருஷ்ணன், பீஷ்மர், அபிமன்யூ போன்ற குழந்தைகள் தாய்மார்களின் மடியின் மீதிருந்து விளையாட முடியும்.

இந்திய மாணவன் ஒருவனுக்கு ஜர்மன்தேசத்து பெண்மணி சொல்லியதைக் கேளுங்கள்: "உங்கள் தேசத்தில் பெண்கள் நிலைமை நன்றாயில்லை. ஆகையால்தான் நீங்கள் முப்பத்தைந்து கோடிமக்களும் அடிமைகளாயிருக்கிறீர்கள்".

தேசம், சமூகம் முதலியவற்றை ரக்ஷிப்பதற்காகப் பெண்கள் எவ்வளவு வீரமாக வேலை செய்திருக்கின்றனர் என்பதை நமது சரித்திரங்களில் பரக்கக்காணலாம். அபிமன்யூபோன்ற இளஞ் சிறுவர்கள்கூட வீரத்தோடு போர்புரிந்ததற்குக் காரணம் அவர்கள் தாய்மார்கள் அவர்களுக்குப் புகட்டிய உபதேசம்தான். தேசத்திற்கு நலன்செய்யும் பொருட்டும், தங்களின் கடமைகளை தவறாமல் செய்வதற்கும், பெண்கள் புருஷர்களை எவ்வளவுதூரம் உற்சாகமூட்டியிருக்கிறார்கள் என்பது தெரியவரும். எத்தனை பெண்கள் மான மரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக சிரித்த முகத்தோடு அக்கினிக்குள் இறங்கி இருக்கிறார்கள்? துர்காவதி, லீலாவதி, மனதாலசா, பத்மினிபோன்ற ஆயிரக் கணக்கான வீரமணிகள் பாரத தேசத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார்கள். பிராமணர்கள் தாங்கள்மாத்திரம் கல்வி கற்றுக் கொண்டு, பிறருக்குச் சொல்லிக்கொடுக்காமல், அவர்களை அடிமையாக வைத்துநடத்த எண்ணினார்கள். அதனால் பிராமணர்கள் தங்களுடைய மகிமையெல்லாம் இழந்துவிட்டு வெறுமனே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அதுபோல புருஷர்களும் பெண்களது

உரிமைகளைப் பிடுங்க எண்ணியபடியால், சாந்தியின்றி, சுகமின்றி வாழ்க்கை நடத்துகின்றனர். எவனொருவன் தான் சுகமாக வாழ்வதற்கு, பிறருடைய உரிமைகளைப் பிடுங்கிவிட்டு, அதிகாரம் செலுத்துகிறானோ, அவன் உலகத்தில் சுகமாக வாழமுடியாது. ஏனெனில் இது இயற்கை விதிக்கு முரண்பட்டதாகும். கடவுளால் ஏற்படுத்தப்பட்ட நியமத்தின்படி நடந்தால் மட்டுமே உண்மையான ஆனந்தமும், சுகமும் கிடைக்கும். அதற்கு விரோதமாக நடந்தால் கெடுதிமேல் கெடுதிதான் வந்துகொண்டிருக்கும்.

நீங்கள் சுகமாக இருக்க விரும்புவீர்களானால், பாரததேசம் முன்போல் கௌரவத்தோடு இருக்கவேண்டுமேயானால், முதலில் பெண்களை மரியாதையாக நடத்துங்கள். அவர்களுக்கு இயற்கையாயுள்ள உரிமைகளைக் கொடுத்துவிடுங்கள். இதில் தான் தேசத்தின் மங்களம் நிறைந்திருக்கிறது.

பெண்களின் மனநிலைமை சரிப்பட்டுவிடுமேயானால், தேசத்தில் ஒருவிதமான புத்துணர்ச்சி ஏற்படும். சிறந்த காரியங்கள், தியாகம், முதலியவற்றைச் செய்வதற்கு இயற்கையாகவே பெண்களுக்கு பக்திசிரத்தை விசுவாசமுண்டு. பெண்கள் சத்தியாக்கிரக சமயத்தில் செய்த தொண்டு, தியாகம் முதலியவற்றை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆகையால் தேசத்தின் ஒற்றுமையை உத்தேசித்து நீங்கள் வீழ்ச்சியடைந்திருக்கும் பெண்களைக் கைதூக்கிவிடுங்கள். மன நிலைமை சரியாய் இல்லாவிட்டால் பெண்களால் தங்களின் கடமைகளை சரிவரச்செய்யமுடியாது. பெண்களின் உதவியின்றி தேசத்தில் ஒற்றுமை ஏற்படுவது துர்லபம். ஆகையால் தேசத்தின் முன்னேற்றத்துக்காகப் பெண்களின் முன்னேற்றம் அவசியமாகிறது.

[ஹிந்தியிலிருந்து மொழி பெயர்த்தவர் ஆத்தங்குடி திரு. எஸ். நடராஜன்]



# ஸ்திரீகளும்-தேச சேவையும்

## கனம் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்

(ஐக்கிய மாகாண, ஸ்தல ஸ்தாபன இலாகா மந்திரி)

ஆதிகால முதல், மனுஷ்ய வர்க்கத்தின் சரித்திரத்தைக் கவனித்துப் பார்த்தால், அது ஸ்திரீகளின் ஒரே அடிமைச் சரிதமாகவே இருந்துவருவதைக் காணலாம். உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்திலும் பலமற்றவர்கள் பலவித கட்டுப்பாடுகளால் நிர்ப்பந்திக்கப்பட்டு வந்திருக்கின்றனர். மேனுட்டு ஸ்திரீகள் ஒருவாறாக இந்நிர்ப்பந்தங்களைத் தகர்த்து மேல் வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் கீழ்நாட்டினராகிய நம் ஸ்திரீகள் பலவகைப்பட்ட கட்டுப்பாடுகளால் இன்றும் இம்சிக்கப்பட்டு, அவர்கள் உயிர் வாழ்வே அக்கட்டுப்பாடுகளுக்கு அடங்கிக் கிடக்கிறது.



ஸ்ரீமதி விஜயலக்ஷிமி பண்டிட்.

வாழ்வு என்பதென்ன வென்றே யறியாமலும், அவரவர்கள் வீட்டைத் தவிர உலக மெப்படியிருக்கிற தென்றே தெரியாமலும் நம் இந்திய பெண்கள், கல்யாணமாகுமுன் தகப்பனின் ஆதரவில் வளருகிறார்கள். கலியாணத்திற்குப் பின் கணவனின் உடைமையாக மாறி, ஆயுள் முழுவதும் வணங்கி ஒடுங்கி உழைப்பதிலேயே செலவிடுகிறார்கள். துரதிர்ஷ்ட வசமாக விதவையாக நேரிடின், தன் பிள்ளைகளின் சம்ரக்ஷணைக்கு வந்துவிடுகிறாள். ஸ்திரீகளின் பாது

காப்பையும் அவர்கள் கணவனுடைய குடும்பத்தின் க்ஷேமத்தை யும் உத்தேசித்து மதமும், ஜாதியும், சமூகமும் பல்வேறு விதிகளை ஏற்படுத்திவிடவே நம் ஸ்திரீகள் அவைகளை அவ்வாறே அனுஷ் டிக்க வேண்டியிருக்கிறது. தவறினால் ஜாதிப் பிரஷ்டம் செய்கின் றனர்.

இம்மாதிரி விதிகள் எல்லாம் அநேகமாய் ஆடவர்களாலேயே ஏற்படுத்தப் பட்டுள்ளன. அவற்றை அநுஷ்டிக்கச் செய்து மேற் பார்வை யிடுவோர் வயது சென்ற ஸ்திரீகளே. தாங்கள் எல்லோ ரும் என்ன கஷ்டங்களை அனுபவித்தார்களோ, அவற்றைத் தங் கள் பேத்திமார்களும் அநுபவிக்கத்தான் வேண்டுமென்ற எண் ணத்துடன், அடிமைகள் எவ்வாறு நடந்து கொண்டனரோ அதேபோல், இந்த கிழவிமார்களே ஒவ்வொரு குடும்பத்திலும் மேற்சொன்ன விதிகளையும் அடக்கு முறையையும் கையாண்டு வந்திருக்கின்றனர். தலைமுறை தலைமுறையாய் அடங்கிக்கிடந்ததன் பலனாக காலக்கிரமத்தில் நமது ஸ்திரீகளின் பகுத்தறிவென்பதே மழுங்கிப்போய் அவர்கள் எவ்வித பொறுப்பையும் பிறரிடம் மன தார ஒப்படைத்து விட்டனர்.

இம்மாதிரி வாழ்க்கை நடத்திய நம் ஸ்த்ரீகள், தன் அந்தஸ்து, தன் ஆலோசனை, தன் அபிப்பிராயம் என்பவற்றை அடியோடு மறந்து தன்னைக் காப்பாற்றுபவனின் ஆலோசனைக்கும் அபிப்பிரா யத்திற்கும் அநுசரித்தே யிருந்துள்ளனர்.

ஆனால் காலச்சக்ரம் வெகு வேகமாகச் சுழல்கின்றது. மாறு தல்களோ துரிதமாகவந்து கொண்டிருக்கின்றன. பழைய தலைமு றையைச் சேர்ந்த ஸ்திரீகள்குறைந்து கொண்டே வருகின்ற னர். தற்கால ஸ்த்ரீகள் வரம்பு மீறிச் செல்கின்றனர் என்று ஜனங் கள் குறை கூறுகின்றனர். அது உண்மைதானா என்பது எனக் குத் தெரியாது. ஆனால் அப்படியிருப்பின், அது சகஜந்தானே! இதுவரை யிருந்துவந்த அடக்கு முறையின் பலன்தான் அது. சுயேச்சையை முதன்முதலாகப் பருகுகின்றவர்களைக் கட்டிப்பிடிப் பது கொஞ்சம் சிரமம் தான். தலைசுற்றத் தான் சுற்றும். ஸ்த்ரீக ளும் மனுஷ்ய சுபாவங் கொண்டவர்கள் தானே? போகப் போக

அவர்களும் தம் நிலைமை உணர்ந்து முன்னைவிடப் பன்மடங்கு வலுப்பெற்று விளங்குவ ரென்பதில் சந்தேகமில்லை.

தற்போதைய உலகில் உலகப் போக்கை நிர்ணயித்தவன் ஆடவனாகவே யிருக்கிறான். ஸ்திரீகளின் ஆட்சி சமையலறையிலே யேயுள்ளது. மற்ற விஷயங்களில் சமூகத்திற்கு அலங்கார பொம்மைகளாக மட்டுமே விளங்கி நின்றனர். எவ்வளவு நாள் தான் நடக்கும்! உலகநாகரீகத்துக்கு ஆடவனெவ்வளவுஅவசியமோ அவ்வளவு ஸ்திரீகளும் முக்கியமல்லவா?

இன்று ஸ்த்ரீகள் வாழ்க்கை நடத்துவதில் மட்டுமன்றி உலக நாகரீகத்தை இயக்குவதிலும் ஆடவர்களின் ஏகபோகத்தை முற்றுகையிடுகின்றனர். இனி ஸ்திரீகளும் ஆடவர்களும் சம உரிமை கொண்டாடாத உலக நாகரீக மென்பதே கிடையாது. அவர்களுடைய கூட்டு உழைப்பினாலன்றி ஒரு தேசமும் வளர முடியாது. இருவருடைய கூட்டுறவின்றி ஒற்றுமை யென்பதே ஏற்படமுடியாது. இருபாலாரும் சேர்ந்து பாடுபட்டாலொழிய சுதந்திரம் என்பதே கிடைக்காது.

இந்தியாவை ஒற்றுமைப் படுத்தி முன்னேற்றமடையச் செய்யவேண்டியது மிக முக்கிய கடமையாயிருக்கிறது. உடனே செய்யவேண்டியுமிருக்கிறது. நாம் உண்மையாகவே தேசத்தை முன்னேறச் செய்பவர்களாயிருப்பின், நமது மனதிலிருந்து மூட நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் வேற்றுமைகளையும் அகற்றவேண்டும். நம் ஆடவர்களுடன் சரி சமானமாய் உறவாடி, இருவர்களுடைய கூட்டுறவாலும் உழைப்பினாலும், இந்திய சரித்திரத்தையே ஒவ்வொரு துறையிலும் திருத்தியமைக்கப் பாடுபட வேண்டும். அப்பொழுதுதான், இந்தியமக்களாகிய நாம் ஒற்றுமையையும் முன்னேற்றத்தையும் அடைந்தவராக ஆகிறோம். அப்போதுதான் நம்மவர்கள் தேச முன்னேற்றத்திற்கு உழைத்தவர்கள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ள முடியும்.

# சுப்புவின் தியாகம்

(மதுரை, இ. மாயாண்டி பாரதி)

எதிர்வீட்டு மீனாக்ஷி சுந்தரம் எட்டாவது வரையிலும் படித்திருக்கிறான். ஆளும் நல்ல வாட்டசாட்டம் தான். அழகில் ஆணழகன். ஒழுக்கமோ............? அழகுதான் அவனை ஆணவ பீடமாக்கிற்று. இந்த இளம் பிராயத்திலேயே எண்ணற்ற மங்கையரின் இதழமுது சுவைத்த காமக் களஞ்சியம். இந்த எட்டேகால் லக்ஷணத்திற்குத் தான் அத்தையாக வாய்த்தாள் தங்கம்மாள் ஆச்சி. பதிசொற் கடவாத பாவையாகவே இதுவரையும் இல்வாழ்வை நீல்வாழ்வாக நடத்திவந்தாள். அது கண்டுதான் பரமேஸ்வரம் பிள்ளையும் அவள்மீது அடங்காத பேரன்புடையவராய் இருந்து வந்திருக்கிறார். பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானல் எத்தாலும் கூடிவாழ ஏதுவில்லாமலா போகும்?

இரண்டு வருடங்கள் ஏகிமறைந்தன. காலமோ கோடை; நேரமோ மாலை; காய்கதிர்ச் செல்வன் கடலில் மூழ்கினான். பரிதிக் கடவுளின் ஒளிபெற்ற வானம் பலநிறம் வாய்ந்து கண்டோர் மனதைத் தன் வயப்படுத்துகின்றது. உள்ளக்களிப்பை உந்தித்தள்ள இளம் பூந்தென்றல் எங்கிருந்தோ வந்தது. இயற்கையன்னையி னிருப்பிடமாகிய பூஞ்சோலையில் திரு. பிள்ளையும் தங்கமும் என்று மில்லாக் களிப்புடன், தங்கள் மகள் சுப்புவைப்பற்றியும் அவளது எதிர்கால இன்பமலரைப் பற்றியும் பேச்செடுத்தார்கள். நடுத்தர ஆஸ்தியுடைய திரு. பிள்ளையவர்கள், நன்னிலையடைய இன்னிலை மாற வேண்டாவோ? எடுத்தாள் பேச்சை. எப்படி?

தங்கம்மாள்:—பிராணநாத! உலகமோ நிலையற்றது. நிமிஷந்தோறும் திடீர் மாறுதல்களேற்பட்டு நவநாகரீகம் ததும்பிக்கொண்டு வருகிறது. இன்றைக்கிருப்பாரை நாளைக்குக் காணோம். பச்சைக்கிளிபோல் நமக்கு ஒரேயொரு மகள்தா னிருக்கிறாள். எனக்கோ அடிக்கடி மூச்சுநோய் வந்துவிடுகிறது. எமன் எப்பொழுது வருவானென்று எனக்கே தெரியாது. ஆகை

யால் என் மனம் மகிழ சுப்புவுக்கு இப்பவே கல்யாணம் பண்ண வேண்டும்.

பரமேஸ்வரம் பிள்ளை:—அன்பே! என் பிதற்றுகிருய்? சுப்புவுக்கு வயது ஆறுகூட ஆகவில்லையே. அதற்குள் என்ன அவசரம்? இன்னும் ஐந்தாறு ஆண்டுகள் செல்லட்டுமே!

தங்:—நாயக! இதுவரையும் என் சொல்லைத் தட்டினதில்லை. "வைரத்தோடு"........சரி யென்றீர்கள். தங்கக் கொலுசு ஆஹாவென்றீர்கள். 'கராச்சி புடவை' இதோ வென்றீர்கள். ஆனல் இன்றுமட்டும் இப்படிப் பேசுவது யாருடைய சகவா சமோ. என் தம்பிமகன் மீனுட்சிசுந்தரம் எட்டுவரை படித் திருக்கிருன். பணக்காரன். அழகன்.

பரமே:—உஸ்ஷ். என் அளக்கிருய். மாப்பிள்ளையின் சரித்திரம் எனக்குத் தெரியும். கூத்திதான் குலதெய்வமாகக் கொண்டு வாழ்கின்ருன். எதையும் தீரயோசித்துச் சொல்லவேண்டும். அவசரமின்றி அமைதியாயிரு. பிறகு பார்த்துக் கொள்ள லாம்.

வாயுபகவானுக்கு வந்தது கோபம். பக்கத்து மரம் படா ரென்று முறிந்தது. ஏதோ அபசகுனம் என்று இருவரும் இல்ல மேகினர். தங்கம்மாளுக்குத் தன் கணவன் சொல் தாங்கவில்லை. கொண்ட நினைவை உருவகப்படுத்த அன்றே கருமமே கண்ணு யினுள்.

## II

எங்கும் மேள முழக்கம். வந்து குவிந்தனர் பந்துமித்ரர்கள். அழகிய பட்டாடையுடுத்தி அய்யரும் வந்துவிட்டார்கள். அப்ப ளத்தைத் தட்டுவதும் அரிசியை யிறைப்பதும், வடமொழி மந்தி ரம் முழங்குவதும் மணப்பந்தலை ஒருவாறு சோபிக்கச் செய்தன. தொண்டை முட்ட உண்ட விருந்து என்றும் மறக்கமுடியாத சரித்திர சம்பவமாம். மணப்பந்தல். மங்கை சுப்புவின் கழுத்தில் மங் கிலியம் கட்டப்படுகிறது. "மாமா என் கழுத்தில் என் கயிறுகட் டறே" என்று உலகநிலை தெரியாத சுப்பு கனவு உலகில் சஞ்சரிப்ப வள் போல் கேட்டாள். அனைவரும் சிரி சிரி யென்று சிரித்தனர்.

## III

"முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்". இஃது உத்தமர் வாக்கு. காமத் தீயின் கட்டுக்கடங்காத் தன்மையால் உலகமே நிலை கலங்குகிறதல்லவா? அஃது மீனாக்ஷிசுந்தரத்திற்கும் உடன் பாடு தானே. மனைவியோ, சிறுவீடு கட்டி சிரித்து விளையாடும் சிறுபெண். கலியாண முறுக்கும் பழைய வாசனையும் மரத்தின் மேலேறி மதுவுண்ட மந்தியே போல் ஆக்கிவிட்டது. இருபது வயதிலேயே முதுமை வந்துவிட்டது. உள்விழுந்த கன்னமும், ஒளியிழந்த விழியும், அடிக்கடி கவலைக்கிடமான நிலைமையும் உடையவளானாள். நாடி நரம்புகளில் நல்ல ரத்தமில்லை. இருதயம் இற்று விட்டது. மனநோய் குடிகொண்டது. மந்தியெனும்படி குந்திநடக்கும் மனித மிருகத்தன்மையும் கூடிக்கொண்டது. கூற்றுவனுக்குக் கொண்டாட்டம். அந்தோ! பாவம். ஐயோ! நெடுந்தூக்கம்.

தங்கம்மாள் தலையில் படார் படாரென்று அடித்துக் கொண்டாள். கையோடு கைபிசைகிறாள். விழுகிறாள், அழுகிறாள், விம்முகின்றாள். கண்ணீர் வெள்ளத்தில் கண் கலங்கித் தேம்பி முகம் வீங்கித் துடியாய்த் துடிக்கிறாள்.

"படித்தும் பதரானேனே! அப்பவே மாட்டேன் மாட்டேன் என்று மண்டையிலடித்துக் கொண்டேனே. கேட்டாளா கேட்டாளா? ஆ ஆ!" என்று கதறினார் பரமேஸ்வரம் பிள்ளை. குழந்தை சுப்புவின் முகத்தைக் கண்டு கூடியிருந்தோர் ஆறாத் துயரடைந்தனர். என்ன ஏங்கு ஏங்கினாலும் எமன் விடுவானா! "மாமா தூங்குகிறார். நீ போய்ப் படுத்துக்கொள்" என்று அனைவரும் குழந்தையிடம் கூறிவிட்டனர்.

## IV.

ஏற்ற வயது வந்தது. எழிலும் வந்தடைந்தது. பச்சைப் பட்டுப் புடவையும் பல நிற மலர்களும், தங்க நகைகளும் தாலி ஆபரணமும், மஞ்சள் முகமும் அவளை அழகுத் தெய்வமாக்கிற்றல்லவா! அழகுத் தெய்வமும் இவளைக் கண்டு தலைகுனிந்தோடிற்றன்றோ?

எங்கே? மஞ்சள் எழில் மிகு கேசம் எங்கே? மணம் வீசும் மலர்களெங்கே? "முண்டையே போ!" என்று மூக்குத்தியும் காப்

பும் முறைத்துக் கூறிற்று. தோடும் அட்டிகையும் தூர விலகிற்று. கட்டுகின்ற பட்டுப்புடவை கழற்றப்பட்டது. கோதி முடிக்க என் கொண்டையையாவது விடுங்களேன் என்று கூறிக் கதறினாள். நாவிதனா விடுபவன்! சமூகமா சகிக்கும்! "முண்டைக்கு வேண்டுமாம் மண்டையில் மயிர்? தடிப் பிணமே. நாற முண்டே" என்று சாதியார்கள் சரந் தொடுத்தனர். சங்கொத்த கழுத்து தாலியிழந்தது.

அன்று அழகி, மாங்கல்ய தாரிணி. சுமங்கிலி. வெற்றி. சுப காரியம். திருமகள். திருவிளக்கு!! ஆனால் இன்றோ................... முண்டை அறுதலி மொட்டைச்சி, விதவை, கைம்பெண், வெள்ளைப் பிசாசு, அப சகுனி. இருட்டு மூலையே இருப்பிடம். காற்றோட்டமில்லை. கலங்குகிறாள். ஆற்றுவாரில்லை. தேற்றுவாரில்லை. அவளைக் காண்பவர்களெல்லாம் எரிந்து விழுகிறார்கள்.

ஏ இந்து சமூகமே! நீ நாசமாய்ப் போக. பண்டைத் தமிழ் நாட்டின் பாவையர் நாட்டிய, பாங்கெழில் வீசித் திகழ்ந்த காந்தர்வக் காதலை மறந்தனையா? சத்யவான் சாவித்ரி சார்ந்த காதலை மறந்தனையா? ஏனைய சமூகங்கள் ஏற்றமுடன் வாழ இந்து சமூகம் மட்டும் இழிவடைந்து போவதா?

V

நிர்மலமான தூய நீல நிறவானம். ஆங்கே வெள்ளித் தட்டு பதிப்பிக்கப்பட்டதே போல் திங்களுக்கொரு முறை புது மதி பூத்தொளிர்கின்றது. மணி பல கடந்தபின் களைப்பாற மேல்கடலிலாழ்ந்து விடுகிறது. பிறகு பரிதிக் கடவுள் ஜெகஜ் ஜோதியாய், ஒளிப்பிழம்பாய் ஆயிரங் குதிரை பூட்டிய ரதத்தில் பவனி வருகின்றான். திங்களேபோல் ஞாயிறும் மறைந்து விடுகின்றது. பெட்டைகளோடு புள்ளினங்கள் களிக்கின்றன. ஆழ் கடலில் அலை எழுவதையும் விழுவதையும் நிறுத்தவில்லை. இயற்கை தேவியின் லீலைகளெல்லாம் சரிவர நடைபெற்றுத்தான் வருகின்றன. ஆனால்............ அதோ மூலையில் கண்ணீரை வெண்ணீராக மாற்றிக் கதறுகின்ற அந்த துர்ப்பாக்யசாலிக்கு ஏதேனும் வழி துறையுண்டா?

## VI

அவள் உலக நிலை தெரியாத பேதை. முண்டையாகவிருந்தாலும் அண்டை வீட்டு அய்யாத்துரை மேல் உள்ளத்தைக் கள்ளத்தனமாகப் பறிகொடுத்தாள். ஆனால் உடலைப் பறிகொடுக்க வில்லை. காமக் கனலும் காதலுணர்ச்சியும் கட்டுமீறி விட்டன. மனக் குரங்கை அடக்க முயற்சி மட்டுமே அவளாற் செய்யப்பட்டது. என்றாலும் இயற்கைக்கு நேர் மாறாக, அணையும் விளக்கில் ஒளி ஓங்கி வீசுவதே போல அவளது மூளையில் ஞானவொளி வீசலாயிற்று. “உலகறிய கைப்பிடித்த நாயகனைக் காலன் கொண்டேகினான். மீண்டும் புவியறிய புருஷனைக் கல்யாணம் செய்யவேண்டும்” என்று நினைத்தாள். சிரித்தாள். மலர்ந்த முகத்துடன் மாதாவை நண்ணினாள். “தாயே! அடுத்த வீட்டு அய்யாத்துரை மேல்........ஆ........சை........யானேன்” என்று தளர்ந்த குரலுடன் கூறினாள். கேட்டனர் இதை. கொண்டனர் சீற்றம். “குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பே! இன்று முதல் என் முகத்தில் விழிக்க வேண்டாம். உனக்கு கொழுப்பு மிஞ்சிவிட்டது”. என்று வசை பாடினர். உண்மையில் பெற்றோர்களின் அந்தராத்மாவுக்கு உள்ளூர பிரியந்தான். ஆனால் பாழும் அழுக்குப் படிந்த பழக்க வழக்க ஒழுக்கங்களெல்லாம், “கூடாது கூடாது” என்று முழக்கஞ் செய்வது கண்டு நடுங்கினார்கள்.

## VII

நஞ்சினும் கொடிய வெஞ்சின மொழியைப் பெற்றோர்களிடமிருந்து பெற்ற சுந்தரி சுப்பு, தளர்ந்த நடையுடன், காதற் கனலை கண்ணீரால் அழிப்பதேபோல் விழிநீரை மள மளவென்று வெளிக் கிளப்பினாள். எப்பொழுதுமுள்ள இருட்டு மூலையை இருப்பிடமாகக்கொண்டாள். ஒரே நிசப்தம். இருண்ட எண்ண அலைகளால் மோதப்பட்டு நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் எண்ணுகிறாள். அமாவாசை. பேயுமஞ்சும் பேரிருள். காலனும் திடுக்கிடும் காரிருள். மைச்சிமிழ் இருள். இரவு இரண்டு மணியிருக்கும். ருத்திரன் காவல் புரியும் நேரம். உலகமே உறக்கத்தில் உலர்ந்துகிடந்தது. வீதிக்கதவு தாளிடப்பட்டுக் கிடக்கிறது. பற்பல தீயகனவுகள் கண்ட வண்ணம் தந்தையும் தாயும் தூங்கு

கின்றனர். ஆனால் மங்கை நல்லாள் சுப்புவின் கண்களா மூடும்? முடிவில் முடிவுகட்டினாள். மாடிவீடு. அதற்குமேல் திறந்த வெளி. நிச்சப்தமாய், ஏகாங்கியாய் உச்சியை அடைந்தாள். இளம் பூந்தென்றல் ஜிலுஜிலுவென்று வீசுகிறது. வெள்ளைப்புடவை பட படவென்று ஆடியது. சுற்று முற்றும் பார்த்தாள். வானத்துடன் போட்டிபோடும் மதுரை மீனாக்ஷியின் கோபுர வெளிச்சமும், பாட்டாளி மக்கள் கங்குல் பகலாக இரத்தக் கண்ணீருடன் யந்திர பூதத்துடன் போராடும் ஹார்வி மில்லும் சிறப்பிக்க திருமலை நாயக்கர் மஹால் மணிக்கூண்டில் டய்ன்....டய்ன் என்றடிக்கும் இரண்டு மணியோசையும் அவளது நெஞ்சையள்ளுவதாயிருந்தன.

மண்டியிட்டாள். கையை விரித்தாள். வானத்தை நோக்கினாள். வழிதவறிய மாலுமிகட்குத் திசை காட்டும் துருவ நக்ஷத்திரமே வானுலக வழியை இவளுக்கும் காட்டினான். நூற்றுக்கணக்கான விண்மீன்கள் விழுவதைக்கண்ட அந்தப்பேடை, “ஹே! இளஞ்சிங்கங்காள்! அழகிய அரிவையர்காள்! சமூக வெறி கொண்ட வைதீகப் பித்தர்காள்!!! சமூகத்தின் பேரால் பெண்ணினத்தை மடிக்கின்ற நீங்கள் மறைந்தொழியும் காலம் வந்து விட்டது.

இரு கண்ணிலொரு கண்றன்னை
எடுத்து விடுதற்போல—
அருமை மகள் விதவை—கிளியே
அவளுக் குரிமை யில்லை

என்ற கணேச பாரதியின் கண்ணீர்ப் பாடலை நோக்குங்கள். பாரதியைப் பாடுகின்றீர்கள். விழாக்கொண்டாடுகின்றீர்கள். அவர் வழிமேல் விழி வைத்தீர்களா? உலக நிலை கலகநிலை. எத்தனையோ இரும்பு இருதயம் படைத்த ஏகாதிபத்தியங்களெல்லாம் மறைகின்றன. எழுகின்றன. ஆனால் வறட்டு வைதீக மூளைபடைத்த நீங்கள் காலச்சக்கரப் பெரும் புயலிலடிபட்டுத் தத்தளிக்கப் போகின்றீர்கள். என் போன்ற மாசு மறுவற்ற மங்கையரின் தியாகமே உங்களது வைதீகக் கோட்டையைத் தகர்க்கும் வெடிகுண்டுகளாகட்டும்.”

கீச்ச்........வீர்ர்ர்ர்........தொப்........ஊஹ்ம்ம்........

VIII

தீக்கனவுகண்ட பெற்றோர்கள் திடுக்கிட்டனர். ஓடினர் வீதிக்கு. சவம். மண்டையோடு சுக்கு நூறு. செங்குருதி சிதறியோடுகின்றது. வெள்ளைச்சேலை சிவப்புச்சேலையாய் விட்டது. ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்ற தாய் மூர்ச்சையானாள். தந்தையுமப்படியே. ஐயோ! பாவம்!! ஆண்டாண்டு தோறும்...............

மாதர் மறுமண அறிக்கைகளும் சங்கங்களும் திரு. பிள்ளையவர்கள் வீட்டில் இன்று காணலாம். தங்கம்மாள் ஆச்சி பொது மேடைகளில் விதவாவிவாகம்பற்றி வீரமுழக்கம் செய்வதாகக் கேள்வி.

இந்த புத்தி அப்பொழுதே யேற்பட்டிருந்தால்—

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை
எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்.

---

# சட்ட சபையில் பெண்மணிகள்

பீகம் அயிஸாஸ் ரஸூல்

(ஐக்கிய மாகாணச் சட்டசபை டெப்டி பிரசிடெண்டு)

சென்ற ஒரு நூற்றாண்டாக ஸ்த்ரீகளின் நிலைமை வெகுவாக மாறிக்கொண்டே வந்திருக்கின்றது. ஆடவர்களுடன் ஸ்திரீகளும் சரிசமானமான அந்தஸ்துக்கு உரியவர் என்ற ஒரு மனப்பான்மை பிறந்துவிட்டது. மாறுதல் என்பதை மனதாலேயும் ஸ்மரிக்காத கீழ்நாடுகளிலுங் கூட மேனாட்டார் எதிர்பாராத வண்ணம் அவ்வளவு வேகமாய் மாறுதல்கள் வந்து கொண்டிருக்கின்றன. மேனாட்டு நாகரிகம் பரவினதாலும், உலக யுத்தத்தின் பலனாகவும், ஸோவியத் ருஷியாவில் தீவிரமாக எல்லா பழக்கவழக்கங்களையும் உதறித்தள்ளிப் பெண்களுக்கு அளித்துள்ள முழு உரிமையின் பலனாகவும் ஆசியா முழுவதுமே, பெண்களின் உரிமைகளுக்கு ஒரு மாபெருங் கிளர்ச்சி உண்டாயிருக்கிறது.

1919-ம் வருஷத்திய இந்திய வாக்குரிமைச் சட்டம் ஆடவர்களைப் போலவே பெண்களுக்கும் வாக்குரிமையை அளித்தபோதிலும், சொத்து யோக்யதாம்ச மானது, ஒரு சிறுபாலாரைத் தவிர, பெரும்பாலோரை ஒதுக்கிவிட்டது. 1935ம் வருஷப் புது அரசியல் திட்டத்தின் கீழ், குறிப்பிட்ட சொத்து யோக்கியதாம்சம் பெற்ற ஆடவரின் மனைவிகளுக்கும், விதவைகளுக்கும் மட்டும் வாக்குரிமை யளிக்கப்பட்டதுடன், ஸ்த்ரீகளுக்கு சொந்த ஹோதாவில் படிப்பு, சொத்து என்ற இரண்டு அம்சங்களைப் பொறுத்தும் வாக்குரிமை யளிக்கப்பட்டது. இவ்வாறாக, ஏறக்குறைய 50 லக்ஷம் பெண்மக்களுக்கு ஓட்டுரிமை கிடைத்தது.

தற்போது அமுலிலிருக்கும் அரசியல் அமைப்பையொட்டி நமது தேசத்தில் நடந்த முதல் தேர்தல்களில் ஸ்திரீகள் தங்கள் தனித்தகுதிகளுக்கு மட்டுமன்றி பொதுத் தொகுதிக்கும் அபேக்ஷக்ராக நின்றிருக்கின்றனரென்பது மிக முக்கிய விஷயம். முதன் முதலாக எல்லா மாகாணங்களிலும், லட்சக்கணக்கான ஸ்திரீகள் தங்கள் ஓட்டுரிமையைச் செலுத்தியிருக்கின்றனரென்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தத் தேர்தல்கள் நமது ஸ்த்ரீகளின் இயக்கத்திற்கு வெகுவாக ஆதரவு அளித்திருக்கின்றன. இன்னும் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

எல்லாவற்றிலும் மேலாக, இப்போது ஒருவகையான ஜனநாயகம் அளிக்கப்பெற்ற பாரத தேசத்தில், உலகில் (அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் நீங்கலாக வேறு) எந்த நாட்டிலுமில்லாத அத்தனை ஸ்த்ரீகள் நமது சட்டசபைகளில் அமர்ந்திருக்கின்றனர். இந்த அம்சத்தில், அமெரிக்க ஐக்கிய மாகாணங்களே முதலில் நிற்கின்றன. அங்கு மாகாண சட்டசபைகளில் 148 பெண்மணிகளும் மத்திய செனெட்டில் 2 பெண்மணிகளும் இருக்கின்றனர். அடுத்தபடியாக ருஷியா தேசத்தில் 130 ஸ்த்ரீகள் அரசாங்க பதவிகளிலிருக்கின்றனரென்றாலும், ருஷிய அரசியலமைப்பு உலகிலேயே ஒரு நவீன முறையாயிருப்பதை உத்தேசித்து, அதை விட்டுவிட்டு மற்ற தேசங்களுடன் ஒத்துப்பார்க்கும்பக்ஷத்தில், இந்தியாதேசம் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக நிற்கிறது. 60 ஸ்த்ரீ ரத்னங்கள்

சட்ட சபைகளிலிருக்கின்றனர். சமஷ்டித் திட்டம் அமுலுக்கு வந்தால் இன்னும் குறைந்தது 9 பேர் அதிகமாக இருக்க நேரிடும்.

இவ்வாறிருக்க, முன்னேற்ற மடைந்துள்ள பிரான்ஸ், இதாலி, ஸ்விட்ஸர்லாந்து, நாஜி ஜெர்மனி, ஜப்பான் நாடுகளில், ஒரு ஸ்திரீ சட்டசபை அங்கத்தினர்கூட இல்லை; அதோடுமட்டு மல்ல, ஸ்திரீ வாக்காளரென்ற நாமதேயங்கூட இல்லை! இந்நாடுகளில் ஸ்திரீகளின் அபிவிருத்தி ஒரு ஒழுங்கு முறையாக விருக்கவில்லை. ஹிட்லர் ஆட்சிக்கு முன் ஜெர்மனியில் சட்டசபையில் (ரீச்ஸ்டாக்கில்) 33 பேர் அங்கத்தினர் இருந்தனர். தற்போது ஒருவர்கூடக் கிடையாது.

இந்தியாவைக் கவனித்தால், தற்போது ஒரு ஸ்திரீ ஐக்கிய மாகாணத்தில் (ஸ்ரீமதி விஜயலக்ஷிமி பண்டிட்) ஸ்தல ஸ்தாபன சுகாதார இலாகாக்களுக்கு மந்திரியாக விளங்குகிறார். சென்னையிலும் மத்திய மாகாணத்திலுமாக இரண்டு ஸ்திரீகள் சட்டசபை உபதலைவர்களாயிருக்கின்றனர். அஸ்ஸாமிலும் ஐக்கிய மாகாணத்திலும் இரண்டு பெண்மணிகள் சட்டசபை (கவுன்சில்) உபதலைவர் பதவி வகிக்கின்றனர். பஞ்சாப், பம்பாய் மாகாணங்களில் இரண்டு ஸ்திரீகள் பார்லிமெண்டரி காரியதரிசிகளாக விருக்கின்றனர். இதைத் தவிர அநேகர் கக்ஷிக்கொரடாக்களாகவும் அங்கு விளங்குகின்றனர். இவ்வளவும் பாரததேசம் அடைந்துள்ள முன்னேற்றத்தின் பெருமைக்குத் தக்க சான்றாகும்.

தற்போது இந்திய பெண்மக்களிடையே 50 லக்ஷத்திற்கு மேலாக ஓட்டர்களிருக்கின்றனர். அவர்களிடையே புதிய அரசியல் உணர்ச்சி கிளம்பியிருக்கின்றது. இது மேன்மேலும் அபிவிருத்தியடையு மென்பதில் ஐயமில்லை. ஒரு நாட்டின் க்ஷேமமும் முன்னேற்றமும் அந்நாட்டுப் பெண்மக்கள் வசமேயிருக்கின்றது. இப்போது நமக்குக் கிடைத்துள்ள சந்தர்ப்பத்தை சரிவர உபயோகித்தால் அதுவே ஸ்த்ரீகளிடத்தில் எல்லோருக்கும் ஒரு பெரிய நம்பிக்கையை வருங்காலத்தில் உண்டு பண்ணும். நம் நாட்டிற்கே நாம் ஓர் அணிகலனாக விளங்கவேண்டும். மனுஷ்ய சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் க்ஷேமத்திற்கும் பொறுப்பாளிகளாக ஆகவேண்டும். நம் சமூகத்திற்கும் நாட்டிற்கும் பெருந்தொண்டு ஆற்றவேண்டும்.

# சுந்தரியின் பரிதாபம்

(ஸி. எஸ். ஆர்.)

[பதிப்புரிமை ஆசிரியருக்கே உரியது]

ஏஜெண்டு ராமனுதய்யர் என்ருல் உலகத்தாரே அறிந்து கொள்வார்கள். அவருக்கு அத்தகைய பெயர் கிடைத்ததற்கு காரணமில்லாமல் இல்லை. அவரது ஊரிலிருக்கும் கோவிலில் சுவாமியின் பெயர் 'ராமனுதர்' என்றிருந்தபடியால் அநேகருக்கு ராமனுதன் என்ற பெயர் வழங்கப்பட்டது. இதனுல் ஒரு ராமனுதய்யரை மற்ருெரு ராமனுதய்யரிடமிருந்து வித்தியாசப்படுத்த வேண்டி, ஏஜெண்டு ராமனுதய்யர், கோடியாத்து ராமனுதய்யர் குண்டன் ராமனுதய்யர், கிறுக்கு ராமனுதய்யர், மொட்டை ராமனுதய்யர் என்ரெல்லாம் பெயர்கள் வழங்கப்பட்டன. நமது கதாநாயகனுன ராமநாதய்யருக்கு ஏஜெண்டு பட்டம் கிடைத்ததற்குக் காரணம் அவரது உத்தியோகமேயாகும். சுமார் 15 வருஷங்களுக்கு முன் அவ்வூர் கப்பல் கம்பெனியில் குமாஸ்தாவாகச் சேர்ந்தார். மனந்தளராமல் பூர்ண விசுவாசத்துடன் கம்பெனியின் முன்னேற்றத்திற்காக உழைத்ததன் பலனை இன்று அவர் பெற்றுவிட்டார். இப்பொழுது அவரது மாதச் சம்பளம் 1000 ரூபாய். ஐரோப்பியர்களைப்போல் வசிக்க ஆசைகொண்டு தனிப் பங்களாவையும் கட்டிக்கொண்டார். "ஆசைக்கு ஒரு பெண் ஆஸ்திக்கு ஒரு பிள்ளை" என்பதற்கொப்ப ஒரு பெண்ணையும் ஒரு பிள்ளையையும் கடவுளின் அனுக்கிரகத்தால் பெற்ருர். பெண் மூத்தவள்; நல்ல அழகுள்ளவளாக விருந்தபடியால் 'சுந்தரி' என்று நாமகரணம் செய்யப்பட்டது. அவள் பிறந்து நான்கு வருஷங்களுக்குப்பின் 'கிருஷ்ணன்' ஜனித்தான். கிருஷ்ணனின் பெயரும் காரணப் பெயர்தான். வெண்ணை திருடித் தின்பதில் மகா கெட்டிக்காரன்.

சூரியனையும் சந்திரனையும்பெற்ற உலகம் எவ்விதம் தன்னடக்கத்துடன் இருந்து வருகிறதோ, அதேபோல தங்கம்மாள் தனது

இரு குழந்தைகளைக் கொண்டு பூரண திருப்தியடைந்து வாழ்ந்து வந்தாள். அவள் சிறிது கர்நாடக மனுஷிதான். இதற்கும் காரணம் அவளுடைய தாயாரின் மனோபாவமேயாகும். இதற்கேற்றாற்போல் தங்கம்மாளின் மாமியாரும் (அதாவது ஏஜெண்டு ராமனுதய்யரின் தாயார்) கர்னாடக மனுஷியாக விருந்தாள். இந்த இரு கிழடுகளின் உபத்திரவத்தைச் சகியாமல் சுந்தரிக்கு இளம் வயதிலேயே ராமனுதய்யர் கலியாணம் செய்துவைக்க வேண்டியதாயிற்று. சுந்தரியின் கலியாணம் மிக்க ஆடம்பரமாகத்தான் நடந்தது. அவளது கணவன் அவளது கரத்தைப் பிடித்த காலத்தில் அவளுக்கு ஏழு வயதுதான் நிரம்பியிருந்தது. கணவனுக்கு வயது பதின்மூன்றுதான். விவாக தினத்தன்று இருவரும் பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடினதைக் கண்டு கிழடுகள் சந்தோஷமடைந்தனர்.

ஃ ஃ ஃ

தலைதீபாவளிக்கு மாப்பிள்ளை வரப்போவதை முன்னிட்டு ஏஜெண்டு ராமனுதய்யர் பலத்த ஏற்பாடுகளைச் செய்தார். மாப்பிள்ளைக்குத் தகப்பனாரில்லை. இதற்குக் காரணம் ஜோஸ்யர்களின் கூற்றேயாகும். சுந்தரி மூலநக்ஷத்திரப் பெண்ணானபடியால் மாமனார் இருக்கக் கூடாதென்று ஜோஸியர்கள் கூறினர். மாப்பிள்ளையின் தாயாருக்கு மாப்பிள்ளை "ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை" போலிருந்தான். இதனால் தாயார் மகனைவிட்டுப் பிரிந்திருக்க மனம் சகியாதவள். ஆகவே அவளும் தலைதீபாவளிக்கு வருவாளென்பதை முன்னிட்டு ராமனுதய்யர் அதிக ஏற்பாடுகளைச் செய்யலானார். சம்பந்தி முகங் கோணாமல் சகலமும் நடக்கவேண்டுமென்பது கிழடுகளின் ஆக்ஞை.

தீபாவளிக்கு முந்தைய நாள், மாப்பிள்ளை கிருஷ்ணசாமி (ஆம் சுந்தரியின் புருஷன் தான்) மாமனார் வீட்டிற்கு இனபந்துக்களுடன் வந்து சேர்ந்தான். மோட்டாரில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டான். பாண்டுவாத்தியம் முழங்கியது. புஷ்ப ஹாரங்களை அவனால் சுமக்கவும் முடியவில்லை. தெருவில் போகிறவர் வருகிறவர் எல்லோரும் அவனைக்கண்டு தலைவணங்கிச் சென்றனர். இவ்வளவுக்கும் காரணம் ஏஜெண்டு ராமனுதய்யரின் செல்வாக்கே யாகும்

மென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. கிருஷ்ணசாமிக்கு மட்டும் எல்லாம் விளையாட்டாக விருந்தன.

ஊர்வலம் முடிந்து வீட்டிற்குப் போனவுடன் அவனது கவனம் ஊஞ்சல் பலகையின் மேலிருந்த பட்டாஸ்கட்டின் மீது தான் சென்றது. ஓட்டமாக ஓடி அவைகளை அப்படியே தூக்கிக்கொண்டான். பட்டாஸ்களைக் கொளுத்தப் பார்த்தான். நெருப்பு இல்லாததால் மத்தாப்பு பெட்டி ஒன்றை எடுத்து ஓர் குச்சியை எடுத்துக்கீற்றி பட்டாஸைக் கொளுத்தி வேடிக்கை பார்த்தான். இளங்கன்று பயமறியாது; அதுவும் கிருஷ்ணசாமிக்கிருந்த ஆத்திரத்தில் அவன் ஒன்றையும் கவனிக்கவில்லை. ஒரு பட்டாஸ் அவனது சரிகை வேஷ்டியில் விழுந்ததையும் அதனால் வேஷ்டியின் நுனி ஒன்றில் நெருப்புப் பிடித்துக் கொண்டதையும் அவன் கவனிக்கவில்லை. சில நிமிஷங்களுக்குள் திடீரென்று அவன் அலறுவதைக் கேட்டு எல்லோரும் திகிலடைந்தனர். அதற்குள் பின்புறத்தில் நின்றுகொண்டிருந்த வேலைக்காரக் கருப்பன் எப்படியோ நெருப்பை ஒரு நொடிப் பொழுதில் அணைத்துவிட்டான்.

மாப்பிள்ளை வீட்டில் நுழைந்தவுடனேயே அமர்க்களம் ஏற்பட்டுவிட்டதைக் கண்டு கிழடுகள் இரண்டும் கவலை கொண்டனர். "என்னமோ ஒன்றும் நன்ன வரவில்லை; நேத்திக்கு லட்டு பிடிக்க சுப்பன் (சமையற்காரன்) பாண்டலியை அடுப்பில் வைத்துப் பாகு காய்ச்சும் பொழுதும் இப்படித்தான் அவன் வேஷ்டியிலும் நெருப்புப் பிடித்துண்டுத்து—" என்று ராமனுதய்யரின் தாயார் மிகுந்த மனவேதனையுடன் கூறினாள்.

"நாமென்ன பண்ணலாம். எல்லாம் அவன் (ஆண்டவன்) செயல். அவனன்றி ஓர் அணுவும் அசையாது. நம்பினோரைக் கைவிடமாட்டான்" என்று பூர்ண மனோ உறுதியுடன் பதிலளித்தாள் மற்றொரு கிழடான ராமனுதய்யரின் மாமியார்.

இரவு போஜனத்திற்கு ஏராளமான பேர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். விருந்துக்கு முன் பாலிய தம்பதிகளைப் பெண்கள் மணையில் வைத்துப் பாட்டுப் பாடினர். விடியற்காலம் சீக்கிரமாக எழுந்து தீபாவளி ஸ்நானம் செய்யவேண்டுமாதலால் எல்லாம் துரித

மாக நடந்தது. சகலரும் நித்திராதேவியின் வலையில் சிக்கினர் என்ருலும், ராமனுதய்யரும் தங்கம்மாளும் தூக்கம் வராமல் பேசிக்கொண்டே இருந்தனர். அவர்களிருவரும் தூங்கினபொழுது மணி ஒன்றுக்கு மேலிருக்கும்.

ஃ ஃ ஃ

விடியற்காலம் மணி 5 ஆகிவிட்டது. வாசலில் மேள வாத்திய முழக்கம் பலமாயிருக்கிறது. நாதஸ்வர வித்வான் ஆனந்தமாக பூபாளராகத்தை எடுத்து அலசிவருகிருன். தவுல் காரன் பாட்டுக்குத் தவுல் கொட்டுகிருன். இடை இடையே ஜில், ஜில் என்று ஜாலரா சப்தம் கேட்கிறது. இவ்வளவு அமர்க்களத்தில் தூக்கம் எப்படிவரும்? எல்லோரும் விழித்துக்கொண்டு விட்டார்கள். ஆனல் மாப்பிள்ளை கிருஷ்ணசாமி மட்டும் கும்பகர்ண வரம் பெற்றவன்போலிருந்தான். ஏஜெண்டு ராமனுதய்யர் எழுப்பப்போன பொழுது, மாப்பிள்ளையின் தாயார் குறுக்கிட்டு, "ராத்திரி ரொம்ப நாழிவரை குழந்தை (மாப்பிள்ளை) தூங்கவே இல்லை. பின் கட்டிலிலிருந்து கீழே இறங்கிப் படுத்துக்கொண்டான். இப்போதான் கண்ணசந்தான். ஒரு நாழியாச்சு. அதுக்குள்ளே போய் எழுப்பாதேங்கோ" என மிகுந்த புத்திரவாஞ்சையுடன் கூறிஞள். ராமனுதய்யரால் அவளை மீறிச்செல்ல முடியவில்லை.

கிழக்கே வானம் வெளுக்க ஆரம்பித்து விட்டது. விடிந்து மூன்று நாழிகைக்கெல்லாம் அமாவாசை வந்துவிடுகிறது. அப்படியும் ராமனுதய்யர் சிறிது பொறுத்துப் பார்த்தார். செங்கதிரவன் தன் கிரணங்களை எங்கும் பரப்பியதைக் கண்டவுடன் அவர் பொறுமையிழந்து சரேலென்று மாப்பிள்ளை படுத்திருந்த அறைக்குள் பாய்ந்து 'கிட்டு! கிட்டு!' (கிருஷ்ணசாமியின் செல்லப்பெயர்) "நாழியாச்சு. பட்டாஸ் விடவேண்டாமா எண்ணெய் தேச்சுக்கனுமோ இல்லையோ எழுந்திரு எழுந்திரு" என்று கூவி அழைத்தார். அதற்குப் பதிலே வராததைக் கண்டு அவர், கிருஷ்ணசாமியின் அருகாமையில் மெத்தையிலுட்கார்ந்து கொண்டு, கிருஷ்ணசாமியின் தோள்பக்கம் இருமுறை தட்டி "கிட்டு! கிட்டு!! எழுந்திரு" என்ருர். அதனுலும் பயனேற்பட வில்லை.

"விளையாட்டுப் பயலுக்கு தூக்கவெறி யதிகமாயிருக்கு" என்று சொல்லிக் கொண்டே ராமனுதய்யர் அவனது முகத்தை தன்புறமாகத் திருப்பினுர். அதற்குள் முகம் ஜில்லிட்டுப் போயிருப்பதை உணர்ந்து திகிலடைந்தார். கிட்டுவின் வாயிலிருந்து நுரை வழிந்திருப்பதைக் கண்டவுடன் அவர் கருநாகத்தை மிதித்தவனைப் போல் வெருண்டு, "ஐயோ! அம்மா! இங்கே ஓடிவாடி!" என்று கூச்சலிட்டார். வீட்டிலிருந்தோர் யாவரும் கூட்டமாக ஓடிவந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணத்தைக் கூறலாயினர். டாக்டரும் அவசரம் அவசரமாக அழைத்துவரப்பட்டார் அவர்வந்து பார்த்துவிட்டுக் கையை விரித்து விட்டார். மாப்பிள்ளை கிருஷ்ணசாமி அரணை கடித்து மரணமடைந்தான். இனி யாரால் என்ன செய்ய முடியும்?

ஒரு நொடியில் மணக்கோலம் பிணக்கோலமாக மாறிவிட்டது. மேளவாத்தியக் காரர்கள் பிரமித்துப் போயினர். தக்ஷிணை வாங்கிக் கொள்ளவந்த சாஸ்திரிகள் தர்ப்பப்புல்லைத் தேடலானுர். இதற்கு மேலதிகமாக வர்ணிப்பது சரியல்ல. கிருஷ்ணசாமியின் தகனக்கிரியைகள் சரிவர நடந்தேறின வென்பதுடன் அவனது கதையை முடித்து விட்டு, உயிரோடிருப்பவர்களின் நிலைமையை சற்று கவனிப்போம்.

ஃ ஃ ஃ

சுமார் ஏழுவயதுள்ள ஒரு பெண்ணை விதவை என்றழைக்க வாய் கூசுகிறது. அதுவும் நமது கதாநாயகி சுந்தரிக்கு இவ்வித கதி நேர்ந்ததைக்கண்டு வருந்தாமலிருக்க முடியாது. இதெல்லாம் ஜென்மாந்திரப் பாபங்கள் ஸார். நாமென்ன செய்யலாம் என்று ராமனுதய்யர் வேதாந்தம் பேசலானுர். ஆனுல் சுந்தரி சோம்பேறித்தனமாக வீட்டில் காலத்தைக் கழிப்பதையும் காண அவரது மனம் சகிக்கமுடியவில்லை. நீண்டகால ஆலோசனைக்குப்பின் அவளுக்கு நல்ல கல்வியளிப்பதென்று தீர்மானித்தார். சுந்தரியும் படிப்பில் விசேஷ சிரத்தை காட்டலானுள். ஆனுல் கிழடுகள் மட்டும் சகுனிமாமாவைப்போல், எல்லாவற்றிற்கும் முட்டுக்கட்டை போட்டுவந்தன.

"அடே! அவள் மூலநக்ஷத்திரத்துப் பெண்ணுடா. அவள் பிறந்த அன்னிக்கே அவளது தலையெழுத்தென்ன வென்பது எனக்குத் தெரியும். ஆண்மூலம் அரசாளும். பெண்மூலம் நிர்மூலம்" என்று ராமனுதய்யரின் தாயார் கூறினாள். இதை எல்லாம் கேட்டு ராமனுதய்யர் நெருப்பில் விழுந்த புழுவைப்போல துடிக்கலானார். அப்படியும் அவரது மனோ உறுதி மட்டும் பலமாயிருந்தது. ஆனால் அவரது தர்ம பத்தினியான தங்கம்மாளின் மனோபாவம் அதற்கு நேர்மாறாகவிருந்தது. அவள் கர்நாடக மனுஷியாகவுமிருந்ததால் கிழடுகள் பேச்சுக்கு மதிப்பு அதிகம் ஏற்படலாயிற்று. இதனால் அவளுக்குத் தன் வயிற்றில் பிறந்த பெண்ணிடம் அன்பில்லை என்று நேயர்கள் எண்ணிவிடக்கூடாது. அவளது மூட நம்பிக்கை அவளை ஆட்டிவைத்தது. இதனால் சதிபதிகளுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டது. அது நாளடைவில் முற்றியும் விட்டது. ராமனுதய்யருக்கு தன் சொந்தவீடு நரகம்போலாகி விட்டது. தனது மனைவி தன்னுடன் அடிக்கடி வாய்ச்சண்டை போடுவது அவருக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. அவளது மனதை மாற்ற அவர் எவ்வளவோ தடவை முயற்சித்தார். ஒன்றும் பிரயோஜனமில்லை. மனஸ்தாபம்தான் அதிகரித்தது. மனைவி பகிரங்கமாகவும் நிந்திக்கலானாள்.

ஒரு நாள் அவள் ராமனுதய்யர் வீடு திரும்பிய பொழுது வாசலில் நின்று கொண்டு பைத்தியக்காரியைப்போல் ராமனுதய்யரைத் தாறுமாறாக ஏசினது அவரைக் கதிகலங்கச் செய்தது. அந்த அவமானத்தைச் சகிக்க முடியாமல் அவர் ரயில்வே ஸ்டேஷன் பக்கம் ஓடினார். நடுவழியில் ரயில் வருவதைக் கண்டவுடன் அவருக்கு என்ன தோன்றினதோ தெரியவில்லை. ரயில் எஞ்சின் முன் திடீரென்று விழுந்தார். ரயில் டிரைவர் பிரேக் போடு முன் எஞ்சின் பூராவும் அவர் மீதேறி உடல் துண்டிக்கப் பட்டுவிட்டது. பாவம் ராமனுதய்யர்!

மெட்ரிகுலேஷன் வகுப்பில் சுந்தரி படித்துக் கொண்டிருந்த காலத்தில்தான் ராமனுதய்யர் தற்கொலை புரிந்து கொண்டார். அவள் முன்னைப்போல் பயந்த ஸ்வரூபியாக வில்லை. மனோ உறுதியுடனிருந்தாள். தனது படிப்பில் தாயாரும் பாட்டிமாரும் தலையி

டுவது அவளுக்குக் கொஞ்சமேனும் பிடிக்கவில்லை. ஆனால் ஊரில் அசிங்கமான பேச்சுகள் புற்றிலிருந்து ஈசல்கள் கிளம்புவதைப் போல் கிளம்பினதைக் கண்டு அவள் பிரமித்துப் போனாள். இவ்வளவுக்கும் காரணம் மாதவனுடன் அவள் சிறிது நெருங்கிப் பழகியதேயாகும். அம்மாதிரி பழகும்படி அவளது கல்வியறிவே செய்தது. அதற்கு அவளும் ஜவாப்தாரியல்ல; மாதவனும் ஜவாப்தாரியல்ல. ஆனால் குருட்டு நம்பிக்கையில் மூழ்கிக்கிடந்த முரட்டுக்கிழடுகள், சுந்தரியைத் தாறுமாறாக ஏசி அவளைப் பந்தியில் உட்காரவைத்துச் சோறுபோடவும் மறுத்தனர். அப்படியும் சுந்தரி பிடிவாதமாயிருந்த படியால், இனி அவளுக்குப் பணங் கொடுப்பதில்லை என்று தீர்மானித்து, தங்கம்மாளுக்கும் உத்தரவிட்டனர். தங்கம்மாளும் கைம்பெண்ணாகி விட்டபடியால், பாட்டிகள் பேச்சுக்கு எதிர்ப்பு என்பது ஏற்பட இடமில்லாமலே போய்விட்டது.

சுந்தரிக்கும் மாதவனுக்கு மிடையே சாதாரணமாக ஏற்பட்ட சிநேகம், அன்பாகமாறித் துரிதமாகக் காதல் உருவத்தையும் கொண்டுவிட்டது. மாதவன் சாதாரணமானவனல்ல; உயர்ந்த கொள்கைகளையும் லக்ஷியங்களையுமுடையவன். கள்ளத்தனமாக மணம்புரிய அவன் மனம் இடந்தரவில்லை. சுந்தரியின் மனோபாவமும் அப்படியே இருந்தது. "மணம்—இன்றேல் மரணம்" என்னும் சபதம் கொண்டாள். இந்த சமயத்தில்தான் கோடை விடுமுறையும் ஆரம்பமாகி, சுந்தரி தனது தாயார் இருப்பிடத்திற்குச் சென்றாள். அந்த சமயத்தில் தங்கம்மாளுக்குக் கிழடுகளின் துர்ப்போதனையும் பலமாகவிருந்தது.

ஃ ஃ ஃ

இரண்டுமாத கோடை விடுமுறை, சுந்தரியைப் பொறுத்த வரை மௌனமாகவே கழிக்கப்பட்டது. சுந்தரி கல்லூரியில் சேர்ந்து படிக்க ஆசைகொண்டாள். தாயாரிடம் இதைப்பற்றித் தெரிவிக்க விரும்பினாள். ஆனால் தாயார் இவளைக் கண்டாலே சள்ளென்று விழுந்து வந்தபடியால் இவளுக்குப் பேச தைரியம் வரவில்லை. எத்தனை நாட்களுக்குத்தான் அவள் பொறுமையுடனிருப்பாள்? ஒருநாள் தாயாரிடம் தலைகுனிந்த வண்ணம் சென்று

"கல்லூரிக்குப்போக பணம் வேண்டும்" என்று அழுத்தம் திருத்தமாகக்கேட்டாள்.

"பணமா! பொணம்தான்! போ" என்று பதில் சரேலென்று வந்தது.

சுந்தரியின் மனம் எவ்விதம் கொதித்திருக்கு மென்பதை நாம் சொல்லாமலேயே நேயர்கள் யூகித்துக் கொள்ளலாம். இருந்தாலும் அவள் தாயாரிடம் சென்று கெஞ்சிக் கேட்டுப் பார்த்தாள் பயனில்லை. பட்டினி கிடப்பதாகவும் பயமுறுத்தினாள் பயனில்லை. செத்துப்போவதாகவும் மிரட்டினாள். அப்படியும் தங்கம்மாளின் மனது மாறவில்லை. ஆனால் ஆத்திரத்துடன் "ஏழு வயசிலே முண்டையாப்போன படுபாவிக்கு படிப்பு என்னத்துக்கு? ஊரிலே போறவன் வரவனோடெல்லாம் போகத்தானே இந்த பாழாப்போன படிப்பு? குலத்தைக் கெடுக்கவந்த கோடாரிக் காம்பு—சனியன்" என்றெல்லாம் அடுக்கிக்கொண்டே போனாள்.

சுந்தரியின் மனம் புண்ணடைந்து விட்டது. இனி புண் ஆறுமென்று எண்ணவு மிடமில்லை. இரவு போஜனத்தை வெறுத்தாள். படுக்கையில் படுத்தவளுக்குத் தூக்கமும் வரவில்லை. மனதில் என்னென்னவெல்லாமோ தோன்றிமறைந்தன. மாதவனை மறக்கமுடியாமல் தவித்தாள். அவனுடன் அந்நியோந்யமாகத் தான் பழகினது தவறென்றும் எண்ணினாள். ஆனால், இனி அவனை உதறித் தள்ளுவது அவளால் முடியக்கூடிய காரியமாகத் தோன்றவில்லை. இந்த மாயப்பிரபஞ்சத்தில் இருப்பதைவிட இறப்பதே மேலென்றும் எண்ணினாள். உடனே தந்தையின் தற்கொலை ஞாபகத்திற்கு வந்தது. தன் தாயின் உபத்திரவம் தாங்காமல்தானே அவர் அவ்விதம் நடந்து கொண்டாரென்று எண்ணினாள். தாயாரைப் பிசாசு என்றும் கருதினாள். எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி மனம் நொந்துபோனாள். அப்படியே ஓய்ந்துபோய் மதிமயக்கத்தில் விழுந்துவிட்டாள். இராப்போஜனம் உட்கொள்ளவில்லை யாகையால் பலஹீனம் ஜாஸ்தியாகி அவளது மயக்கத்தை யதிகரித்தது.

விடியற்காலம் 4 மணி சுமாருக்குக் கோழி கூவியது கேட்டு சுந்தரி, தான் தூங்கிவிட்டதை உணர்ந்து சரேலென்று எழுந்து முகத்தை கழுவிக்கொண்டு படுக்கையறையிலே போய் உட்கார்ந்து கொண்டாள். மறுபடியும் அவளைப் பலவித எண்ணங்கள் வாட்டின. அதற்குள் பொழுது புலர்ந்து விட்டது. மனதை ஒருவித மாகத் திடப்படுத்திக் கொண்டு தாயாரிடம் அடக்க ஒடுக்கமாகச் சென்று பின் வருமாறு கூறினாள்:—

"அம்மா! நான் சொல்வதைச் சற்று கேட்கவேண்டும். நீ பாட்டிகளின் பேச்சைக் கேட்டு என்னை கோபிக்காதே. அப்பா செத்தபின் நீ தானே என்னைக் காப்பாற்றக் கடமைப்பட்டுள்ளாய். நீயோ சிரஞ்சீவியல்ல. எந்த நிமிஷத்தில் என்ன நேருமோ? துரதிர் ஷ்டவசமாக நீ இறப்பாயாகில் என் கதிஎன்ன? இதைப்பற்றி யோசித்துப்பார். அந்தவிதி என்னையே தாக்கி நான் முதலில் இறப் பேனேயாகில், நல்லது தான். ஆனால் யாருக்கு எப்பொழுது என்ன நேரிடுமோ இந்த மாய உலகில் ஒன்றும் நிச்சயமில்லை. இன் றைக்கிருப்பார் நாளைக்குக் காணோம். இந்த நிலைமையில் கைம் பெண்ணாகிய நான் இவ்வுலகில் தனித்துவாழ்வது முடிந்தகாரியமா? இவ்வளவு சொத்தும் சுதந்திரமு மிருந்து எனக்கு என்ன சுக முண்டு? நீங்கள் என்னை "முண்டை" என்று சொன்னாலும், என் மனதுக்கு நான் விதவையல்லவென்றே புலப்படுகிறது. என் கண வன் என்று சொல்லுகிறீர்களே அவர் முகத்தை நான் சரிவரப் பார்த்தது கூடக் கிடையாதே. அப்படிப்பார்த்திருந்தாலும் எனக்கு ஞாபகமே இல்லை. அவ்வளவு இளம் வயதில் எனக்கு நீங்கள் விவா கம் செய்ததே தப்பு. அத்துடன் இப்பொழுது நான் மறுவிவாகம் புரிந்து கொள்ள இடந்தராமல் என்னைத் திக்கற்ற முறையில் விடு வது மகா பெரிய தப்பு.

"அம்மா! உன்னை விட்டு நான் வேறு யாரிடம் போய் இதை எல்லாம் சொல்லப் போகிறேன். நான் உண்மையை ஒப்புக்கொள் கிறேன். மாதவனுடன் நான் அந்நியோந்நியமாகப் பழகிவிட் டேன். அவர் மீது எனக்கு அளவிலாக் காதல் ஏற்பட்டு விட்டது அவரின்றி நான் வாழ்வது முடியாத காரியம்."

மேற்கண்டவாறு உணர்ச்சி ததும்பும் முறையில் சுந்தரி கண்களில் நீர் ததும்ப கூறுவதைக் கேட்ட தங்கம்மாள் பிரமித்துப் போய் தூண்போல நின்ருள். முதலில் தங்கம்மாளுக்கு அனுதாபமேற்பட்டதுபோல் தெரிந்தது. ஆனுல் சுந்தரியின் வேதாந்தப் பேச்சைக் கேட்டு ஓடி வந்த ஓர் கிழடு "என்னடி—இது கலிகால மாயிருக்கு—இந்த வெள்ளேக்காரன் படிப்பால் வந்ததடி இந்த வினே. மொட்டச்சிக்குக் கல்யாணமாம்—அட தெய்வமே—" என்று தலேயை அப்படியும் இப்படியுமாக ஆட்டிக்கொண்டே கன்னத்தில் ஆள்காட்டி விரலேயும் முகவாய்க் கட்டையில் கட்டை விரலேயும் அமுக்கிய வண்ணம் கூறினுள்.

"வயசு ரொம்ப ஆகலேனுலும், வேதாந்தப் பேச்சைப் பாரு" என்று தங்கம்மாள் மனச் சலிப்புடன் கூறிக்கொண்டே உள்ளே போய்விட்டாள். சுந்தரி விடாமல் தாயாரைப் பின் தொடர்ந்து ஓடி, "அம்மா! அம்மா! வேண்டாம். நான் உனக்கு உயிரோடிருப்பது பிடிக்கவில்லேயா?" என்று கேட்டுக் கேட்டு தாயாரின் கால்களே இறுகக் கட்டிக்கொண்டாள். தங்கம்மாள் (சுந்தரியின் கைகளே விலக்கி உதறித் தள்ளிக்கொண்டே): "என்னடி இது—கொஞ்சம் இடங் கொடுத்தா(ல்) தலேக்கு மேலே ஏறப் பார்க்கிறயே—நீ எக்கேடும் கெட்டுப்போ—கலியாணம் மட்டும் பண்ணிக்கக் கூடாது. அப்புறம் இந்த வீட்டு வாசலில் கால் வைத்தாயோ என்ன நடக்கும்னு பாரு—"

இதற்குமேல் தாயாரிடம் வார்த்தை கேட்க சுந்தரிக்கு மனம் இடந்தரவில்லே. இனி உலகில் தனக்கு ஒரு ஜோலியுமில்லே என்று எண்ணினுள். தலேயில் பாராங்கல் விழுந்தது போலிருந்தது தாயாரின் பேச்சு. சிறிதுநேரம் யோசித்துப் பார்த்தாள். "சரி—ஆண்டவன் நமக்கு விட்டவழி இதுதான்" என்று மனதுக்குள்ளேயே சொல்லிக்கொண்டு நேராகத் தனது அறைக்குள் சென்ருள். கதவை மெள்ள மூடித் தாளிட்டாள். மேஜைமுன் உட்கார்ந்தாள். மீண்டும் யோசனேதான்—மாதவனே இனி எப்படிப் பார்ப்பதென்பதே அவளது மனதை வாட்டியது. மாதவனிடம் பிரமாதமாகப் பேசிவிட்டு இப்பொழுது அவன் முகத்தில் எப்படி விழிப்பது? சீ—இந்த உலக வாழ்க்கை என்று எண்ணினுள் நமது கதாநாயகி சுந்தரி.

அடுத்த நிமிஷத்தில் சுந்தரி பேனவும் கையுமாகவிருக்கக் காணப்பட்டாள். அவசரம் அவசரமாகச் சில கடிதங்களை எழுதினாள். அவைகளில் ஒன்று மாதவனுக்கு. மற்றொன்றை ஓர் உறையில்போட்டுப் போலீஸாருக்கு என்று மேல்விலாசம் எழுதி மேஜை மேல் வைத்தாள். அதன்பின் அவள் செய்ததை எழுத நமக்கே கை கூசுகிறது. அவளது கோழை மனதுக்கு அவளது உயிர் பலியிடப்பட்டது. இதைக் காணச் சகியாத ஆத்மா பறந்தோடி விட்டது.

ஃ ஃ ஃ

சுந்தரியின் தற்கொலைபற்றிய தகவலைக் கேட்டுப் போலீஸார் விரைந்து வந்து விசாரணை நடத்தினர். மேஜைமேலிருந்த கடிதமே அவர்களது கண்களுக்கு முதலில் தென்பட்டது. அதை அவசரமாகத் திறந்து பார்த்தனர். "எனது தற்கொலையானது தாய்மாருக்கு நல்ல பாடம் கற்பிக்குமாக – அத்துடன் பால்ய விவாகம் ஒழிந்து கைம்பெண்களுக்கு விமோசன மேற்பட நடத்தப்படும் இயக்கம் பலமடையுமாக. என் தியாகம்பற்றி நான் கவலைகொள்ளவில்லை — இப்படிக்கு சுந்தரி"

மேற்படி கடிதத்தைப்படித்துக் கண்ணீர் விடாதார் அந்த ஊரில் இல்லை. பெண்புத்தி பின்புத்தி என்பதற் கொப்ப தங்கம்மாளுக்கு அதன் பின்புதான் ஞானோதயமேற்பட்டது. இப்பொழுது அவள் விதவா விவாகம்பற்றிய பிரசாரத்தில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறாள் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை.

---

# மறுமணத்தின் அவசியம்



M. சின்னையா செட்டியார்

புருஷர்களைப்போற் பெண்களுக்கும் மறுமணம் அவசியமென்பதை எந்த வகையாலும் ஆக்ஷேபிக்க முடியாது. மனுஷிய தர்மமும் அதுவே யென்பதிலும் சந்தேகமில்லை. ஆயினும் அந்தப்பழக்க வழக்கமில்லாத சமூகங்களில் இன்னும் சரளமாக நடைபெறவில்லை! இந்தியமக்களிற் பல சமூகங்கள் அந்த ஏற்பாட்டை பழக்கவழக்கத்தில் வைத்துக் கொண்டிருக்கின்றன. அதனால் அந்த சமூகங்கள் கேடடையவில்லை. கேடடைய வில்லையென்பது

மட்டுமல்ல அதைப்பற்றிய கவலையும் துன்பமும் அவர்களுக்கில்லை. மனமிருந்தும் கட்டுப்பாட்டுக்கு அஞ்சி சில சமூகங்கள் முன்வராமலிருக்கிறன. அத்தகைய கட்டுப்பாடுகள் ஒருகாலத்தில் வாழ்க்கைக்கு அனுகூலமாகவும் இருந்திருக்கலாம். ஆனால் இப்போது அனுகூலமாக இல்லை. கட்டுப்பாடென்பது மனிதசமூகம் நலன் பெறுவதற்கேயன்றி அனாவசியமாக துன்பமனுபவிப்பதற் கிடமுள்ளதாக இருக்கப்படாது. துன்பத்துக் கிடமான காரியமென்று திட்டமாக அறிந்தபின் அந்தக் கட்டுப்பாட்டைப் பொருட்படுத்தலாமா? உதறித்தள்ளி விட்டு அதற்குமேற் செல்ல வேண்டியது தானே நியாயமாகும்? தங்குதடை யில்லாமலும் தயங்காமலும் அப்படி மேற்செல்லுவதற்குப் போதுமான கல்வியறிவும் திடபுத்தியும், விசால நோக்கமும் அறியாக்கும்பலை அலக்ஷியமாக மதித்தலும் அனுகூலமாக இருக்கும். அவை இல்லாத நிலைமையில் புதிய பழக்கவழக்கங்களை ஒரு சமூகத்துட் புகுத்துவது மிகவும் கஷ்டமான காரியம். கஷ்டமான காரியமெனினும் செய்து தானாக வேண்டும். அப்படிச் செய்யாதிருந்தால் மறுமண மில்லாத சமூகம் சிதறிப் போவது நிச்சயம். பிறகு எடுத்துக் கூட்டமுடியாத பெருங் கேடாகவே முடியும்.

இதை நமது சமூகமக்களும் நீண்டு யோசித்துச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தற்கால உலகநிலை யெப்படியிருக்கிறது? மனிதனை மனிதனுக்குவதற்கும் அடிமைப்புத்தியை அகற்றுவதற்கும் இடி மின்னல்குமுறல்களுடன் நெருங்கிவந்து கொண்டிருக்கிறது. ஒரு நாளைக்கு ஒருநாள் புதிய உலகமாக மாறிவருகிறது. இந்த நிலையிற் பழய கட்டுப்பாடுகள் நிலைநிற்குமா? கம்பு கொம்புகளெல்லாம் பிடுங்கப்பெற்று வெறுங் கயிறுதான் மிஞ்சும். இந்த உணர்ச்சியுண்டானாலன்றி எந்த சமூகமும் இனி நன்மையடைய முடியாது உலகின் புதிய வேகத்தில் மோதி உடைந்து உருமாறிப் பலவேறு துண்டுகளாகச் சிதறிச் சிந்திப்போக வேண்டியது தான். பழய பெருமைகளைப் பேசிக்கொண்டிருப்பதிற் பயனில்லை. ஆகவே பெண்களுக்கும் மறுமணம் செய்த லென்னும் ஏற்பாட்டை எல்லாச் சமுகங்களும் உடனே செய்து கொள்ளுதல் வேண்டும். இது சகஜமாக நடைபெற வேண்டிய ஒரு சிறந்த காரியம்.

நமது சமூகம் ஏனைய சீர் திருத்த விஷயங்களில் மிக்க ஆர்வமுள்ளதாகவும் அதிவேகமாக முன்னேறுவதாகவும் இருந்தாலும் இந்த மறுமண விஷயத்தில் மட்டும் கொஞ்சம் மந்தமாகவே இருக்கிறது. மந்தமாக இருப்பதற்குக் கட்டுப்பாடு ஒரு தடையாக இருப்பதோடு இன்னுமொரு காரணமுமுண்டு. அதாவது, மறுமணஞ் செய்து அதன் மூலம் உற்பத்தியாகும் சந்ததிகளுக்குக் கொள்வன கொடுப்பன வாகிய சம்பந்தம் இந்த சமூகத்தில் நடக்காமல் அது ஒரு மதிப்பிழந்த இள வகையாகப் பிரிந்து விடுமோ வென்னும் அச்சமும் காரணமாக இருக்கலாம். உண்மைதான். ஆனால் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து நடந்து அந்த ஏற்பாடு சகஜமாகி விட்டால் அந்தச் சிந்தனைக்கு இடமே இல்லையன்றோ! மனைவியை யிழந்து மறுமணஞ் செய்து கொண்ட புருஷர்களின் பிள்ளைகள் எப்படி மதிப்பிழந்தவர்களாகாமல் சமூக மக்களாக இருக்கிறார்களோ அதே போல் புருஷனை இழந்து மறுமணம் செய்துகொண்ட பெண்கள் பெற்ற பிள்ளைகளும் குற்றமற்றவர்களாகி சமூக மக்களாவதிற் பிசகொன்றுமில்லை. எந்த வழக்கமும் சகஜமாகிவிட்டால் ஆறுதலாகிவிடும். முதலெடுப்பில் எல்லாம் கஷ்டம்தான். புழுங்கலரிசியை விட்டுப் பச்சரிசி சமைத்துண்பதுகூட கஷ்டந்தான். கஷ்டமாயினும் துன்பம் நீங்கி இன்பமடைவதற்குற்ற காரியங்களைச் செய்துதானாக வேண்டும். ஆதலால் நமது சமூகம் மறுமண விஷயத்திற் கொஞ்சமும் தயங்க வேண்டியதே இல்லை.

சிவகுருநாதன்,
செந்தமிழ் நிலையம்.
கும்பகோணம்.

# சமூகக் கண்ணாடி

( எஸ். நீலாவதி ராமசுப்பிரமணியம் )

அன்று என்னமோ தங்கை சரசு தாங்கொணு துயரால் தத்தளித்தாள். அவளின் தத்தளிப்பு அவள் இளவயதின் எல்லையையே மீறிவிட்டது. கடுங்காற்றில் அகப்பட்ட மரக்கலம் கூட சற்று அமைந்த நிலையில் நிற்கும் ஓர் நிமிடம். ஆனால் சரசுவின் இனிய உள்ளம், இளமை உள்ளம், "இன்பச்சிகரம் எல்லார்க்கும் பொதுவே" யென்ற ஏழ்மை உள்ளம் அன்று கொந்தளித்த நிலையை எவ்விதம் எடுத்தியம்ப முடியும்? மாசற்ற அவ்விளந்தளிரின் உள்ளத்தில் அன்று பட்ட மாசு, அந்தோ அகல்வதற்கில்லையே!

ஃ ஃ ஃ

தஞ்சையில் தாமோதர முதலியார் பெரிய செல்வந்தர். நல்ல படிப்பாளி. படிப்பாளியென்றால், வெறும் புத்தகப் பூச்சியாயில்லாமல் தற்கால உலகப்போக்கை நன்கு உணர்ந்தவராய்க் காணப்பட்டார். என்னதான் கல்விச் செல்வம், பொருட் செல்வம் நிறைந்திருந்தாலும், குழந்தைச் செல்வம் இன்றேல் அழகில்லை யென்பது தானே பல்லோர் அபிப்ராயம்? எனவே அந்த வகையிலும் குறைசொல்ல முடியாத நிறையுள்ளவராயிருந்தார் தாமோதர முதலியார். லட்சுமி, சரசுவதி என்ற இரண்டு பெண்களும், கண்ணன் என்ற இரண்டுவயதே நிரம்பிய ஆண்குழந்தையும் அவருக்கு உண்டு. கொஞ்சம் நாகரீகம் தெரிந்தவரானதால் பெண்குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பினர். மூத்த பெண்ணும் பன்னிரண்டு வயதிற்குள் ஆறுவது வகுப்பின் படிப்பை முடித்துக்கொள்ள வேண்டியதாயிற்று. என்ன தான் காலப் போக்கு—நாகரீகம் தெரிந்திருந்தாலும் கையில் பணம் இருந்தாலும் தன்னளவில் காரியம் வரும்போது நடப்பது வேறுதானே? உபதேச மெல்லாம் ஊருக்குத் தானேயன்றி வீட்டுக்கல்லவே? அந்த முறையில் முதலியார் தம் மூத்த பெண்ணின் கல்வியை விரைவில் முடித்து விட்டார்.

படிப்பை நிறுத்தியாய் விட்டது. இனி நடக்க வேண்டியதென்ன? ஏழை எளியவர்களாயிருந்தால் எட்டிப்பார்ப்பார் எவரு

மிருக்க மாட்டார்கள். பசை உள்ள இடத்தின் பவிஷே அலா தியல்லவா? லட்சுமி பள்ளிக்குச் செல்வதை நிறுத்தியது தான் தாமதம். "கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு தன்னால் வரும்" என்ற பழமொழி நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்து வந்தது. திருமண விஷயத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வோர் அபிப்ராயத்து டன் மனக்கோட்டை கட்டினர். முதலியார் தன் பெருமைக்குச் சிறுமை வராத நிலையிலுள்ள வரன்களைப் புள்ளி போட்டார். லட்சுமியின் தாயாரோ, தன் உடன்பிறந்த தம்பிக்கு அருமை மகளைக் கொடுத்து வீட்டோடு மகளும் மாப்பிள்ளையுமாய் இருக்கவேண்டு மென ஆசைப்பட்டாள். லட்சுமியின் பாட்டியாரோ, "கை நிறைந்த பொன்னைவிட கண்நிறைந்த கணவனே மேல்" என்று ஒவ்வொருவர் எழிலையும் எடைபோட்டுக் கொண்டே வந்தாள். இந் நிலையில் சரசுவிற்கும், பதினைந்து ஆண்டுகள் நிரம்பி சற்று அறிவு விளக்கம் பெற்று விட்டபடியால் மண மென்பது தன்மன திற்கேற்ற மணாளனை அடைவதே என்று அவளும் ஆகாத திட் டம் ஒன்றைப் போட்டுவைத்தாள். கலியாண விஷயத்தில் தன் தாயாரோடு பெரிதும் முரண்பட்டாள் லட்சுமி. தன் தாய்மாமன் கல்விக்கலத்தில் கோழி முட்டை வாங்குவது அவளுக்கு நன்றாய்த் தெரியும். பிற வகையிலும் கவர்ச்சிக்குரியவ னல்ல. தற்கால நாக ரீக(?) பீடி, சிகரெட், இவைகளில் மட்டும் யாதொரு குறைவு மில்லை.

லட்சுமி மிக நல்ல பெண். புத்திசாலி. எதையும் அறிவுக் கண் கொண்டு பார்ப்பாள். அன்பின் அவதாரமாயிருந்தாள். ஒரு வீட் டில் நாலு குழந்தைகள் இருந்தால் நாளொன்றிற்கு நானூறு சண் டைகள் வரும். "அக்காளாயிருந்தாலும் சக்களத்தி; அண்ணனா யிருந்தாலும் பங்காளி" என்பது அநுபவப் பழமொழியன்றோ? அப் பழமொழி நம் சரசு, லட்சுமி இவர்களிடத்தில் மூச்சுவிடவும் வெட்கப்பட்டு மூலையில் பதுங்கியது. ஆருயிர்க்காதலர்களே போல் லட்சுமியும் சரசுவும் இருந்து வந்தது அவ்வூரார் அனைவ ருக்கும் அதி ஆச்சரியத்தைத் தந்தது. சில கிழங்கள் வேடிக்கையாக "அக்காளைக் கட்டிக் கொடுத்தால், தங்கையும் தானே வாக்கப் பட்டு விடுவாள்" போலிருக்கிறது என்று கூறினார்களென்றால்

அப்புறம் பார்த்துக்கொள்ள வேண்டியதுதானே அவர்களின் அந்நியோந்நியத்தை.

லட்சுமிக்குப் பல வரன்கள் பார்க்கப்பட்டது. தாயாரின் ஆசை லட்சுமிக்கு விருப்பமில்லாதுபோகவே தந்தையின் விருப்பத்திற்குத் தள்ளப்பட்டது. முடிவில் மன்னார்குடியில் மணம் நிச்சயம் செய்யப்பட்டது. மாப்பிள்ளை மாணிக்கம். தன் தகப்பனருக்கு ஒரே பிள்ளை. சிரிய நோக்குள்ளவன். பத்தாவது படித்து முடித்துவிட்டான். மாணிக்கத்தின் தகப்பனர் தன் ஒரே மகனுக்கு விரைவில் கல்யாணம்செய்து களிக்க வேண்டுமென பேராவல் கொண்டிருந்தார். இந்நிலையில்தான் தாமோதர முதலியாரும், நாராயணசாமி முதலியாரும், (மாப்பிள்ளையின் தந்தையார்) சம்பந்திகளானர்கள். லட்சுமியும், மாணிக்கமும், கிரக லட்சுமி நாராயணர், ஆக தீர்மானிக்கப்பட்டது.

இருவரும் செல்வச் சீமான்கள் ஆனதாலே கலியாணத்தின் சிறப்பை அதிகம் எழுதத் தேவையில்லை. சரசு தன் தமக்கையின் கல்யாணத்தால் ரொம்பவும் குதூகலமடைந்தாள். ஆனல் அக்காளை விட்டுப் பிரியமட்டும் அவள் மனம் சம்மதிக்கவில்லை. எனவே லட்சுமி மாமியார் இல்லம் ஏகும்போது சரசுவும் உடன்சென்று சிலருடைய வாக்கையும் ஒரு வகையில் நிறைவேற்றலானுள். எல்லோரும் சிறு பிள்ளையாகையால் மனதில் ஏக்கம் உண்டாகாமல் இருக்க ஏதோ ஓர் வருடம் லட்சுமியுடனிருக்கட்டும் என்று சரசுவின் ஆசையைத் தீர்த்துவைத்தார்கள். லட்சுமி, மாணிக்கம் சரசு, நாராயணசாமி முதலியார் அவரின் அருமைப்பத்தினி அமிர்தம்மாள் அனைவரும் மிக நேசபாவத்துடன் இருந்து வரலானர்கள். அமிர்தம்மாளோ தன் இருமருமக்களையும், சொந்தப் பெண்கள் போலவே கவனித்து வந்தாள்; தான் 'மாமியார்' என்ற மகா மேதாவிகள்(?) இருக்கிறார்களே சிலர் அவர்களுக்கும் அமிர்தம்மாளுக்கும் சிறிதும் சம்பந்தமில்லை. மாமியார், மருமகள், என்றால் ஒரு நாளாவது ஒரு சண்டை இருக்க வேண்டுமே? அதில்லாதது கண்டு அவ்வூர்ப் பெரியவர்களில் பலர் அடிக்கடி வயிற்றெரிச்சல் படுவதுண்டு. லட்சுமியின் வாழ்க்கையில் ஏதும் துன்பம் தெரியவில்லை. பிறந்த இடம் வேருகவும் புகுந்த இடம் வேருகவும் தோன்றவே யில்லை அவளுக்கு. மாதம் ஓர்முறை தாய்வீடு சென்று திரும்புவாள்.

அந்தோ! பெண் பிறவியின் வாழ்வுதான் என்னே! இவ்வுலகில், மனமார மாமியார் வீட்டில் வாழ்வதே அரிது. அதுவும் பறிபோகுமா? துக்கம்! துக்கம்!!

வருடம் ஒன்றரை ஓடி மறைந்தது. வாழ்வின் அரும்பு மொக்கு விட்டதோடு நில்லாமல், அழகுடன் மலர்ந்து ஆனந்தத்தைத் தரும் சமயம். ஐயோ; எழுதக் கைகூசுகிறது. நினைக்க நெஞ்சம் திடுக்கிடுகிறது. அழகின் வடிவம், அன்பின் சிகரம் இளங்கொழுந்து, இல்ல விளக்கு, லட்சுமி, தன் அழகொழிய ஆனந்தம் நொறுங்க, ஆயுள் தண்டனை அநுபவிக்க, மாணிக்கம், இம் மண்ணுலக வாழ்வை விட்டு நீங்கினுன், நள்ளிர வொன்றில் நாகந் தீண்டியதால். லட்சுமியின் வாழ்வுச் சூரியன், அந்திவானத்தில் இனி வரமாட்டேனென ஒரேயடியாக அஸ்தமித்து விட்டான்.

சம்பந்தி வீட்டார் இருவரும் சேர்ந்து, லட்சுமிக்குச் செய்ய வேண்டிய வரிசைகளை வருத்தத்துடன் செய்து முடித்துவிட்டார்கள். நல்லவேளை மாணிக்கம் சாகும் போது சரசு அங்கில்லை. தஞ்சைக்குத் தந்திவந்ததும் சரசுவிடம் விபரம் கூருமல், சரசுவை பந்துக்களிடம் விட்டுவிட்டே பெற்ருேர்கள் மன்னார்குடிக்குச்சென்றனர். லட்சுமிக்குச் செய்யவேண்டிய கொடுமைகளை யெல்லாம் செய்து முடித்ததும், தாய் தந்தையர் உடன் ஊருக்கு அழைத்துப் போவதாக சம்பந்தியாரிடம் தெரிவித்தார்கள். அவர்கள் மிகவும் துயரத்துடன் "எங்கள் துக்கம்மறைய லட்சுமி இங்கேயேயிருக்கட்டும்" என்று சொல்லி கண்ணீர் வடிக்கவே சரியென சம்மதித்து லட்சுமியின் பெற்ருேர்கள் தஞ்சைக்குத் திரும்பிவந்துவிட்டனர்.

மாதம் ஒன்று ஆயிற்று. சரசு தன் அக்காளிடம் போக வேண்டுமென பிடிவாதம் செய்தாள். தாமோதர முதலியார் தான் போய் அழைத்து வருவதாகச் சொல்லியே இன்னும் இரண்டு மாதத்தைப் போக்கினுர். அதற்கு மேல் முடியவில்லை. பின் ஓர் நாள் புறப்பட்டுச் சென்று, சம்பந்தியாரிடம் ரொம்பச் சொல்லி மறுபடியும் லட்சுமியை அவர்களிடம் கொண்டுவந்து விடுவதாகவும், சரசு ரொம்பவும் தொந்திரவு செய்வதாகவும் லட்சுமி,

இனி செல்லப் பிள்ளைபோல் இங்கும் அங்குமாகவே யிருந்து வரட்டுமென்றும், ஆறுதல் கூறி அழைத்து வந்துவிட்டார். அந்தோ! பரிதாபம்! சரசு அக்காளின் வருகையை எதிர்பார்த்த ஆவலை எந்த அளவுகோல் கொண்டு அளப்பது? நெடுநாளாகக் காணுதிருந்த அத்தான் வந்ததும், ஓடி ஒளிந்துவிட வேண்டுமென்று ஒரு சமயம் நினைப்பதும், மறு நிமிடம் "ஆ! அக்காளைப் பாராமல் விளையாட்டில் இறங்கி விடுவதோ, வாசற்படியிலேயே போய் அணைத்து ஆலிங்கனம் செய்து அழைத்துவர வேண்டாமோ? இதுவரை தான் தனிமையாயிருந்து விட்டேன். இனியும் தனிமையில் தாமதிப்பதாவது" என்றும் ஏதேதோ மனதில் திட்டம் போடுவாள். (மாணிக்கம் இறந்த சேதி இதுவரை சரசுவிற்கு தெரிவிக்காமலேயிருந்துவந்தது என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும்.) இந்நிலையில் வாசற்படியில் கார் நின்ற சப்தம் கேட்டதும் தன் திட்டமெல்லாம் பறந்தோட, மான்போல் கூவி காரண்டை சென்றுள். இருட்டு நேரமானதால் அக்காளின் கோலம், அதிகமாய்த் தெரியாவிட்டாலும், முன்பிருந்த லட்சுமிக்கும், தற்போதிருக்கும் தமக்கைக்கும் எவ்வளவு வித்தியாசம்? அதோடு அத்தானையும் காணவில்லை. சரசு, திடுக்கிட்டவளாய், அக்கா! அத்தான் எங்கே? என்று கேட்டதுதான் தாமதம்; லட்சுமி, மழையெனக் கொட்டும் கண்ணீரோடு வண்டியிலிருந்து இறங்கினுள். மின்சாரவிளக்கொளியில், லட்சுமியின் உடற்தோற்றம், பளீரெனப்பட்டது சரசுவின் கண்களிலே! "ஆ! அக்கா! நீயேன் இப்படி இருக்கிறே? உன்னை யார், இப்படிச் செய்தது?" என்று அலறினுள். சரசுவின் அலறல், வீட்டிலுள்ள அத்தனை பேரையும் கண்ணீர் வடிக்கச் செய்தது.

தங்கையின் கேள்விக்குச் லட்சுமி என்ன பதில் கூறுவாள்? விம்மினுள்; வியர்த்தாள்; நெடுமூச்செறிந்து. "என் கண்ணே! கருமணியே! என்னை யாரும் இப்படிச் செய்யவில்லை. ஜாதிமுறையும், சமூக விதியுந்தான் இக்கதிக்கு ஆளாக்கின" என்றுள். சரசு: "அக்கா! நீ கூறுவது எனக்கொன்றும் தெரியவில்லை. நல்லா தெரியும்படி சொல்ல மாட்டாயா?"

லட்சுமி:-ஐயோ! நான் எப்படிச் சொல்லட்டும்? உன் அத்தான் சமீபத்தில், இறந்து விட்டதால்....?

சரசு: என்ன? அத்தான் இறந்து விட்டார்களா? ஆ! அக்கா! அதற்காகத்தான் உன் அழகை இப்படி அழித்து விட்டார்களா? தெரிஞ்சுது; எனக்கு இப்போ நன்றாய்த் தெரிஞ்சுது. நம் சொந்தக் காரப் பெண், மீனாட்சியின் புருஷன் இறந்ததும், என்னென்னமோ வெல்லாம் செய்து உன்னைப்போலவே வைத்திருந்தார்கள். அக்கா! மீனாட்சியை என்னபாடு படுத்தினார்கள் தெரியுமா? உன்னையும் அப் படித்தானே செய்திருப்பார்கள். ஐயோ! கொஞ்ச நாள் முன் அம்மா எல்லோரும், யாரோ இறந்து விட்டதாகவும் நாகபட்ட ணம் போறதாகவும் என்னிடம் பொய் சொல்லிவிட்டு வந்தார் களே, அப்பதான் அத்தான் இறந்திருக்க வேண்டும். நான் வந் திருந்தால் உன்னை இம்மாதிரி யெல்லாம் கஷ்டப்படுத்த விட்டிருக்க மாட்டேன். என் ஆசை அக்கா! உன் அழகு ஜாக்கெட் எங்கே? அருமைப் பின்னல் எங்கே? நாள் தவறினாலும் பூ தவறாத உன் தலையைப்பார்க்க பாவமாகுதே? இனி நீ எப்போதும் இப்படித்தான் இருப்பியோ. ஐயோ! இந்தப் பாவி அத்தான் ஏன் செத்தார்? நாம் மூன்றுபேரும் ஒன்றாய்ச் செத்துவிடாமல் போனோமே?
என்று புலம்பியவண்ணமே தரையில், சாய்ந்துவிட்டாள்.

லட்சுமி வந்ததும், தெருவில் எல்லோரும் வந்து கூடினார்கள். சரசுவின் நடத்தையைக் கண்டு கற்சிலைகள் போல் நின்று இறுதி யில் கண்ணீர் வடித்து வீடு சென்றார்கள்.

நாட்கள் பல சென்றன. மாதங்கள் பல மறைந்தன. லட்சுமி யும், சரசுவும் வர வர பொலிவிழந்து வாடினார்கள்.

சரசுவிற்கு லட்சுமியிட மிருந்த அன்பு முன்னைவிடப் பன் மடங்கு அதிகரித்தது. லட்சுமி எதைச் சாப்பிடுவாளோ, அதுதான் சரசுவிற்கும். லட்சுமி குளித்தால் சரசுவும் குளிப்பாள். அதிகம் வளர்ப்பானேன்? அக்காளை என்று கண்டாளோ அன் றிலிருந்து, சரசுவும், லட்சுமியின் கோலத்தைக் கைக்கொண்டு விட்டாள். ஊரார், எவ்வளவோ உபதேசித்தார்கள் ஒன்றும் பலிக் கவில்லை. வீட்டிலுள்ள பாட்டியோ, அவள் தலைவிதியை அவள்

அநுபவித்தால் இவளுக்கென்ன வந்தது? கலியாணத்தில் பெண்ணுக்குத் தங்கை தோழிப் பெண்ணாயிருக்க பார்த்திருக்கிறோம். இதென்ன கர்மம்! இதற்குத் துணை போவாளா எவளாவது? குட்டி ரொம்பல்ல உருகுகிறாள். காலங்கெட்ட கேடா இது? என்று முணங்கிக்கொண்டே யிருந்தாள். சரசுவும் ஐந்தாவது வரை வாசித்து விட்டாள். தமிழ் நன்றாய் எழுதப்படிக்க தெரியும். பத்திரிகை வாசிப்பதில் ரொம்பப் பிரியம்.

ஓர் நாள் லட்சுமிக்கும் சரசுவிற்கும் அடியில் வருமாறு சம்பாஷணை நடந்தது:

சரசு:-அக்கா! உன்னை முன்பிருந்தது போல் பார்க்கவேண்டுமென்று எனக்கு ரொம்ப ஆசையாயிருக்கிறது. நீ அதுபோல் இருக்கக் கூடாதா? அத்தான் இறந்தும் அதிக நாளாகி விட்டதே?

லட்சுமி:-என் உயிர்க்கினிய சரசு! உனக்கென்ன தெரிகின்றது இவ்வஞ்சக உலகத்தின் செயல்கள்! நீ அறியாப்பிள்ளை; இனி நான் சாகும்வரை ஈடேற மார்க்கமில்லை யம்மா? அறியாமல் நீயும் என்னோடு என் நிலையை அநுசரிப்பது எனக்கு சொல்லொணா துக்கத்தைத் தருகிறது. என் கண்ணே! உன்னாலேயே நான் ஓரளவு சாந்தியுடனிருக்கின்றேன். உனக்கும் வயது பன்னிரெண்டு ஆகி விட்டது. என்னோடு சேராமல், இல்லை? இப்பாவியைப் போலில்லாமல் நன்றாய் உண்டுடுத்தி சந்தோஷமாயிரு அன்பே!

சரசு:- அக்கா! என் அருமை அக்கா! என்ன வார்த்தை சொன்னாய்? நீ, மட்டும் பஞ்சைக்கோலத்தோ டிருப்பது, நான் ராஜாத்தியாவதோ? என் உயிர் போனாலும் அதற்கு நான் சம்மதிக்க மாட்டேன். உன் அகன்ற நெற்றியில் அழகுடன் திகழ்ந்த சாந்து, மறுபடி உன் நெற்றியில் அமையும் வரை, என் நெற்றியும் பாழே! தலையில் பூச்சூடுவதில் உனக்கிருந்த பிரியத்தை விடவா எனக்கு அதிகம்? ஐயோ! வித விதமாகப் பூ கோக்கும் உன் கைகள் எப்படித்தான் சோர்ந்ததோ? அந்திப் பொழுதிலே அரும் பூங்காவனத்திலே ஆயிரக்கணக்கான பூக்களிடையே நீயும் ஒரு அழகுப் புஷ்பமாய், என் ஆசைப் புஷ்பமாய், புஷ்பித்திருக்கும் காட்சியை இனி என்று காணப்போகின்றேன்? என்று நீ பொலிவிழந்தனையோ, அன்றே நம் பூந்தோட்டத்தின் பொலிவும், எங்

கோ புதைந்து விட்டதே? உன் வாடை படா மலர்கள் வாடி விட்டனவே? உன் கடைக்கண் பார்வையும் காணுத புஷ்பங்கள் கருகியே விட்டன. அக்கா! நிச்சயமாய்ச் சொல்கிறேன்; சத்தியமாய்ச் சொல்கிறேன்; 'துரியோதனனின் இரத்தத்தை எடுத்துத் தலையில் தடவி அவன் எலும்பே சீவும் சீப்பாகக் கொண்டு வாரி முடிப்பதற் கிடையில், தலையில் கைவைக்க மாட்டேன்' என்று துரௌபதை வைத்த சபதம் போல் வைக்கிறேன். உன்வருத்தம் மாய்ந்து, வஞ்சகர் தம் விதிகள் நொறுங்கி உன் வாழ்க்கை என்று மலர்கின்றதோ அன்றே நானும் மலர்வேன். அதற்கிடையில் இல்லை.

லட்சுமி (தேம்பியழுத வண்ணம்):-என் அருமைத் தங்காய்! நீ என்ன? ஏதேதோ பிதற்றுகிறாய்; என் வாழ்வாவது மலர்வதாவது? எனக்கு வாழ்க்கை யென்ற ஒன்று இருந்தாலன்றோ மலரப் போகின்றது? என் வாழ்வுதான் பறிமுதல் ஆகி பலமாதங்கள் ஆகிவிட்டதே?

சரசு:- அக்கா! உனக்குத் தான் ஒன்றும் தெரியவில்லை. நம் (பெரியப்பா மகன்) அண்ணன், அண்ணியிறந்ததும் மறுபடி கலியாணம் செய்து கொண்டு நன்றாயிருக்கிறார்களே! என் இன்னும் அநேகரை (ஆடவர்களை)ப் பாரேன். பெண்டாட்டி யிறந்ததும் வேறு கலியாணம் பண்ணி விட்டுத்தானே மறுகாரியம் பார்க்கிறார்கள். அந்தமாதிரி உனக்கும்........

லட்சுமி:- சரசு! என்மீதுள்ள அன்பினால் நீ பேசுவது உனக்கே தெரியவில்லை. இனிமேல் இப்படி யெல்லாம் பேசாதே. அம்மா, அப்பா, இவர்கள் காதில் விழுந்தால் பெரும் கேடாக முடியும். நீ சொல்வது ஏதாவது நடக்கக் கூடிய காரியமா என்ன? குழந்தைப் பருவத்தில் வேடிக்கையாக வீடு கட்டி விளையாடுவதாவது, பின் உண்மையாய் நடக்கிறது. இச்செய்தி வேடிக்கையாய்க்கூட பேச வழியில்லையே? உன் அத்தான் இறந்ததே என்னால் என்று என்னைப்பழித்து வரும் உலகம் இச்செய்தியை யறிந்தால் என்கதி என்னாகும்? வேண்டாம். இப்பேச்செல்லாம் இன்றோடு மறந்து போகட்டும்.

சரசு:- அக்கா! நீ என்ன ரொம்ப பயப்படுகிறாய்? நேற்று முன்தினம் பத்திரிகையில் ஓர் செய்தி வெளிவந்தது. சேலத்திலே

ஓர் சிறு பெண்ணும்; உன்னைப்போல் பலநாள் கஷ்டப்பட்டு கடைசியில், பல பெரியோர்கள் ஆதரவால் அறிஞர்கள் முன்னிலையில் மறுமணம் சிறப்பாக நடைபெற்றதாம். தவிர அநேக கல்யாணங்கள் நடந்தும் விட்டதாம். நம் அப்பா பத்திரிகை தினமும் படித்து வருகிறாரே! நீ பேசாமல் இரு. நான் ஏற்பாடு செய்கிறேன்.

லட்சுமி:- அருமைச் சரசு! என்ன நீ இப்படி துணிந்துவிட்டாய். சரி நாம் பேச்சு ஆரம்பித்து வெகு நேரம் ஆகிவிட்டது. யாராவது கேட்கப் போகிறார்கள் வா! போகலாம்.

லட்சுமியோடு, சரசு இருக்கும் நிலை பெற்றோர்களுக்கும், மற்றவர்களுக்கும் சற்றும் பிடிக்கவில்லை. சரசு தன் பிடியினின்றும் சிறிதும் பிறழவில்லை. இவ்வாறு சிலநாள் சென்றது.

ஓர் நாள் மாலை சரசு, லட்சுமியிடம், நெருங்கி, தலையைத் தடவிக்கொண்டே, 'அக்கா! பட்டுப்போன்றிருந்த உன் முடி இப்போதென்ன கோரைபோ லாகிவிட்டது. ஐயோ! எவ்வளவு மாறுதல்! உன் தலை மயிரைப் பின்னிப் பார்க்க வேண்டுமென எனக்கு ரொம்பவும் ஆவலாயிருக்கிறது. இப்போது இங்கு யாரும் வரமாட்டார்கள். பாட்டியும் அம்மாவும் கோவிலுக்குப் போய்விட்டார்கள்; கொஞ்சம் பின்னிப் பார்க்கட்டுமா?" என்றாள்.

லட்சுமி:- (மனம் பதறி), கண்ணே! எனக்கிருக்கும் வேதனை போதாதா? தகாத காரியத்திற்குத் தலைப்பட்டால் விபரீதமாக வன்றோ முடியும்! உன் ஆசையெல்லாம் என்னை அலங்கரிப்பதில் தானா இருக்கவேண்டும்? நீ நன்றாயிருப்பதே நான் வேண்டுவதெல்லாம். என்னைப்பற்றிய உன் ஆகாத எண்ணங்களையெல்லாம் அறவே விட்டுவிடு.

சரசு:- 'இல்லை அக்கா! தயவு செய்து சும்மா இரு. நான் இப்போது ஒன்றும் செய்யவில்லை. வீட்டில் யாருமில்லை. பின்னிவிட்டு உடனே அவிழ்த்துவிடுகிறேன்' என்று குழந்தை மனத்தால் கெஞ்சியும், அதிவாஞ்சையால் கண்ணீர் பெருகவும் கூறித் தலையைப்பின்னிவிட்டு லட்சுமிக்குத் தெரியாமல் தான் வைத்திருந்த ரோஜா புஷ்பத்தை தலையில் வைத்ததுதான் தாமதம், தாயாரும்

பாட்டியும் அன்று விரைவில் வீடு திரும்பிவிட, எங்கு இருவரையும் காணேம் என்று தேடியவண்ணம், இவர்கள் இருக்கும் அறைக்கு வந்துவிட்டனர்.

லட்சுமியும் சரசுவும் இருந்த நிலை அவர்களுக்குத் தூக்கி வாரிப்போட்டது. நெஞ்சம் துடித்த வேகம் சொல்லி முடியாது.

சரசு பாவம்! ரொம்பவும் மனம் குழம்பிவிட்டாள். இனி என்ன விபரீதம் நேரிடுமோ என திக்பிரமையுடன் எழுந்தாள்.

லட்சுமி கண்ணீர் சொரிந்து தரையை நோக்கியவண்ணமிருந்தாள். பாட்டி பதறிய உடலுடன், ஆவேசம் வந்தவள் போல், "ஏண்டி சண்டாளி! செய்த பாவம் தொலையாமல்தான் அநுபவிக்கிருயே! இன்னும் ஏன் பாவ மூட்டையைச் சுமக்கிருய்? நீ வாங்கி வந்த வரத்திற்கு பூ ஒரு கேடா? பின்னலொரு பவிஷா? என்ன அழுத்தமடி உனக்கு? உன் நெஞ்சைச் சுட்டால் என்ன? உன் கர்மம் நீ அனுபவிப்பதுடனில்லாமல் அந்த ஒரு பிள்ளையையும் உருட்டிவிட்டாயே! உன் பாவந்தானே அவனைச் சூழ்ந்தது! புருஷனைத் தூக்கித் தின்றது மல்லாமல், பாவி பூவும் சூடுகிருளே? மன்னவனை அனுப்பிவிட்டு மலர்சூட மனமும் வந்ததே இம்மாபாவிக்கு!" என்று கிட்டநெருங்கி தலையில் இருந்த பூவை, வெடுக்கெனப் பிடுங்கியெறிந்து பின்னலைப் பிடித்து இழுத்து தாண்டவமாடி, சரசுவிடம் திரும்பி, "இவளொரு கூட்டுக்கொள்ளைக்காரிபோல முழிப்பதைப் பாரு; அக்காளோடு உடன்கட்டை யேறுவாள் போலிருக்கிறது. பூ வைக்கிருளாம் பூ! என்ன எண்ணமடி உனக்கு! நல்ல நாசகாலிகள் வந்து சேர்ந்தார்கள் நமக்கு!" என்றவாறே சரசுவின் தலையில் இரண்டு குட்டு குட்டி "போடி அப்புறம்; அவளோடு நெருங்கு; உன்னைச் சொல்கிறேன். ஏதோ சிறு பிள்ளையென பாவ புண்ணியம் பார்த்ததற்கு சரியான கொள்ளி வைக்கிருய்!" என்று முடித்தாள். லட்சுமியின் தாயாரோ, கனவு உலகத்தில் சஞ்சரிப்பவள்போல் சுவாதீனமிழந்து நெடு நேரம் நின்று, பின் ஒன்றும் சொல்லத் தோன்ருதவளாய் கண்ணீர் வடித்த வண்ணம் "என் வயறு செய்த பாவம், இப்படிப்பிள்ளைகளைப் பெற்றது. ஊரார் அறிந்தால் எவ்வளவு மானக்கேடு? ஏழூரும் புகழ்பெற்ற நம் குடும்பத்திற்கு என்ன இழுக்கு

வர நேர்ந்தது இப்பொழும் பிள்ளைகளால். இவள்போய் அந்த மகராஜன் இருக்கக்கூடாதா? இவளுக்கும் ஆயுசு வளர்கின்றதே" எனக்கூறிக் கொண்டே அவ்விடத்தை விட்டு அகன்றுள்.

அன்று என்னமோ தங்கை சரசு தாங்கொணு துயரால் தத்தளித்தாள். அவளின் தத்தளிப்பு அவள் இளவயதின் எல்லையையே மீறிவிட்டது............ இரவெல்லாம் அவள் வடித்த கண்ணீருக்கு எல்லையேயில்லை.

இரண்டொரு நாளில் முதலியாரின் காதிலும் இச்செய்திகள் விழுந்தன. குழந்தைகளைப் பார்த்துப் பரிதாபப்படுவார் ஒரு சமயம்; பாம்பெனச் சீறுவார் மறு சமயம்.

லட்சுமியும், சரசுவும் இப்போது, இரு விதவைச் சகோதரிகளாகவே காணப்படுகின்றனர். இருவர் முகத்திலும் அருள் இல்லை. அன்பின் ஒளி இல்லை. உள்நோய் செல்லரித்தாற் போல் உடலை உருக்கி வருகிறது. சரசுவைப் பார்க்க வருவோர், அவளுக்கேதோ வியாதியென நினைத்து வேறு பெண்களை நாடுகின்றனர். சரசுவின் சபதம் நிறைவேறுமா?

---


## டாக்டர். வி. எஸ். எஸ். மணி

(எல். எம். எஸ். எச்.) அவர்கள் தயாரித்த

## — வா னி ஷ் —

இது படை, புழுக்கடி, கக்கூஸ்பத்து, கிரந்திப்புண், தீப்பட்ட புண், உதடு வெடிப்பு, முகப்பரு, வேனல் கட்டி, கரப்பான், சொறி சிரங்கு, பாதம் உள்ளங்கைகளில் வெடிப்பு, தோல் உரிந்து போதல் மற்றும் எல்லாவித ஸர்ம நோய்களுக்கும் மிகச் சிறந்த ஔஷதம்.

இரண்டே நாட்களில் குணத்தைக் கொடுக்கும். நறுமணம் உடையது. வேஷ்டியில் கறை பிடியாது. பாஷாணம் கலவாதது. சிறு குழந்தைமுதல் வயோதிகர்கள் வரை உபயோகிக்கலாம்.

புட்டி 1-க்கு 4-அணு. (தபால் செலவு வேறு)

ஸாம்பிள் பாட்டிலுக்கு 6 ஒரு அணு ஸ்டாம்புகள் அனுப்பவும்.

ஏஜெண்டுகள்:— டி. எம். ஹால்—காரைக்குடி.
வி. வி. அண் கோ—சிவகெங்கை.
மனேகரன் ஸ்டோர்ஸ்—காரைக்குடி
நவமணி ஸ்டோர்ஸ்—புதுவயல்.

# மாதர் மறுமண சகாய சங்கம்
## காரைக்குடி.

ஈசுவர—வெகுதான்ய

## ஐந்தாவதாண்டு அறிக்கை

இச்சங்கம் ஸ்ரீமுக ஆவணி 28வ காரைக்குடியில் ஆரம்பிக்கப்பட்டது. பால்யவயதிலேயே விவாகம் செய்யப்பட்டு ஒரு பயனுமறியாமல் விதவைக் கொடுமைக்கிரையாகித் தவிக்கும் பெண்கள் நம் நாட்டில் பெருகிவருகின்றனர். இக்கொடுமைக்கு விமோசனம் தேடுவதற்குப் பெரியார் பலர் வழிகோலி யிருக்கின்றனர்.

பூலோகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலும் வசிக்கும் மக்கள் சுமார் 200 கோடியாவர். இவர்களுள் கட்டாய விதவைக்கோலம் ஏற்படுத்தும் வழக்கத்தை நமது ஹிந்து மக்கள் தாம் கொண்டிருக்கின்றனர். நமது இந்திய நாட்டில் உள்ள மொத்தம் ஜனத்தொகை சுமார் 35½ கோடியாகும். இவர்களுள் மகமதியர் கிறிஸ்துவர் முதலிய மற்ற மதத்தினரை நீக்கிப் பார்க்கும்போது ஹிந்துக்களின் தொகை சுமார் 24 கோடி. இதில் தாழ்த்தப்பட்டவர்களும், பிற பல வகுப்பாரும் புருஷனை இழந்த பெண்களை விதவைக் கோலத்துக்குட் படுத்துவதில்லை. அவர்களையும் நீக்கிப்பார்த்தால் கட்டாய விதவைகளை உண்டாக்கும் வழக்கமுள்ள உயர்ஜாதி ஹிந்துக்களின் தொகை 15 கோடிதானிருக்கக்கூடும். இவர்களுள் சுமார் 7½ கோடி ஆண் மக்களை நீக்கினல் பெண்மக்கள் தொகை 7½ கோடியென்று மதிப்பிடலாம். இவர்களுள் இரண்டு கோடிப் பேர் விதவைகளாக இருக்கின்றன ரென்று இந்திய அரசாங்கத்தின் 1931 ஷ ஜன கணிதம் கூறுகிறது. இதைப் பார்க்கும்போது தேசப் பற்றும், ஒழுக்கமும் உடையவர்களது மனம் பதறுமென்று கூற வேண்டுமா? உலகிலுள்ள 200 கோடி ஜனங்களுள் 15 கோடி உயர் ஜாதி ஹிந்துக்கள் மட்டும் இந்தக் கட்டாய விதவைக் கொடுமை வழக்கத்தை வைத்து வளர்த்து வருகின்றனர். பாக்கியுள்ள 185

கோடி மக்கள் கட்டாய விதவைத் துயரத்தைக் கையாளவில்லை யென்பது கவனிக்கத்தக்கது.

## பால்ய விதவைகளின் நிலைமை

ஹிந்துக்களிடையில் இருக்கும் பால்ய விதவைகளைப் பற்றிய விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| 1 வயதுக்குட்பட்ட விதவை | 1,515 |
| 1 வயதுக்கு மேல் 2-வயது வரை | 1,785 |
| 2 ,, 3 ,, | 3,485 |
| 3 ,, 4 ,, | 9,076 |
| 4 ,, 5 ,, | 15,019 |
| 5 ,, 10 ,, | 1,05,482 |
| 10 ,, 15 ,, | 1,85,339 |
| 15 வயதுக்குட்பட்ட மொத்தம் | 3,21,701 |

இதை ஊன்றி நோக்கவேண்டும். இவ்வளவு பெண்கள் பரிதாபகரமான நிலைமையில் விதவைகளாக இருந்து கண்ணீர் விட்டுப் புலம்பித் தவிக்கும் நிலையில் இருப்பது நன்மை தரத்தக்கதா வென்பது கவனிக்கத்தக்கதன்றோ? வங்காளம், பாஞ்சாலம், ஆந்திரம் ஆகிய மாகாணங்களில் விதவா விவாகத்திற்கும், விதவைகளின் பாதுகாப்பிற்கும் அதிகமான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. பிரம சமாஜமும், பல தனிச் சங்கங்களும் வங்காள மாகாணத்தில் திறம்பட வேலை செய்கின்றன. பாஞ்சாலத்தில் ஆரிய சமாஜமும், பல சங்கங்களும் இத்துறைக்கு அனுகூலம் புரிகின்றன. லாகூர் விதவா விவாக சகாய சங்கத்தார் பெரு முயற்சி செய்து விவாகங்களை நடத்தி வருகின்றனர். சென்ற 22 வருஷங்களில் 56,668 விவாகங்களை நடத்தியிருக்கின்றனர். இந்தச்சங்கமானது 1915-ம் வருஷத்திலிருந்து விதவா விவாகம் செய்து வைப்பதற்கு முற்பட்டது. அதன் அபிவிருத்தி பின்வருமாறு ஏற்பட்டுவருகிறது.

| 1915 | 1916 | 1917 | 1918 | 1919 | 1920 | 1921 | 1922 |
|---|---|---|---|---|---|---|---|
| 12 | 13 | 31 | 40 | 90 | 220 | 317 | 453 |

| 1923 | 1924 | 1925 | 1926 | 1927 | 1928 | 1929 | 1930 |
|---|---|---|---|---|---|---|---|
| 892 | 1603 | 2663 | 3172 | 4206 | 4339 | 5403 | 5029 |

| 1931 | 1932 | 1933 | 1934 | 1935 | 1936 |
|---|---|---|---|---|---|
| 5484 | 5493 | 5202 | 4580 | 3734 | 3692 |

ஷை சங்கமானது ஆரம்பகாலத்தில் எவ்வளவு சிரமத்துடன் வேலைசெய்ய முற்பட்டிருக்கிறதென்பது இந்தக் கல்யாணக் கணக்கிலிருந்து தெரியவரும். 1915-ம் வருஷத்தில் 12 கல்யாணங்களே நடைபெற முடிந்தது. இப்பொழுது வருஷமொன்றுக்கு ஆயிரக் கணக்கான கல்யாணங்கள் நடைபெறுகின்றன. இதனால் முயற்சி செய்யுமிடத்தில் அபிவிருத்தியடைகிறதென்பது விளங்குகிறது. இந்தக் கல்யாணங்களில் மாகாண வாரியாக எந்தெந்த மாகாணத்தில் எவ்வளவு விதவை மணங்கள் நடைபெற்றிருக்கின்றன வென்பதையும் அந்தந்த மாகாணத்திலுள்ள பால்ய விதவைகள் எவ்வளவென்பதையும் இதன் கீழே தருகிறோம்:

| | மாகாணங்கள் | 25 வயதுக் குட்பட்ட மொத்த விதவைகள் | 1935ல் நடந்த கல்யாணங்கள் | 1936ல் நடந்த கல்யாணங்கள் |
|---|---|---|---|---|
| 1 | பஞ்சாப் | 40,757 | 1053 | 1,076 |
| 2 | ஐக்கிய மாகாணம் | 1,92,133 | 1009 | 1,160 |
| 3 | பீகார்—ஒரிசா | 2,25,938 | 242 | 175 |
| 4 | வங்காளம்—அசாம் | 2,05,895 | 864 | 849 |
| 5 | ராஜபுதானா | 44,489 | 109 | 28 |
| 6 | பம்பாய் | 1,43,258 | 166 | 124 |
| 7 | மத்ய மாகாணம் | 67,689 | 253 | 266 |
| 8 | சென்னை | 2,39,316 | 38 | 14 |

இதிலிருந்து நமது சென்னை மாகாணம் எவ்வளவு பிற்போக்காக இருக்கிறதென்பதைப் பார்க்கலாம். விதவைகளையும் ஆண்டுதோறும் பெருக்கி வருவதுடன் கல்யாணம் செய்யவும் வழிவிடாமல் அசட்டுப் பிடிவாதத்திற்கிடமாகி நிற்கின்றது. லாகூரில் தோன்றி நடைபெற்றுவரும் ஷை விதவா விவாக சங்கத்திற்கும் அதனைச் சார்ந்துள்ள பிற ஸ்தாபனங்கட்குமாக சுமார் 46 லட்சம் ரூபாய் மூலதனமிருக்கிறது. ஒரே ஒரு கனவான் சர் கங்காராம் என்ற வள்ளல் 50 லட்சம் ரூபாயை நன்கொடை யளித்துள்ளார். நமது தமிழ் நாட்டு ஜனங்கள் இப்படிப்பட்ட சீர்திருத்தத் துறை

யில் மிகவும் பிற்போக்காக இருக்கின்றனர். இந்நிலை மாறவேண்டியது மிகவும் அவசியமாகும்.

விதவையாக இருக்கும் பெண்கள் ஆடையாபரணங்களை யணிந்து சுதந்திரமாகவும் சந்தோஷமாகவும் வாழ ஆசைப்படுகின்றனர். என்ருலும் ஜாதிக் கட்டுப்பாட்டை மீறத் துணியவில்லை. பெற்ரோர்கள் தங்கள் பெண் அனுபவிக்கும் துயரத்தைக் கண்டு வருந்தியழுகின்றனர். என்ருலும் துணிந்து கல்யாணம் செய்து கொடுக்கச் செயலற்றிருக்கின்றனர்.

## உபந்யாசங்கள்

பெற்ரோரும் மற்ரோரும் விதவையான பெண்களுக்கு மறுமணம் அவசியம் என்று உணரும்படி செய்யவும் உணர்ந்தவர்கள் உறுதிப்படவும் பிரசாரவேலை இன்றியமையாததாக இருக்கிறது. அவ்வேலை திறம்பட நடைபெற்ருல் பயன் கிடைப்பது நிச்சயம். ஊர்தோறும் உபந்யாசங்களை நடத்த ஆரம்பித்து பவஹூ ஐப்பசி மீ 17உ யன்று கண்டவராயன்பட்டியில் முதலாவது கூட்டம் நடத்தப்பட்டது. அந்த உபந்யாசக் கூட்டத்திற்கு சுமார் இருபது பேர்தான் வந்திருந்தனர். முதலாவது ஆண்டில் நான்கு ஊர்களில் நான்கு உபந்யாசக் கூட்டந்தான் நடத்த முடிந்தது. இரண்டாவது மூன்ருவது ஆண்டுகளில் ஏழு ஊர்களில் ஒன்பது கூட்டங்கள் நடைபெற்றன. கழிந்த நாலாவது ஆண்டில் 28 ஊர்களில் 29 உபந்யாசக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. எந்த ஊரிலும் கூட்டம் நடத்துவதென்பது பெரும் பிரயாசையாகவே யிருந்தது. இடம் கிடைப்பதில்லை. அபிமானமுள்ளவர்களும் வீடுவிட முற்படுவதில்லை. எதிர்ப்பதற்கு யாருமில்லாவிட்டாலும் வீடு விடுவதற்கும் உபந்யாச ஏற்பாடு செய்வதற்கும் நடுங்குகின்றனர். உபந்யாசம் புரிபவர்கூட இவ்வியக்கத்தில் கலந்து, பேசுவதில் கூடியவரை பின்னடைந்தனர். நிகழ்ந்த ஐந்தாவதாண்டில் உபந்யாசக் கூட்டங்களே நடைபெறவில்லை. கல்யாணத்தைப் பாராட்டி, கோ. அழகாபுரியிலும், ஆ. முத்துப்பட்டணத்திலும் இரு கூட்டங்கள் நடைபெற்றன. காரியதரிசியின்

உடல் நோயால் பீடிக்கப்பட்டதே பல கூட்டங்களை நடத்த முடியாமைக்குக் காரணமாகும்.

## மாஜிக் லாண்டர்ன்

படக்காட்சி மூலம் பிரசங்கம் புரியும் முறை யுவ மார்கழி ௴ 18உ புதுவயலில் நடைபெற்ற கூட்டத்தில்தான் முதலாவதாக கையாளப்பட்டது. படக்காட்சியை யொட்டியே உபந்யாசக் கூட்டம் நிகழ்கிறது. ஜனங்கள் ஏராளமாகக் கூடுகின்றனர். பெண் மக்களும் சிறுவர் சிறுமியரும் ஏராளமாக விஜயம் செய்கின்றனர்.

## துண்டுப் பிரசுரங்கள்

முதலாவதாண்டில் 20,000 பிரதிகளும் நான்காவது வருஷத்தில் 45,000 பிரதிகளும் அச்சிடப்பட்டன. நிகழ்ந்த ஆண்டில் படத்துடன் கூடிய இருவகைப் பிரசுரங்களில் 10,000 பிரதிகளும், மற்ற பிரசுரங்களில் 80,000 மும் அச்சிடப்பட்டன. இவ்வாண்டில் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் விரும்பிக் கேட்டவர்கட்கு இனமாக ஆயிரக்கணக்காக அனுப்பப்பட்டன. உபந்யாசக் கூட்டங்களிலும் உற்சவம் கும்பாபிஷேகம் முதலிய கூட்டங்களிலும் இவை வழங்கப்பட்டன.

## புத்தகங்கள்

முதலாவதாண்டில் வெளியிடப்பட்ட, "கைம்பெண்ணின் கண்ணீர்" "இரண்டு கட்டுரைகள்" என்னும் இரு புத்தகங்கள் ஒவ்வோர் அணு விலையில் விற்கப்பட்டு வருகின்றன. 'விதவைக்கு நல்வாழ்வு' என்ற அழகான கைப்புத்தகம் படித்த விதவைப் பெண்கட்கு இலவசமாக வழங்கப்படுகிறது. "மாதர் மறுமணப் பாடல் திரட்டு" என்ற புத்தகம் இவ்வாண்டில் வெளியிடப்பட்டு 0-2-0 விலையில் விற்கப்பட்டுவருகிறது.

## மாதப்பதிப்பு

எங்கும் மாதர் மறுமண இயக்கம் பரவும் பொருட்டு, "மாதர் மறுமணம்" என்ற பெயருடன் மாதாந்தப் பத்திரிகை ஒன்றை

வெளியிட விரும்பி தாது ஆவணி 26வயன்று முதல் இதழைவெளியிட்டோம். அது முதல் மாதந்தோறும் பத்திரிகை வெளியிடப்பட்டு வருகிறது. திருமதி மு. மரகதவல்லியார் ஆசிரியராக இருந்து வருகிறார்கள். அறிஞர் பலருடைய ஆதரவு கிடைத்துள்ளது. முதலாவதாண்டில் ரூபாய் 121—4—1 லாபங் கிடைத்தது. சென்ற வருஷத்தில் ரூ. 62—8—4 நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஜனங்களுடைய ஆதரவு தேவை.

## பென்சில்

"விதவை மணமே விடுதலை அளிக்கும்" என்று அச்சிடப்பட்ட அழகான மஞ்சள் வர்ணப் பென்சில் சென்னை பென்சில் தொழிற் சாலையில் செய்யப்பட்டு டஜன் ஐந்தணு விலையில் விற்கப்பட்டு வருகிறது. பல பள்ளிக்கூட ஸ்தாபகர்களும் உபாத்தியாயர்களும் வாங்கிப் பரப்புவது சந்தோஷத்திற்குரியதாகும்.

## அங்கத்தினர்கள்

முதலாவதாண்டில் 42 அங்கத்தினரும் இரண்டாவதாண்டில் 15 அங்கத்தினரும் மூன்ருவது நான்காவது ஆண்டுகளில் 50 அங்கத்தினர்களும் இருந்தனர். நிகழ்ந்த ஆண்டில் 8 அங்கத்தினர்தான் இருந்தனர். தானுக அங்கத்தினர் சேருவதென்பதில்லை. நேரில் சிபார்சு செய்தால் சிலர் சேருகின்றனர். அவர் அடுத்த ஆண்டுகளிலும் தொடர்ந்து இருந்து வருவரென்று கருதவும் இடமில்லை.

## பொருளுதவி

முதலாவது ஆண்டில் ஐவர் 95 ரூ. நன்கொடை உதவினர். குமரன் ஆபீசில் 154—14—0 கடன் பெற்று முதலாவதாண்டு முடிந்தது. இரண்டாவதாண்டில் காரியதரிசியின் மலாய் நாட்டுப் பிரயாணம் நிகழ்ந்தது. மலாய்நாட்டுச் சங்கங்கள் இதற்கு உதவி செய்ய இஷ்டப்படவில்லை. அங்கே உள்ள இளைஞர் சிலர் தெரிந்தும் மறைந்தும் சிறு சிறு தொகையாக ரூபாய் 183–4–0 நல்கினர். மூன்ருவதாண்டில் காரியதரிசியின் பர்மாப் பிரயாணம் நிகழ்ந்தது. பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தா

ரும் பல ஊர் நகரத்தார்களும் அன்பர்களுமாக ரூ. 998—0—0 நன்கொடையளித்தனர். நாலாவதாண்டில் நான்கு அன்பர்கள் ரூ. 407 நன்கொடை யளித்தனர். பிரஸ்தாப ஆண்டில் ரூ. 933—8—0 நன்கொடை கிடைத்தது. கல்யாணச் செலவும் பின் செலவும் அதிகப்பட்டதனல் குமரனுபீசிலிருந்து கடன் பெற்று சங்க நடவடிக்கையும் கல்யாணச் செலவில் பெரும் பகுதியும் நடைபெற வேண்டியதாயிற்று. இதனைக்கொண்டு சிக்கனமாகவும் கஷ்டத்துடனும் ஐந்தாண்டுகள் கடந்தன. இந்தப்பகுதியில் செல்வர்களுக்குப் பஞ்சமில்லை. அவர்கள் செலவழிக்கும் பணமும் கொஞ்சமல்ல. இவர்களுக்கிடையில் உழைத்து எல்லார் கவனத்தையும் ஈர்த்து நிற்கும் இச்சங்கத்திற்குப் பொருளுதவி செய்வோர் பலராக ஏற்படவேண்டுமென்று விரும்புகிருேம்.

## கல்யாணம்

நகரத்தார் சமூக விதவைப் பெண்ணன ஸ்ரீமதி வள்ளியம்மைக்கும் ஷை சமூக வாலிபரான ஸ்ரீமான் பழனியப்ப செட்டியாருக்கும் ஆவணிமீ 31உ அமராவதி புதூரில் விதவா விவாகம் நடைபெற்றது. மிகுந்த சிரமத்துடனும் மிகுந்த பணச்செலவுடனும் திருமணம் நடைபெற்றது. சென்னை டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் தலைமை வகித்தார்கள். ஏராளமான கனவான்களும் சீமாட்டிகளும் விஜயம் செய்து சிறப்பித்தனர். இன்னும் பலமான முயற்சிகள் செய்யப்பட்டு வருவதால் விரைவில் கல்யாணம் நடப்பதை எதிர்பார்க்கலாம்.

## வாசகசாலை

நமது சங்கத்தைச் சார்ந்து ஒரு இலவச வாசகசாலை நடத்த உத்தேசித்து இவ்வாண்டில் தொடங்கப்பெற்றது. இதனை காரைக்குடி முனிஸிபல் கமிஷனர் கார்த்திகைமீ 29உ திறந்துவைத்தார். இதற்குக் கீழ்க்கண்ட பத்திரிகைகள் வருகின்றன. இவ்வாசகசாலைக்கு 'குமரன்' ஆபிஸிலிருந்து பல பத்திரிகைகள் இலவசமாக உதவப்பெறுகின்றன. இதில் மார்கழி முதல் தேதி முதல் ஆடி மீ 32உ வரை உள்ள 8 மாதங்களில் வாசித்தவர் தொகை

10080. நிரவலில் நாளொன்றுக்கு 42 பேர் படித்துவருகின்றனர். வாசகசாலைக்கு வரும் பத்திரிகைகளின் விபரம் வருவாறு:—

## தினப்பதிப்பு

| | | | |
|---|---|---|---|
| 1. | தினமணி | சென்னை | தமிழ் |
| 2. | சுதேசமித்திரன் | ,, | ,, |
| 3. | விடுதலை | ஈரோடு | ,, |
| 4. | ஜஸ்டிஸ் | சென்னை | ஆங்கிலம் |

## வாரப்பதிப்பு

| | | | |
|---|---|---|---|
| 5. | இந்து சாதனம் | யாழ்ப்பாணம் | தமிழ் |
| 6. | தேசநேசன் | பினங்கு | ,, |
| 7. | லோகோபகாரி | சென்னை | ,, |
| 8. | நவசக்தி | ,, | ,, |
| 9. | ஆனந்தபோதினி | ,, | ,, |
| 10. | ஹநுமான் | ,, | ,, |
| 11. | ஹிந்துஸ்தான் | ,, | ,, |
| 12. | தாருல் இஸ்லாம் | ,, | ,, |
| 13. | ஜனசக்தி | ,, | ,, |
| 14. | பொது ஜனம் | ,, | ,, |
| 15. | நகர நூதன் | திருச்சி | ,, |
| 16. | சிவாஜி | ,, | ,, |
| 17. | நவ இந்தியா | திருவாரூர் | ,, |
| 18. | மதுரமித்திரன் | மதுரை | ,, |
| 19. | ஆனந்தவிகடன் | சென்னை | ,, |
| 20. | சுதேசமித்திரன் | ,, | ,, |
| 21. | ஜனமித்திரன் | புதுக்கோட்டை | ,, |
| 22. | தேச ஊழியன் | ,, | ,, |
| 23. | தனவணிகன் | ரங்கூன் | ,, |
| 24. | சுதந்திரன் | ,, | ,, |
| 25. | பர்மா நாடு | ,, | ,, |
| 26. | வீரகேசரி | கொழும்பு | ,, |
| 27. | குமரன் | காரைக்குடி | ,, |

| | | |
|---|---|---|
| 28. ஊழியன் | காரைக்குடி | தமிழ் |
| 29. செட்டிநாடு | ,, | ,, |
| 30. விஸ்வபந்து | ,, | ,, |
| 31. தெக்ஷிணபாரதி | இரணியல் | மலையாளம் |
| 32. சிலோன் டைம்ஸ் | கொழும்பு | ஆங்கிலம் |
| 33. ட்ரோஜன் ஷேர் ரிப்போர்ட் | சென்னை | ,, |

### மாதம் இருமுறை

| | | |
|---|---|---|
| 34. மணிக்கொடி | சென்னை | தமிழ் |
| 35. தாயகம் | துறையூர் | ,, |

### மாதப்பதிப்பு

| | | |
|---|---|---|
| 36. கிரக லட்சுமி | சென்னை | ,, |
| 37. மாதர் மறுமணம் | காரைக்குடி | ,, |
| 38. சித்தன் | பழனி | ,, |
| 39. செந்தமிழ்ச்செல்வி | திருநெல்வேலி | ,, |
| 40. ஜோதி | ரங்கூன் | ,, |
| 41. கல்வி | ,, | ,, |
| 42. வர்த்தக ஊழியன் | திருச்சி | ,, |
| 43. ரயில்வே டயம் டேபிள் | ,, | ,, |
| 44. விதவ பந்து | லாகூர் | ஹிந்தி |
| 45. சாந்த் | அலகபாத் | ,, |
| 46. மாடர்ன் ரெவ்யூ | கல்கத்தா | ஆங்கிலம் |
| 47. இந்தியன் பிரிண்ட் & பேப்பர் | ,, | ,, |
| 48. இராமநாதபுரம் ஜில்லா கெஜட் | மதுரை | தமிழும்-ஆங்கிலமும் |
| 49. குடிநூல் | சென்னை | தமிழ் |
| 50. ஹெல்த் | ,, | ஆங்கிலம் |

## ஈசுவர ஆவணி 1௳ முதல்
## வேகுதானிய ஆடி 32௳ வரை கணக்கு

| | | |
|---|---|---|
| முன் இருப்பு | .... | 17-14—3 |
| அங்கத்தினர் சந்தா வரவு | .... | 12—0—0 |
| நன்கொடை வரவு | .... | 933—8—0 |
| குமரன் ஆபீஸ் வரவு | .... | 1711-11—2 |
| | | 2675—1—5 |

| | | |
|---|---|---|
| அச்சுக்கூலி | .... | 9—4—0 |
| ஸ்டாம்புச் செலவு | .... | 35—5—6 |
| பிரயாணச் செலவு | .... | 12—0—0 |
| சாமான்கள் கொள்முதல் | .... | 33—8—0 |
| சில்லரைச் செலவு | .... | 9—4—3 |
| மாஜிக் லாண்டர்ன் ஸ்லைடுச் செலவு | .... | 5—8—6 |
| பென்ஸில் கொள்முதல் | .... | 43—9-10 |
| புஸ்தகம் கொள்முதல் | .... | 41—3—0 |
| துண்டுப் பிரசுரச் செலவு | .... | 45—6—0 |
| வட்டிச் செலவு | .... | 99-11—5 |
| வாசகசாலைச் செலவு | .... | 292—3—3 |
| மாதர் மறுமண பத்திரிகையில் நஷ்டம் | .... | 62—8—4 |
| வள்ளியம்மை—பழனியப்பா கலியாணச் செலவும் பின் செலவும் | .... | 1944—8—2 |
| இருப்பு (பாங்கியில்) | .... | 41—1—2 |
| | | 2675—1—5 |

## நன்கொடை அளித்த பெரியோர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீமான் நா. வ. மெ நாகப்ப செட்டியார், | காரைக்குடி | 20—0—0 |
| 2. | ,, பெ. மு. சுப்பையா செட்டியார், | ஆத்தங்குடி | 110—0—0 |
| 3. | ,, அழ. அருணசலம் செட்டியார், | ஆ. முத்துப்பட்டணம் | 44—0—0 |
| 4. | ,, ஆ. சொக்கலிங்கம் செட்டியார், | காரைக்குடி | 10—0—0 |
| 5. | ,, மெ. வ. வள்ளியப்ப செட்டியார், | காரைக்குடி | 22—8—0 |
| 6. | ,, வ. சொ. சொக்கலிங்கம் செட்டியார், | பூலாங்குறிச்சி | 150—0—0 |
| 7. | ,, சித. க. கதிரேசன் செட்டியார், | காரைக்குடி | 30—0—0 |
| 8. | ,, பி. மு. பி. சுப்பிரமணியன் செட்டியார், | கோனுபட்டு | 25—0—0 |
| 9. | ,, ராம. பெரிச்சியப்ப செட்டியார், | கோனுபட்டு | 25—0—0 |
| 10. | ,, ஆறு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியார் | காரைக்குடி | 75—0—0 |
| 11. | ,, சுப. அ. அண்ணமலை செட்டியார், | கும்பகோணம் | 50—0—0 |
| 12. | ,, மெ. மெய்யப்ப செட்டியார், | | 50—0—0 |
| 13. | ஸ்ரீமதி மு. வள்ளியம்மை ஆச்சி, | ஷண்முகநாதபுரம் | 50—0—0 |
| 14. | ஸ்ரீமான் முரு. பழ. பழனியப்ப செட்டியார், | அ. சிறுவயல் | 50—0—0 |
| 15. | ,, வி. சா. காசிச் செட்டியார், | கண்டரமாணிக்கம் | 50—0—0 |
| 16. | ,, பெ. நா. மு. முத்துப்பழனியப்ப செட்டியார், | சுங்குரும்பை | 50—0—0 |
| 17. | ,, சித. நாராயணன் செட்டியார், | ஆ. முத்துப்பட்டணம் | 25—0—0 |
| 18. | ,, மு. முத்துவீரப்ப பிள்ளை, | பளைய நெடுவயல் | 20—0—0 |
| 19. | ,, மெ. ராம. மெ. மெய்யப்ப செட்டியார், | ஜெயங்கொண்டபுரம் | 30—0—0 |
| 20. | ,, சு. மு. முரு. முருகப்ப செட்டியார், | கோனுபட்டு | 35—0—0 |
| 21. | ,, ராம. ராமசாமி செட்டியார், | கோலக்கஞ்சார் | 10—0—0 |
| 22. | ,, பி. எம். முருகையா பிள்ளை, | சிங்கப்பூர் | 1—0—0 |
| 23. | ,, எஸ். ஜி. சோமாசி பிள்ளை, | சிங்கப்பூர் | 1—0—0 |
| | | ஆக ரூ. | 933—8—0 |

## மகளிர் இல்லம்

விதவைப் பெண்களுக்கு ஆதரவு கொடுக்கும்பொருட்டு மகளிர் இல்லமானது அமராவதி புதூரில் மரகதவல்லி—முருகப்பா அவர்களால் நன்கொடை யளிக்கப்பட்ட பங்களாவில் ஏற்படுத்தப்பெற்றிருக்கிறது. இதன் ஆரம்ப விழா சென்னை யரசாங்க கோர்ட் மந்திரி கனம் கே. ராமன் மேனன் அவர்கள் தலைமையில் ஷை அரசாங்க கல்வி மந்திரி கனம் சுப்பராயன் அவர்களால் பங்குனி-மீ 28-உ நடத்தப்பெற்றது. இப்பொழுது இங்கே நான்கு பெண்கள் இருக்கின்றனர். பெண் உபாத்தியாயினி ஒருவர் இருந்து சங்கீதமும் தமிழும் போதித்து வருகின்றனர். எம்ப்ராய்டரி, தையல், கைராட்டினம் ஆகிய பயிற்சியும் அளிக்கப்படுகிறது. ஸ்ரீமதி மரகதவல்லியம்மாள் இவ்வில்லத்தின் கௌரவ சூப்ரிண்டண்டாக இருந்து நடத்தி வருகிறார்கள். இங்கு சேரும் பெண்கட்கு எவ்விதக் கட்டணமுங் கிடையாது.

## நன்றி

இந்த ஆண்டுகளில் பணம் உதவியும், உபந்யாசம் புரிந்தும் யோசனைகள் சொல்லியும், துண்டுப் பிரசுரங்களைப் பெற்று வழங்கியும், உபந்யாசம் புரிய இடமளித்தும், வந்து கேட்டும் பிறவழிகளாலும் உதவிபுரிந்த எல்லா அன்பர்கட்கும் நன்றி செலுத்துகிறோம்.

## வேண்டுகோள்

மாதர்க்கு உரிமை நல்குவதில் ஆர்வமுள்ள பெரியோர்களே! வாலிபர்களே! உதவிசெய்யுங்கள்! துணிபுகொள்ளுங்கள்! லட்சக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை வெளிவரச் செய்யுங்கள்! எண்ணற்ற உபந்யாசங்கள் புரிய ஏற்பாடு செய்யுங்கள்! புத்தகங்களும் படங்களும் வெளிவர உதவி புரியுங்கள்! விதவையாகக் கிடந்து வருந்தும் சகோதரிகளின் கண்ணீரைத் துடையுங்கள்! அவர்களுக்குக் கல்வியும் தொழிலும் நல்க முயலுங்கள்! "ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும் இன்றே செய்யவும் வேண்டும்"! நாளை நாளை என்பதில் பயனில்லை யென்பதை உணருங்கள்! ஆண்மையுடன் தொண்டாற்ற முயலுங்கள்!

சோ. முருகப்பன்,

காரியதரிசி, மாதர் மறுமண சகாய சங்கம்

# பத்திராதிபர் குறிப்புகள்.

## நமது பத்திரிகை

மாதர் மறுமணம் பத்திரிகை தொடங்கி இரண்டாண்டுகள் முடிவு பெற்றன. இந்த இரண்டாண்டுகளிலும் சீரும் சிறப்புமாக பத்திரிகை நடைபெற்று வந்திருக்கிறது. கடுமையான இயக்கத்தையே கைக்கொண்டு பழங்கொள்கையுடையவர்களோடு எதிர்த்து இரண்டாண்டுகளை வெற்றிகரமாக நீந்தி வந்திருக்கிறது. எதிரே நிற்கும் மூன்றாவதாண்டு மிகுந்த வெற்றியைத் தருமென்ற நம்பிக்கையுடன் மாதர் மறுமணம் தமது புதிய ஆண்டில் நுழைகின்றது. பொதுவாக பெண்கள் முன்னேற்றத்தை மனமாரக் கள்ளமின்றி உள்ளபடியே விரும்புபவர் மிகக்குறைவு. அப்படி விரும்புபவரிலும் விதவை மறுமணத்தை விரும்புவோர் தொகை மிகக்குறைவு. அவர்களுள்ளும் முன் வந்து முயற்சி செய்வோர்களைக் காண்பது கஷ்டமான காரியம். என்றாலும் பெண்கட்கு மறுமணம் செய்தலவசிய மென்பதை நோக்கமாகவும் பெயராகவும் கொண்டு வெளிவரும் பத்திரிகையைத் தமிழ்நாட்டில் ஆதரித்து வருகிறார்களென்பது பெரிய வெற்றிகரமான செயலென்பதில் ஐயமில்லை.

## இரண்டுதான் உண்டு

நம் நாட்டில் ஒரே கொள்கைக்காக நடத்தப்படும் பத்திரிகைகள் அருமையாகவே இருக்கின்றன. பல கொள்கைகளையும் ஒருங்கே கொண்டு வெளிவரும் பத்திரிகைகளே நம் நாட்டில் பலவாகவுள்ளன. கல்வி கைத்தொழில் வியாபாரம் மதம் அரசியல் சித்திரம் சிற்பம் பெண் விடுதலை முதலிய எல்லாவற்றையும்பற்றி நமது பத்திரிகை உழைத்துவரும் என்றுதான் ஒவ்வொரு பத்திரிகையும் தன் நோக்கத்தை வெளியிடுகிறது. நம் தேசத்திற்கு அத்தனை அபிவிருத்தியும் தேவையாக இருக்கின்றது. அவ்வளவையும் உண்டாக்கவேண்டுமென்று ஆசிரியர்கள் அளவுகடந்த ஆசை கொள்கின்றனர். வெளிநாடுகளில் இப்படிச் சில பத்திரிகைகளிருந்தாலும் பெரும்பாலாக ஒவ்வொரு விஷயத்திற்கும் தனித்தனியாகப் பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. தனித்தனியாக வெளிவரும் பத்திரிகைகளே அந்தந்த விஷயத்தில் ஆழ உழைக்கக்கூடுமென்பது நமது கருத்து. இப்படி நடப்பதில் ஆதரவு

சிறிது குறைதல் கூடுமென்பது வாஸ்தவந்தான். நமது நாட்டில் விதவா விவாகத்தை நோக்கமாகக்கொண்டு வெளிவரும் பத்திரிகைகள் இரண்டே. லாகூர் சர். கங்காராம் ட்ரஸ்ட் சங்கத்தார் "விதவபந்த்" என்று ஒரு ஹிந்தி மாதப் பத்திரிகையை நடத்துகிறார்கள். மற்றொன்று நமது மாதர் மறுமணம். "விதவபந்த்" 50 லட்சம் மூலதனமுள்ள சொசைட்டியால் நடத்தப்படுகிறது. நமது மாதர் மறுமணம் ஒரு ரூபாய் கூட மூலதனமின்றி நடைபெறுகிறது. என்றாலும் அதைக்காட்டிலும் இது ஏராளமான விஷயங்களுடன் விளங்கிப் பயனளிப்பதை எடுத்துக் கூற வேண்டியதில்லை.

## ஆதரவின் மேல் அபிவிருத்தி

நமது பத்திரிகையைப் பொதுஜனங்கள் எவ்வளவு தூரம் ஆதரிக்கிறார்களோ அவ்வளவு தூரம் அபிவிருத்தியடையுமென்பதில் ஐயமில்லை. மிகக் குறைந்த ஒரு ரூபாய் சந்தா வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு ரூபாய் கொடுக்கக்கூடிய சீர்திருத்தப் பிரியர்கள் தமிழ் நாட்டில் லட்சக்கணக்காக இருக்கின்றனர். ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுத்தால் பத்திரிகை உச்சநிலையில் நடத்தப்படுமென்று உறுதி கூறுவோம். படித்தவர்களும் கட்டுரையாளர்களும் 'மாதர் மறுமண'த்தில் மிகுந்த ஆர்வங்காட்டிவருகின்றனர். இதன் பயனாகவே இப்பத்திரிகை மிகவும் சிறப்புற்றோங்கி வருகிறது. இரண்டு வருஷ இதழ்களைப் படிப்பவர் இந்த இயக்க சம்பந்தமான சீரிய உண்மைகளை சந்தேகமில்லாதபடி அறிந்துகொள்ள முடியும். இது சம்பந்தமாக என்னென்ன சந்தேகங்கள் ஏற்படக் கூடுமோ அவ்வளவுக்கும் சமாதானம் இவ்விதழ்களில் கிடைத்தல் நிச்சயம்.

## மூன்றாம் ஆண்டு-முதல் இதழ்

ஆண்டு மலர் ஒன்று வெளியிடுவதெனக் கொண்ட உத்தேசத்தின் பலனாக மூன்றாவது ஆண்டின் முதலாவது இதழ் சிறிது அபிவிருத்தியோடு வெளியிடப்படுகிறது. இதன் ஆதரவு பலப்படுமானால் அடுத்த ஆண்டில் மிகுந்த அலங்காரத்தோடு ஆண்டு மலர்கள் வெளியிடக்கூடும். இவ்விதழுக்குப் பல பெரியோர்கள் கட்டுரைகள் நல்கியும் வாழ்த்துரைகள் தந்தும் பேருதவி புரிந்திருக்கின்றனர். அவர்களுக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.

## மணமகன் தேவை.

1. விஸ்வ பிராமண வகுப்பு. வயது சுமார் 21; சொற்பமான தமிழ்படிப்பு. விஸ்வகர்ம வகுப்பில் மாதம் 40 ரூபாய்க்குக் குறையாத வரும்படியுள்ள மணமகன் தேவை.

2. வேளாள வகுப்பு. வயது 18; தமிழ் படிப்பு. சங்கீதப்பயிற்சி, தையல், பூ வேலை, கை ராட்டின நூல் நூற்றல் முதலிய கைத் தொழில் பயிற்சி உண்டு. உயர் ஜாதி ஹிந்தி வகுப்பில் தகுந்த செல்வ நிலையுள்ள மணமகன் தேவை.

காரியதரிசி,
**மாதர் மறுமண சகாய சங்கம்,**
**காரைக்குடி.**

---

## மணமகன் தேவை.

தென்னாற்காடு ஜில்லா ரெட்டி ஜாதி. வயது 16. தமிழ்ப் படிப்பு. நிறம் சிவப்பு, 1000 ரூபாய்க்கு மேல் நிலம் உண்டு. இந்த விதவைப் பெண்ணுக்கு ரெட்டி ஜாதியில் மணமகன் தேவை. மாதம் 20 ரூபாய்க்குக் குறையாத வரும்படியுள்ளவராக இருக்க வேண்டும். மற்ற விபரங்களுக்கு எழுதவும்.

**எம். டி. வெங்கடசாமி ரெட்டி,**
மடுக்கரை, மோக்ஷகுளம் (P.O)
(Via) **வளவனூர்.**

# :: நிகழ்ச்சிகள் ::

## மாதர் மறுமணப் பிரசாரம்

ஆகஸ்டு 19உ வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு முத்துப்பட்டணம் ஸ்ரீமான் சா. மு. விஸ்வனுதன் இல்லத்தில் வித்வான் திரு அரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமையில் மாதர் மறுமணத்தின் அவசியத்தைப்பற்றி ஸ்ரீமான் சா. மு. விஸ்வநாதன், 'மாதர் மறுமணம்' ஆசிரியை ஸ்ரீமதி மு. மரகதவல்லி அம்மையார், ஸ்ரீமான் சா. கணேசன் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினுர்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் திரு சொ. முருகப்பா அவர்களால் மாஜிக் லாண்டர்ன் மூலம் படக்காட்சி காட்டப்பட்டு இரவு 8-30 மணிக்கு கூட்டம் முடிந்தது. ஏராளமான பெண்களும், நகரத்தார் பிரமுகர்களும் மற்றேரும் விஜயம் செய்திருந்தனர்.

## பால்ய விவாக மறுப்புச் சங்கம்

22-8-38உ காரைக்குடி 'ஊழியன்' ஆபீஸில் நடைபெற்ற கூட்டத்தில் சாரதா சட்டத்தை மீறுவதைத் தடுப்ப தொன்றையே நோக்கமாகக் கொண்டு "பால்ய விவாக மறுப்புச் சங்கம்" என்ற பெயருடன் ஒரு சங்கம் அமைக்கப் பெற்று நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். சாரதா சட்டத்திற்கு விரோதமாக நடைபெறும் பால்ய விவாகங்களைத் தடை செய்தலும், சாரதா சட்டத்திற்கு விரோதமாக நடைபெற்ற கல்யாணங்கள், நடந்ததற்குக் காரணமாக இருந்தவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளுதலும் இதன் நோக்கம். இச்சங்க அங்கத்தினர்கள் சாரதா சட்டத்தை மீறி நடத்தப்படும் கல்யாணங்களில் எந்த விதமான சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாது.

## பெண்களுக்குத் தனி மாகாணம்!

ஸ்திரீகளே ஆட்சிப் பொறுப்பு முழுமையும் ஏற்று நடத்தவேண்டுமென்றும், அதற்காக ஒரு தனி மாகாணத்தைப் பெண்களுக்கு ஒதுக்கிக்கொடுக்க வேண்டுமென்றும், அலஹாபாத்தில் நடைபெற்ற ஸ்திரீகள் மகாநாட்டில் தீர்மானித்திருக்கின்றனர். ஸ்திரீகளிடையே பொறுமை, அதிகார ஆசை, வகுப்பு வேற்றுமை ஆகியவை இல்லையென்றும், பாரபட்சமும், தன்னலமுமின்றி சமாதானமாக அரசியலை நடத்தவல்லவர் பெண்களே யென்றும் அம் மகாநாட்டில் வற்புறுத்தப்பட்டது.

## காரைக்குடியில் விதவா விவாகம்

காரைக்குடி மாதர் மறுமண சகாய சங்கத்தின் சார்பில் ஷை சங்கக் கட்டிடத்தில் நிகழும் ஆவணி மாதம் 5உ ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி அளவில் திரு பிச்சப்பா சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் ஒரு விதவா விவாகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஆண்களும் பெண்களும் ஏராளமாக விஜயஞ் செய்து சிறப்பித்தனர். மணமகன் திரு. பட்டுவய்யரும், மணமகள் ஸ்ரீமதி கிருஷ்ணம்மாளும் பிராமண வகுப்பைச்

சேர்ந்தவர்கள். தலைவர் தமது முகவுரையில், கணவனை இழந்த பெண்களின் துயர் களைய வேண்டியது அவசிய மென்றும், துணையிழந்தாரை மணப்பது பெரும் புண்ணியமென்றும் குறிப்பிட்டு, வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொள்ளும்படி மணமக்களைக் கேட்டுக் கொண்டார். மணமகள் ஸ்ரீமதி கிருஷ்ணம்மாள் எழுந்து, 'இன்று முதல் தோழர் பட்டுவய்யர் அவர்களை எனது வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக் கொள்கிறேன். நாங்கள் என்றும் இணைபிரியாத தோழர்களாக இருப்போம்'' என்று கூறி மணமகன் கழுத்தில் மாலையிட்டார். பின் திரு. பட்டுவய்யர் எழுந்திருந்து ஷை ஒப்பந்தத்தைப்படித்து, மணமகள் கழுத்தில் மாலை அணிவித்து திருமங்கல்யதாரணமும் செய்தார். முனிஸிபல் கவுன்ஸிலர் திரு. ஆரு. ஆ. ராம. சொக்கலிங்கம் செட்டியாரவர்கள் திருமணத்தைப்பாராட்டிப் பேசும்போது, சமூகத்தைச் சீர்திருத்திக் கொண்டால் தான் சுயராஜ்யம் விரைவில் வருமென்றும், தனவணிக சமூக முன்னேற்றத்துக்காக உழைக்க பெண்களும்இளைஞர்களும்முன்வர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். திரு. சா. மு. விஸ்வநாதன் அவர்கள் பேசும்போது, தனவணிகப்பெரியார்கள்தாங்கள்சீர்திருத்தத்துக்கு வேலைசெய்யாவிட்டாலும், சீர்திருத்தத்துக்காக உழைப்பவர்களைத்தடைசெய்யக்கூடாதென்று குறிப்பிட்டார். 'மாதர் மறுமணம்' ஆசிரியை ஸ்ரீமதி மு. மாகதவல்லி அம்மாள் அவர்கள் பேசும்போது, நகரத்தார் சமூகத்தில் விதவைப் பெண்கள் முன்வருவது கஷ்டமாக இருக்கிறதென்றும், அதற்கு


## நமது
## மாளவியாஜி!

இவர் காங்கிரஸ் வாதிகளில் ஒருவர். இவருக்கு வயது சுமார் 70. ஆனால் தற்போது மீண்டும் இளமை பெற்று விளங்குகிறார். இதற்குக் காரணம் தமிழ் வைத்திய முறையாகிய காயகல்ப சிகிச்சையைப் பெற்றதே!

நம் வாசகர்களும் அவர் போன்று அத்தகைய இளமை அழகு, இன்பம், பலம், வீர்யம், ஆரோக்கியமிவற்றை மீண்டும் பெற விரும்புவது சகஜம். ஆனால் மாளவியாஜியைப்போல் ஒவ்வொருவர்க்கும் காயகல்ப சிகிச்சை செய்துகொள்ள முடியாதென்பதை அறிந்து, அதை காயகல்ப மாத்திரை வடிவமாகச் செய்து, சொற்ப செலவில் யாவருக்கும் பயன்படுமாறு செய்திருக்கிறது. இம்மாத்திரைகள் நரம்பு, தசை, ஹிருதயம், மூளை முதலிய சரீரத்தின் சகல முக்கிய உறுப்புக்களையும் பலப்படுத்தி, இரத்தத்தை விர்த்திசெய்து, மலச்சிக்கல் அஜீர்ணம் இவற்றை நீக்கி, ஆரோக்கியம், பலம், நீண்ட ஆயுளிவற்றையளிக்கிறது.

எவ்வித பத்தியமுமில்லை. எக்காலத்திலும் உட்கொள்ளலாம்.

ரூ. 5-க்கு மருந்து ஷாப்புகளிலும் ஸ்டோர்களிலும் விற்கப்படுகிறது.

கிடைக்குமிடம்:—

**ஏ. ஆர். & சன்ஸ்,**

**காயகல்ப டிப்போ, மதுரை.**

பிராஞ்சு:—**பள்ளத்தூர்,**

(ராமநாதபுரம் ஜில்லா.)

ஆண்மக்களின் மனம் விரிவடைய வேண்டியது அவசியமென்றும், விதவைப் பெண்கள் இனி கஷ்டப்பட வேண்டியதில்லை யென்றும் இஷ்டப்படுகிற விதவைகள், சங்கத்துக்குத் தெரிவித்தால் வேண்டியதை உடனேயே செய்யத் தயாராயிருப்பதாயும் குறிப்பிட்டார். வித்வான் அரு. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் பேசும்போது, விதவைகள் துயர் களையும் தொண்டில் மாங்கல்ய ஸ்திரீகள் அதிகம்ஈடுபட்டுஉதவிபுரியவேண்டுமென்றும், விதவைப் பெண்களிருக்கு மிடஞ்சென்று, விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்த வேண்டுமென்றும் கூறினர். திரு. சுப. ஆறுமுகம் செட்டியார் அவர்கள், மங்கையர்கள் விதவைகளாக விருக்கக் கூடாதென்று புரிகிற தொண்டுக்கு எல்லோரும் உதவவேண்டு மென்று கேட்டுக்கொண்டார். தலைவர் அவர்கள் தமது முடிவுரையில், மணமக்களிருவரும் தங்கள் வாழ்க்கையைச் செம்மையாக நடத்த எல்லா நலனும்தரும்படிபிரார்த்தித்தார்.பின் திரு. சொ. முருகப்பா அவர்கள் பேசும் போது, விதவைப் பெண்கள் துணிந்து வெளிவரவேண்டுமென்றும், இஷ்டப்படுகிற விதவைகளுக்கு எப்பாடுபட்டேனும் கலியாணம் செய்துவைக்க முயன்று வருவதாயும் விதவைப் பெண்களுக்கு மணம் செய்துவிட்டுத்தான் கன்னிப் பெண்களுக்குக் கல்யாணம் செய்யவேண்டுமென்று சுவாமி சிரத்தானந்தர் சென்னைக்கு விஜயஞ் செய்தபொழுது வாலிபர்களைப் பார்த்துச் சொன்னதை ஞாபகமூட்டுவதாயும், மகளிர் இல்லத்திறப்பு விழாவுக்கு மந்திரிகள் விஜயஞ்செய்து எல்லோரும் உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் இதுவரை ஒரு காசுகூட உதவி செய்ய ஒருவரும் முன் வரவில்லையென்றும் குறிப்பிட்டு, வந்திருந்த அனைவர்க்கும் நன்றிகூற தாம்பூலம் சந்தனம் வழங்கி 11 மணிக்கு வைபவம் இனிது முடிந்தது.

## ஸிவில் விவாகமே செல்லும்

ஜர்மனியில் ஆகஸ்டு முதல்தேதியிலிருந்து புதிய விவாகச் சட்டம் அமுலுக்கு வந்திருக்கிறது. இந்தச் சட்டப்படி ஸிவில் விவாகங்களே செல்லும்; இதர விவாகங்கள் செல்லுபடியாகா. விவாக மென்பது தேச நலத்தைப் பொறுத்த விஷயமேயன்றி, தனிப்பட்டவர்களுடைய அந்தரங்க ஒப்பந்தமல்லவென்று ஜர்மன் நீதி மந்திரி தெரிவித்திருக்கிறார். ஆட்சேபகரமான விவாகங்களை ரத்து செய்ய இந்தச் சட்டப்படி பப்ளிக் பிராஸிகியூட்டருக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது.

## 100 ரூ. அபராதம்

ராஜமந்திரத்தைச் சேர்ந்த ஆறு பிராமணர்கள் சாரதா சட்டத்தை மீறியதாக கோட்டூரி பாப்பையா என்பவர் பிராது கொடுத்தார். இவர்களுள் இருவர் மணத்தை நடத்தி வைத்த புரோகிதர்களாகும். ஒருவரைத் தவிர மற்ற ஐந்து எதிரிகளும் தங்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். முதலாவது எதிரிக்கு வயது 50. விஷசுரத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்ததாகவும், கல்யாண சமயத்தில் மிகஆபத்தானநிலையிலிருந்ததாயும், தனக்கு புத்திரியின் புத்திரியான 9 வயதுச் சிறுமியைத் தவிர வேறு யாருமில்லை யென்றும், சமீ

பத்தில் 11 வயதுச் சிறுவனை ஸ்வீகாரஞ் செய்து கொண்டதாயும், சொத்து முழுமையும் தனது ஸ்வீகார புத்திரனுக்கும் பேத்திக்கும் சேர வேண்டுமேயென்ற நோக்கத்துடன் மட்டுமே இருவரது கல்யாணத்தையும் அவ்வளவு சீக்கிரமாக நடத்தி வைத்ததாயும், மற்றப்படி சட்டத்தை மீற வேண்டுமென்ற எண்ணம் கொஞ்சமும் கிடையாதென்றும் முதலாவது எதிரி சொன்னார். வழக்கை விசாரித்த ஜாயின்று மாஜிஸ்திரேட், இது ஒரு விசேஷமான வழக்கு என்றும் சந்தர்ப்பத்தை நோக்கினல், ஆபத்தான நிலையிலிருக்கும் ஒருவர் தனது சொத்துக்குப் பாதுகாப்புத் தேடுவது இயல்பே யென்றும் கூறி முதல் எதிரிக்கு 100 ரூபாய் அபராதம் அல்லது இரண்டு நாள் சிறை வாசமும், மூன்ருவது எதிரிக்கு (பெண்ணின் தந்தை) 50 ரூ அபராதமும் அல்லது ஒருநாள் சிறை வாசமும், ஐந்தாவது எதிரி (புரோகிதர்) க்கு 20 ரூபாய் அபராதமும் விதித்தார்.

## ஸ்திரீ பிரயாணிகளுக்கு வசதி

ரயில் வண்டிகளில் பிரயாணஞ் செய்யும் ஸ்திரீகளுக்கு அதிக வசதிகள் அளிக்கப்பட வேண்டுமென்று இந்திய மத்திய அஸம்பிளியில் பிரஸ்தாபிக்கப்பட்டது. வசதிகள் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாயும், ஆனல், பணக்கஷ்டமிருப்பதாயும் சர்க்கார் தரப்பில் பதிலளிக்கப்பட்டது. மூன்ருவது வகுப்புப் பிரயாணிகளில் தனியாக ஸ்திரீகளுக்குத் தங்குமிடம் ஏற்படுத்த உத்தேசமுண்டா என்று ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன் கேட்டார். இது செல்வ நிலையைப் பொறுத்தது என்று பதிலளிக்கப்பட்டது. முதல் வகுப்புப் பிரயாணிகளும் இரண்டாவது வகுப்புப் பிரயாணிகளும் தங்குவதற்கேற்பட்ட இடங்களை ஸ்திரீகளுக்காக விடக்கூடாதா என்று மேலும் அவர் கேட்ட கேள்விக்கு நோட்டீஸ் வேண்டும் என்று பதிலளிக்கப்பட்டது.

## இந்துமத சீர்திருத்தக் கழகம்

மேற்கண்ட பெயரால் சிதம்பரம் நந்தனர் மடத்தில் ஒரு கழகம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இதன் தலைமை ஸ்தாபனம் இமாலயத்தில் ரிஷிகேசத்திலுள்ள ஸ்வர்க்காசிரமத்தில் இருக்கிறது. இந்த கழகத்தின் பன்னிரு கற்பனைகளில் சமூகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், ஆத்மார்த்தத் துறையிலும், நெறி வழங்குந் துறையிலும் பெண்களுக்கு சமத்துவமுண்டு என்றும், பால்ய விவாகம் சட்டாயம் மறுக்கப்படுவதாயும், விதவா விவாகத்தை அங்கீகரிப்பதாயும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

## தேவதாசி மசோதா

தேவதாசி முறையை ஒழிப்பதற்கு சென்னை அஸம்பிளியின் அடுத்த கூட்டத்தில் ஸ்ரீமதி லட்சுமி அம்மாள் ஒரு மசோதா கொண்டுவருவார்.

## வங்காளி-ஜர்மன் கலப்புமணம்

1936ல், ரதன் பிஹாரி டட் என்ற இந்து (வங்காளி)வும், மார்கரதா ஹென் என்ற ஜர்மன் மாதும் ஸ்பெஷல் கல்யாணச் சட்டப்படி கல்கத்தாவில் ரஜிஸ்தர் கல்யாணம் செய்துகொண்டனர். மணமகன் தன்னை ஒரு இந்து என்று பதிவு

செய்துகொண்டார்; மணமகள் தனக்கு மதம் ஒன்றுமில்லையென்று சொல்லிவிட்டாள். இந்த மணம் சட்டப்படி செல்லுபடியாகாது என்று மணமகன் இப்பொழுது வழக்குத் தொடர்ந்தார். கல்கத்தா ஹைகோர்ட்டாரும் வாதி சார்பாகக் கல்யாணம் செல்லுபடியாகாதென்று தீர்ப்பளித்துவிட்டனர். குறித்த சட்டப்படி, இந்து மதத்தைச்சேர்ந்த ஒருவருக்கும் மதமொன்று மில்லையென்று சொல்லும் ஒருவருக்கும் நடக்கும் கல்யாணம் செல்லுபடியாகாதென்று அவர்கள் தீர்ப்பில் குறிப்பிட்டனர்.

## பலதார மணத்தடை சத்தியாக்கிரகம்

பலதார மணங்களைத் தடுக்க ஐக்கிய மாகாணத்தில் பெண்கள் ஒரு தொண்டர்படை தயாரிக்கப் போகிறார்களாம். சத்தியாக்கிரக முறையையே கைக்கொள்வார்கள். ஒரு மனைவியிருக்க மறுபெண் கொள்ளும் புருஷனை, மணத்தைக் கைவிடும்படி வேண்டிக்கொள்வார்கள். இசையாவிட்டால், மணப்பந்தலில் சாத்வீக மறியல் புரிவார்கள். அதுவும் வெற்றி பெறுவிட்டால், தம்பதிகளை சமூக பகிஷ்காரம் செய்யும்படி பிரசாரஞ் செய்வார்களாம்.

## கிழவர்-குமரி விவாகத்தடை

45வயதுக்கு மேற்பட்ட ஒருவர் 18 வயதுக்குக் குறைந்த ஒரு பெண்ணை மணப்பதைக் குற்றமாக்கி, தண்டனை விதிக்கும் நோக்கத்துடன் ஸ்ரீமதிலீலாவதி முன்ஷி பம்பாய் சட்டசபையில் ஒரு மசோதா கொண்டுவருகிறார். இது சட்டமானால் இணையில்லாத கல்யாணம் செய்யும், மணமகன், பெண்ணின் தந்தை, நடத்திவைக்கும் புரோகிதர், உதவி செய்வோர் ஆகிய அனைவரும் தண்டிக்கப்படுவர். குற்றவாளிகளுக்கு கூடுதல் பட்சம் ஒருவருஷச் சிறைவாசமோ ஆயிரம் ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம். பலதார மணத்தைத் தடுக்கும் மசோதா வொன்றையும் இவர் கொண்டுவருவார்.

## 3 மாதச் சிறைவாசம்

ராதா கிருஷ்ணன் என்பவர், டில்லி நகர மாஜிஸ்திரேட்டின் உத்தரவை மீறி தமது 14 வயது மகனுக்கு விவாகம் செய்து வைத்ததற்காக, அவருக்கு மூன்றுமாதச் சிறைவாசத் தண்டனை விதிக்கப்பட்டது.

## ஐந்துவயதில் கல்யாணம்

மைசூரில், லிங்கப்பா என்பவர் கௌரம்மா என்ற ஐந்து வயதுப் பெண்ணை மணஞ்செய்ததற்காக, அவருக்கும், அவரது பெற்றோருக்கும், புரோகிதருக்கும், பெண்ணின் தந்தைக்கும் தலா 25 ரூ. அபராதம் விதிக்கப்பட்டது.

## பஞ்சாபில் மாதர் முன்னேற்றம்

மாதர் முன்னேற்றத்துக்காகப் பஞ்சாப் சர்க்கார் தனியாக ஒரு திட்டம் போட்டிருக்கின்றனர். கிராமப் பக்கத்திலுள்ள பெண்களுக்கு குடும்ப நிர்வாகப் பயிற்சி அளிக்க மாகாணம் முழுமையும் ஸ்தாபனங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தைமேற்பார்வையிட்டு நடத்திவைக்க ஒரு ஸ்திரீ கிராமப் புனருத்தாரண உதவிக் கமிஷனராக நியமிக்கப்படுவார்.

# சமூக சீர்திருத்தப் புத்தகங்கள்.

"மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு சகாயம்.

## கைம்பெண்ணின் கண்ணீர்.

இது ஆசிரியர் கே. வி. எஸ். வாஸ் அவர்களால் எழுதப்பட்டு மாதர் மறுமண சகாய சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விதவைப் பெண்கள் படுந்துயரமும் அதற்குச் செய்யவேண்டிய பரிகாரமும் தெளிவு படக் கூறப்பட்டுள்ளன. விதவா விவாகம் சுருதி-யுக்தி- அனுபவபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இக்கட்டுரை முதலாவது பரிசு பெற்றதாகும். விலை அணு ஒன்று. தபாற் செலவு வேறு.

## மான நஷ்ட வழக்கு.

இது பெண்ணுக்குப் பணம் வாங்கிச் செய்ததற்காக பெண்ணின் தம்பி மைனர், மேஜரான பிறகு தன் குடும்பத்திற்கு அவமானம் வந்து விட்டதென்று கோர்ட்டில் வழக்கிட்டு நீதிபெற்றதாக எழுதப்பட்ட ஒரு சிறு நூல். கோர்ட் நடவடிக்கையும் மலைவிழுங்கி முத்தப்ப செட்டியாரின் விசாரணை விவரங்களும் தீர்ப்பும் படிப்பவர்க்கு வெகு உற்சாக மூட்டக் கூடியன. விலை அணு ஒன்று. தபாற் செலவு வேறு.

## சொர்னவல்லி.

இதில் அடுத்தாள் வேலையின் அவஸ்தை, பிரிந்த காதலர்களின் பெருந் துன்பம், தீர்த்த யாத்திரைக்குப் பெண்கள் சென்று படும்பாடு, பச்சிளம் பெண்கள் விதவையராக்கப்படும் கஷ்டங்கள் முதலிய பகுதிகளும், விதவைப் பெண் வைக்கும் ஒப்பாரியும் படிப்பவர் உள்ளத்தை உருக்கிவிடுவது திண்ணம். உபந்யாசங்களும் மேற்கோள்களும் சந்தர்ப்பத்துக்கேற்ற இனிய பாட்டுக்களும் நிறைந்து விளங்கும். எளிய அழகான நடையில் அமைந்துள்ளது. இதன் விலை ரூ. 1—0—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—12—0. தபாற் செலவு வேறு.

## அமிர்தவல்லி மாலை.

இது நகரத்தார் பெருமையையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் விளக்குகிறது. பால்யப் பெண்களை மணம் செய்வதும் அதை விதவையாக்கிக் கண்ணீர் வடிப்பதும் எவ்வளவு கொடுமை யென்பதையும், அதனாலேற்படும் இன்னல்களையும் படிப்பவர் மனத்தில் பசுமரத்து ஆணிபோல் பதியச் செய்யும்படி அமைந்துள்ளது. யாவரும் எளிதில் பாடக்கூடிய இனிமையான அம்மானைப் பாட்டில் பாடப்பட்டிருக்கிறது. விலை 0—4—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—3—0. தபாற் செலவு வேறு

**மானேஜர், மாதர் மறுமணம் ஆபீஸ், காரைக்குடி.**

REGD. NO. M. 3603.

# சிறந்த புத்தகங்கள்.

## மாதர் மறுமணப் பாடல் திரட்டு.

இது ஒரு சிறந்தபாடல் புத்தகம். இதில் 27-பாடல்கள் அடங்கியுள்ளன. இலக்கிய பாடல்களும், புதுவகையான மெட்டுப் பாடல்களும் நிறைந்திருக்கின்றன. 64-பக்கமுள்ள இப்புத்தகத்தின் விலை இரண்டணுதான். தபாற்கூலி வேறு.

## ஜீவகாருண்யத் திருக்குறள்.

"வள்ளுவர் பாட்டின் வள முரைக்கின் வாய்மடுக்கும்" என்று புகழப்படும் திருக்குறளிலிருந்து ஜீவகாருண்ய சம்பந்தமான 20 குறளைப் பொறுக்கிப் பெரிய எழுத்தில் பொழிப்புரையுடன் அச்சிடப் பட்டிருக்கிறது. பள்ளிக்கூட மாணவர் பயில்வதற்கு மிக இன்றியமையாதது. விலை அணு அரை. மொத்தமாக வாங்கினுல் விலை சகாயமாகத் தரப் படும். தபாற்கூலி வேறு.

## மாதர் மறுமணம்.

இப்பெயர் கொண்ட அழகிய புத்தகம் மகிபாலன்பட்டி திருவாளர் மு. சின்னையா செட்டியாரவர்களால் இயற்றப் பெற்றது. அழகான நடை. நகரத்தார் சமூகத்திற்கு மாதர் மறுமணம் எவ்வளவு அவசியமென்பதற்குக் காரணங்களைப் பசுமரத்தாணியெனப் பதியும்படி எழுதியிருக்கிருர்கள். உதாரணமாகக் கூறப்படும் எழு கதைகள் வியக்கத்தக்கனவாகும். அழகான புத்தகம் விலை 0—4—0 "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு 0—3—0 தபாற்சிலவு வேறு.

## காசில்லாமல் உபதேசம்.

பஞ்சாட்சர உபதேசம் செய்வதற்கு ஆடம்பரமும் அனுவசியமான தடபுடலும் வேண்டியதில்லை யென்பதற்கு வேண்டிய காரணங்கள் இதில் விளக்கப்பட்டிருக்கிறது. அதோடு தண்ணீர் மந்திரமும் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. விலை அணு ஒன்று. தபாற் கூலி வேறு.

## மாதர் மறுமணம் பென்ஸில்.

"விதவை மணமே விடுதலை அளிக்கும்" என்னும் வாக்கியம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ள அழகான பென்சில். நல்ல நிறம். சுகமாக எழுதக்கூடியது. இந்தியாவில் செய்யப் பெற்றது.

| | |
|---|---|
| விலை பென்சில் 1-க்கு | 0—0—6 |
| டஜன் 1-க்கு | 0—5—0 |
| குரோஸ் 1-க்கு | 3—6—0 |

தபாற்செலவு வேறு.

Printed and Published by S. MURUGAPPA for the Mathar Marumana Sahaya Sangam at Kumaran Power Press, Karaikudi.
Editor: M. Maragathavalli.